8837

# சயாமில் திருவெம்பாவை திருப்பாவை

தெ. பொ. மீனாட்சிசுந்தரன்

GF
Q23,T414
K1

# திருவெம்பாவை திருப்பாவை

தெ. பொ. மீனுட்சிசுந்தரன்

உரிமை :

திரு. அங்கயற்கண்ணி அம்மையாரது

விலை ரூ. 2·50

விற்பனை உரிமை :

பாரி நிலையம்

59, பிராட்வே, சென்னை—1.

கீதா பிரஸ், மலைவாசல், திருச்சி–2.


STUDIO
VENUS ARTS

உ

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி

ஜகத்குரு

# ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள்

திருவடிகள்

அன்புடன் ஏற்றருளிய

கட்டுரை மலர்

# முன்னுரை

இன்று நம் நாட்டில் எழுந்துள்ள புதிய விழிப்பின் விளக்கமாகத் திருவெம்பாவை – திருப்பாவை மாநாடு கள் ஊர்தோறும் கூடிவருவதனைக் காண்கிறோம். வைணவரும் சைவரும் வேற்றுமையின்றிச் சென்று கூடித் தமிழுக்கே சிறப்பாக ஆழ்வார்களும் நாயன் மார்களும் வளர்த்த அன்புநெறியினை வளர்க்கக் காண் கிறோம். இந்த அன்பு நெறியை வளர்ப்பதே சிறந்த தொண்டென அவர்கள் உழைப்பதையும் காண் கிறோம். அன்பு நெறியே அறிவு நெறியின் உயிர் நிலை என்பதையும் மக்கள் எங்கும் உணர்கின்றார்கள்.

இத்தனையும் ஒருவர் விளக்கிய நற்செய்தியை நாடு கேட்ட தன் பயனேயாகும். அப்பெரியார் தவத்திரு. காமகோடி பீடத் தலைவர் கடவுள் திரு. சங்கராச்சாரிய அடிகள் அவர்களேயாவர். திருவெம்பாவை – திருப் பாவை மாநாடுகள் மார்கழித் திங்களில் கூடும் நிறுவனங்களாகத் தமிழ்நாட்டில் வேரூன்றி நிலைத்து விட்டன எனலாம். கீழைக்கடல் தீவுகளிலும். நாடு களிலும் வளர்ந்த பேரிந்தியப் பண்பாட்டினை நேரிற் கண்டு மகிழும் வாய்ப்பில்லாத போதும், நூல்களின் வழியே அறிந்து மகிழ ஆவல்கொண்டவன் யான், அங்கே அடிகளார் கண்ட சொற்றொடரே வழங்கக் கண்டேன். இதனை உணர்ந்துகொள்ளும் வாய்ப்பு ஆண்டவனாலும் அறிஞர் நூல்களாலும் எனக்குக் கிட்டியது. சென்னையில் கூடிய நாலாம் தமிழ்விழா வில் இதனைக் குறிப்பிட்டேன். அடிகளார் கூறும் நற்செய்தி சயாம் வரையில் பழங்காலத்தில் பரவி யிருந்த நற்செய்தியே என்று அங்குக் குறிப்பிட்டேன். இக்குறிப்பினைச் செய்தித் தாள்கள் வழியாகக் கண்ட அடிகள் தம்முடைய விரிவுரைகளில் எடுத்துக்கூறி

என்னைப் பெருமைப்படுத்தினார்கள். அதனை ஆராய்ந்து விளக்கும் ஆராய்ச்சி நூலினையும் யான் எழுதிமுடிக்க வேண்டுமென்றும் என்னை வாழ்த்தியருளினார்கள்.

இதனை நான் மறந்தே போயினேன். இருளில் சிக்கிய எனது நிலை இது. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் நான் தொண்டாற்ற வந்தபின் இந்த ஆராய்ச்சியின் சிறப்பினையும் இதனை என்வழியே செய்து முடித்து நூலாக வெளியிடவேண்டுமென்ற வேண்டுகோளினையும் வற்புறுத்திப் பல்கலைக்கழகத் துணைவேந்தருக்கு எழுதியிருந்தார்கள். இதனையும் மறந்தேன். பின்னர், நினைவு வந்தது. என் அறுபத்தோராம் ஆண்டின் பிறப்பு மலராக அடிகளார் திருவடிகளில சூட்ட நினைதது இதனை விரைந்து எழுதினேன். இதன்பயனாக இந்த நூல மிக விரைவில் வெளிவருகின்றது. மேலும் காலம் தாழ்க்க அஞ்சினேன். குற்றம் உளவேல் உலகம் பொறுக்க.

அண்ணாமலைநகர்,
6—1—1961.

**தெ. பொ. மீனாட்சிசுந்தரன்**

# பொருளடக்கம்


| எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | ஊஞ்சல் திருவிழா .... | 1 |
| 2. | கோயில் வழிபாடு .... | 15 |
| 3. | மந்திரச் சடங்கும் பார்ப்பனரும் .... | 29 |
| 4. | சயாமில் மார்கழி நோன்பு .... | 42 |
| 5. | சயாம் சடங்கும் பாவைப்பாட்டும் .... | 54 |
| 6. | ஊஞ்சலும் தமிழ் நாடும் .... | 73 |
| 7. | பாவைப்பாட்டுப் பண்பாடு .... | 84 |
| 8. | பிற்சேர்க்கை I - திருவெம்பாவை.... | 106 |
| 9. | பிற்சேர்க்கை II - திருப்பாவை .... | 112 |


## படங்கள்


1. ஊஞ்சல் ஆட்டம்
2. கோயில் ஊஞ்சல்
3. கருவறை
4. சிவனார் ஊர்வலம்
5. சிவனார் வீராசனம்
6. மழைச்சடங்கு
7. கோயில் வழிபாடு

# எடுத்துக்காட்டிய நூல்கள்


1. K.A. NILAKANTA SASTRI,
South Indian Influences in the Far East. 1949.
(Hind. Kitabs, Bombay)
2. H. G. QUARITCH WALES,
Siamese State Ceremonies. 1937
(Barnard Quaritch. London)
3. FRAZER'S GOLDEN BOUGH,
4. HASTING's Encyleopaedea of Religion and Ethics.
5. ஆண்டாள் - திருப்பாவை
6. மாணிக்கவாசகர் - திருவெம்பாவை
7. Bulletin de Commissioner, - Ecole Francaise, Extreme Orient.
8. பரிபாடல்
9. மாகபுராண அம்மானை
10. மு. இராகவையங்கார் – ஆராய்ச்சிக் கட்டுரைகள்
11. B. G. TILAK – THE ARCTIC HOME
12. BHAGAVAT GITA
13. நாச்சியார் திருமொழி
14. சம்பந்தர் தேவாரம்
15. அப்பர் தேவாரம்
16. திருவாசகம்
17. வால்மீகி இராமாயணம்
18. கம்ப இராமாயணம்
19. விஷ்ணு தர்மோத்த புராணம்
20. வாதசாயனர் காம சூத்திரம்
21. பாகவதம்
22. சிலப்பதிகாரம்
23. சங்க இலக்கியம்
24. மகாபாரதம்
25. கந்தபுராணம்
26. ஆகமங்கள்

# 1. ஊஞ்சல் திருவிழா

## எண்ண அலைகள்

"ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்சோதி" என்று, மார்கழி மாதத்தில் காலையிலே, பனி என்றும் பாராது குளிரிலே குளித்துவிட்டுப் பாடிக்கொண்டு அன்பர்கள் தெருவில் போகின்றது கேட்டு எழுந்தேன். தருமபுர ஆதீனத் தலைவரின் நன் முயற்சியால் திருவெம்பாவை – திருப்பாவை இசைத்தட்டுக்கள் ஒவ்வொரு கோவிலிலும் இடம்பெற்றவை, எங்களூர்க் கோவிலிலும் ஒலிபெருக்கி வழியே ஊரினை எழுப்பிப் பாடின.

இவற்றையெல்லாம் கேட்டபோது என் மனம் ஆண்டாளையும், மணிவாசகரையும் நினைத்துக்கொண்டது. அவர்கள் காலம் – அவர்கள் செய்த புரட்சி – அன்பு நெறியைச் சிறுமிகளும் கற்றுப்பாடி இன்புறும் கடவுட்புரட்சி – இவை எல்லாம் என்கண்முன் திரைப் படக் காட்சிபோல் தோன்றின. சங்க காலத்துக்குப் பின் வீழ்ந்த தமிழகம் விழித்தெழுந்தது – புத்துயிர் கொண்டு மகிழ்ச்சியிற் பொங்கியது – கடவுளின் அருள் விளக்கமாகவே ஒளிர்ந்தது – தலைநிமிர்ந்து நடந்தது – கங்கைக் கரையிலும் கீழைக்கடலிலும் தன் வெற்றிக்கொடியை நிலைநாட்டியது - இவற்றைக் கண்டு "கங்கைகொண்டான் கடாரம்கொண்டான்" என என் மனம் பாடியது.

இவற்றையெல்லாம் நினைத்தபோது அறிஞர் குவாரிட்ச் வேல்ஸ் (H. Quaritch Wales) என்பார்

எழுதிய நூலும் நினைவுக்கு வந்தது. சயாம் அரண்மனைச் சடங்குகள் (Siamese Court Ceremonies) என்பது அவர் எழுதிய நூலின் பெயர். சடங்குகளை மிக விரிவாக எழுதியுள்ளார். சயாமிலேயே தங்கி அரசகுடும்பத்தோடு பழகி எழுதும் வாய்ப்பு அவருக்கு இருந்தது. இந்தியப்பண்பாடு சயாம் வரை பரவியது என்று அவர் முடிவு கூறுகிறார். அச் சடங்குகளில் ஊஞ்சல் திருவிழா ஒன்று. அதனை அவர் விளக்கி இருப்பதனைப் படித்தது நினைவுக்கு வந்தது. உடனே மார்கழித் திருநாளும் எனக்கு நினைவு வந்தது. ஏன் நினைவு வந்தது? என் தமிழ் வெறியா? இந்தக் கட்டுரையைப் படித்துப் பார்த்து முடிவுகூறுதல் வேண்டும். வேல்ஸ் அறிஞர் எழுதிய வற்றை அடிப்படையாகக்கொண்டு என்னுள்ளத்தே எழுந்த ஆராய்ச்சிப் போக்கினைக் கீழே தருகின்றேன்.

**ஊஞ்சல்**

சயாம் நாட்டின் தேசியத் திருவிழாவை "லோஜின் ஜா" என வழங்குகிறார்கள். இப்பெயருக்கு 'ஊஞ்சலை வலிப்பது' என்பது பொருளாம். இத்திருவிழாவிற் கென்றே நிலையாக இரண்டு தேக்குத் தூண்கள் உள்ளன. அவை கப்பற் கொடிமரம்போல விளங்குகின்றன. ஒவ்வொன்றும் 80 அடி உயரம் இருக்கும். அவ்விரண்டு தூண்களையும் உச்சியில் உள்ள சித்திர வேலைப்பாடமைந்த குறுக்கு மரங்கள் ஒன்றுக்கி நிற்கும். அந்தத் தூண்கள் உச்சிப் புறத்து உட்பக்கமாகச் சிறிது வளைந்து தோன்றும். கீழாக உள்ள குறுக்கு மரத்திலிருந்து கயிறுகட்டி ஊஞ்சற் பலகையைத் தொங்கவிடுவார்கள். (படம் 1) இந்த ஊஞ்சல்



படம் (1) — ஊஞ்சல் ஆட்டம்

மரம், முன் காலத்தில், பார்ப்பனர் கோயில்களுக்கு எதிரிலேயிருந்த புல் வெளியில் அமைந்திருந்ததாம். ஆனால், பிற்காலத்தில், கற்படுத்தப்பட்ட வெட்ட வெளியில் விளங்கியதாம். அந்த வெட்டவெளி பழைய இடத்திலேயிருந்து 300 அடி தூரத்தில் இருந்தது என்பர்.

இந்தத் திருவிழாவின்போது, முதல் நாள் காலையில், ஓர் ஊர்வலம் புறப்பட்டு ஊஞ்சலிருக்கும் இடத்திற்கு வரும். வந்ததும், சில சடங்குகள் நடந்த பின்னர், ஊஞ்சலில் சிலர் ஆடத் தொடங்குவர். அதற்கு முன், கோயிலிலிருந்து பார்ப்பனர்கள் ஊஞ்சற்பலகையைக்கொண்டு வருவார்கள். அதனைத் தொங்கவிடுதல் போன்ற ஒரு சடங்கைச் செய்தபின் எடுத்துக்கொண்டு போய்விடுவார்கள். பின்னர், வேறொரு பலகையில் ஊஞ்சலாட்டம் நடைபெறும்.

ஊஞ்சற்றிருவிழாவில் ஊஞ்சலாடிப் பங்குகொள்வோர் பாம்புமுடி அணிந்திருப்பர். அதனால் இவர்களை நாகர் வழிபாட்டோடும் நாகர்களோடும் தொடர்புபடுத்திக் கூறுவதும் உண்டு. பன்னிரண்டு பேர்கள் இப்படி ஊசலாட வருவார்கள், நான்கு பேர் கொண்ட மூன்று பிரிவாக இவர்கள் பிரிந்திருப்பர். இம்மூன்று பிரிவும் ஒன்றன்பின் ஒன்றாக ஊசலாடும். ஊசல் கிழக்கு மேற்காக ஆடும்படி அமைந்திருக்கும். இந்த ஊசலுக்குச் சிறிது மேற்குப் புறத்தில் ஒரு மூங்கிற் கழி நட்டிருக்கும். அதில் ஒவ்வொரு குழு ஆடும்போதும் ஒரு பொற்கிழி கட்டுவார்கள். மூன்று குழு ஆடுவதால் ஒன்றன்பின் ஒன்றாக மூன்று பொற்கிழிகளைக் கட்டுவார்கள். முதற்பிரிவினர் ஊசற்பலகை

ஏறியதும் அந்தப் பல்கையிலிருந்து கட்டிக் கீழே தொங்கவிடப்பட்ட கயிற்றினை ஒருவன் கீழிருந்து வலிந்து இழுப்பான். அதனால் ஊஞ்சல் ஆடத்தொடங்கும். ஊஞ்சலின்கண் பொற்கிழியின் பக்கமாக இருப்பவன் அதனைத் தன் பல்லால் கடித்திழுக்க முயலுவான். அவனுக்குப் பின்னல் பலகையிலிருப்பவர்கள் அந்தப் பலகை பொற்கிழியை எட்டும்படி விரைவாக உந்தி ஆடுவார்கள். முந்தியிருப்பவன் கோமாளி வேடிக்கையெல்லாம் காட்டிப் பொற்கிழியைப் பல்லால் கடித்து இழுத்துவிடுவான். கிழியை இழுத்து எடுத்ததும், மக்களிடையே மகிழ்ச்சி பொங்கும். கீழே உள்ளவர்கள் உலோகத்தாலான தட்டினைக் கொட்டுவார்கள்; சங்கம் முழக்குவார்கள்; எல்லாரும் ஆரவாரிப்பார்கள். பொற்கிழியை இழுப்பவன் தவறி விழுந்தானுல், நாட்டிற்கே தீமை வரப்போவதைக் காட்டுங் குறியாக அதனைக்கொண்டு, வாடுவார்கள். பொற்கிழியைப் பற்றியதும் பலகைமேல் இருந்த நான்கு பேர்களும் எழுந்து நின்று, ஊஞ்சற் கயிற்றைப்பிடித்திழுத்துப் பெருங் குலுக்காகக் குலுக்குவார்கள். விரைந்தாடும் ஊஞ்சலை விரைவில் நிறுத்துவதற்கு இஃதொரு வழிபோலும்!

இவ்வாறு முதற் பிரிவினர் ஆடியபின் இரண்டாம் பிரிவினர் ஏறி ஆடுவார்கள். இரண்டாம் பொற்கிழியைப் பெற்றபின் அவர்களும் இறங்கி விடுவார்கள். இனி, மூன்ரும் பிரிவினரும் இவ்வாறே ஆடி மூன்ரும் பொற்கிழியைப் பறித்தவுடன் கீழிறங்குவார்கள்.

இத்திருவிழாவின் இரண்டாம் நாளன்று ஊஞ்சலாட்டம் நிகழாது. மூன்ரும் நாளன்று காலையிலன்றி



படம் (2) — கோயில் ஊஞ்சல்

மாலையில் முதல் நாளிற் போலவே மூன்று முறை ஊசலாட்டம் நிகழும்.

இந்த ஊஞ்சலாட்டம் கோயிலிலும், நடைபெறுகிறது. சிவன் கோயிலிலும், பெருமாள் கோயிலிலும் கோயில் கட்டடத்திற்குள், நடுவே, ஊஞ்சற் கம்பங்கள் இரண்டிரண்டு, நான்கடி உயரத்தில் நிலையாக விளங்குமாம். (படம் 2) அதில் கடவுள் திருமேனியை அமர்த்தி ஊசலாட்டுவது இந்தத் திருவிழாச் சடங்கில் சிறப்பானதோர் உயிர்நிலையாகும்.

### டோலா யாத்திரையா ?

ஊஞ்சல் திருவிழா என்ற இப்பெயர் வங்காளத்தில் வழங்கும் ' டோலா யாத்திரை ' என்ற தொடரின் மொழிபெயர்ப்புப்போலத் தோன்றுகிறது. 'டோலா' என்பது ஊஞ்சல்; யாத்திரை என்பது தமிழர் அறிந்ததொரு சொல்லே. ஆனால், அது 'ஜாத்திரை' என்று இங்கே வழங்குகிறது. மாரியம்மனுக்குச் சிறப்பெடுப்பதனை மாரியம்மன் ஜாத்திரை என்று தொண்டை நாட்டில் வழங்குகின்றனர். திருவிழா என்பதே அதன்பொருளாகும். எனவே டோலாயாத்திரை என்பதன் நேர்பொருள் ஊஞ்சல் விழா என்பதேயாம். ஆனால், சயாம் மொழியில் இதற்குப் பெயர், 'லோஜின் ஜா' என வருவதை முன்னரே குறிப்பிட்டோம். ஊஞ்சலை இழுப்பது என்பது அதன் பொருள். உந்துவது, ஊக்குவது என்று கூறுவது தமிழ் வழக்கு. சயாமில் நடக்கும் விழாவில், ஊஞ்சற் பலகையிலேயிருந்து தொங்கும் கயிற்றினைக் கீழிருப்பவன் இழுத்தே ஊஞ்சலை ஆட்டுவான் எனக் கண்டோம்.

அதனுல்தான் ஊஞ்சலே வலித்திழுத்தல் என்ற பொருளேயுடைய பெயர் அங்கே வழங்கலாயிற்று.

கீழைக்கடல் பண்பாட்டையும் வரலாற்றையும் முதலில் ஆராய்ந்த இந்தியர்கள் வங்காள நாட்டைச் சேர்ந்தவர்கள். வங்காள நாட்டில் வழங்கும் டோலா யாத்திரை அவர்களின் நினைவுக்கு வருவது இயல்பே யாம்.

வங்காள நாட்டு மன்னர்கள் கீழை நாட்டுத் தீவுகளில் பல்கலேக் கழக வளர்ச்சியிலும் ஈடுபட்டி ருந்தார்கள். அதனுல், வங்காள நாட்டுப் பண்பாடு அங்குப் பரவியது என்று கூறுவதில் வியப்புமில்லே; தவறுமில்லே. ஆனுல், இந்தத் திருவிழாவின் பிற கூறுகளேயும், நடக்கும் காலத்தையும் ஆராய்தல் வேண்டும். அவற்றை அடுத்துக் காண்போம்.

### கோயில்கள்

இத் திருவிழாவின் சடங்குகளே விளக்குதற்கு முன், அங்குள்ள இந்து மதக் கோயில்களேப் பற்றி விளக்குவது பொருத்தமாகும். மூன்று நீண்ட சது ரக் கட்டடங்கள் அங்கே உள்ளன. அவற்றிற்கு அருகேதான் பார்ப்பனர்கள் வாழ்கின்றனர். இந்தக் கட்டடங்களே கோயில்கள். வெளியிலிருந்து பார்த் தால் சயாம் நாட்டுக் கட்டடங்கள் போலவே கூரைப் பகுதி விளங்கும். உட்புறத்திலே நம் நாட்டிற் போல் வெள்ளேயடித்திருப்பார்கள். இந்த மூன்று கோயில்க ளுள்ளும் வட புறத்திலுள்ள கோயில் திருமாலின் கோயிலாகும். தென்புறத்திலிருப்பது சிவன் கோயில். இவற்றினிடையே விளங்குவது பிள்ளேயார் (கணே சர்) கோயிலாம்.



படம் (3) — கருவறை

கோயில்களின் வாயிற்புறம் கிழக்கு நோக்கியே இருக்கும். கோயிலுக்குள் மேற்கு எல்லையில் கடவுள் திருமேனிகள் அமர்ந்திருக்கக் காணலாம். கட்டடத்தின் நடுவே, முன்னே நாம் குறிப்பிட்டபடி, ஊசற் கம்பங்கள் இரண்டு நடப் பெற்றிருக்கும். இரண்டு கம்பங்கட் கிடையே அமைத்த குறுக்குச் சட்டத்திலிருந்து திருவிழாவின் போது தொட்டிலே (ஊஞ்சற் பலகையைத்) தொங்க விடுவார்கள்.

சிவன் கோயிலில் பல திருமேனிகள் உள்ளன. (படம் 3) சிவனும் உமையும் வெள்ளை நிற மேற்கட்டியின்கீழ்க் காட்சி யளிக்கக் காணலாம்; நான்கு புறத்திலேயும் பட்டுத் திரை தொங்கும். இந்தத் திருமேனிகளுக்கு முன்னுல் பூ முதலியன வைப்பதற்காக மேசை போல் உயர்ந்த மணைப் பலகை இருக்கும். இரு புறத்தும் 'எரு தேறும் நாயனுர்' (ரிஷபாரூடர்) திருமேனியுண்டு. முன் காலத்தில் "ஹரி ஹரர்" கோலங் கொண்ட திருமேனி இருந்ததாம். அது காட்சிச் சாலைக்குச் சென்று விட்டது. இந்த வடிவம் பத்தாம் நூற்றுண்டையது என்றும், சோழர்கள் அமைத்த திருமேனி வடிவத்தோடு ஒத்ததென்றும் ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். பலகையில் செதுக்கி நிறம் பூசிய தெய்வத் திருமேனிகளும் உண்டு. திருமால் கோயிலின்கண் திருமாலின் வடிவமொன்றே பழையதாகும். அவருக்கு இருபுறத்து முள்ள நாச்சிமார்களின் திருமேனிகள் பின் கொண்டு வந்தவையாம்.

## சிவனுர்

இந்தத் திருவிழாவின் போது சிவனுர் என ஒருவர் பெருமையுடன் வருவார். முற்காலத்தில் அரசரே

அவ்வாறு வந்தார் எனக் கருதற்கு இடமுண்டு என்பர் வேல்ஸ் என்ற அறிஞர். பிற் காலத்தில், உழவுத் துறை அமைச்சர் சிவனாக வீற்றிருந்தாராம். அவருக்கு நிறைய வேலை யிருந்தமையால், அரசியலைச் சேர்ந்த ஓர் உயர்குடிப் பெருமகனைச் சிவனாக வீற்றிருக்க அரசர் ஏற்பாடு செய்தாராம். இவ்வாறு மூன்று நாட்கள் வீற்றிருக்க வேண்டும். அரசருடைய பண்டாரம் அல்லது பொற்களஞ்சியம் அந்த மூன்று நாட்களிலும் அவர் கையிலேயே இருக்கும். எந்தச் செலவையும் செய்ய அவர்க்கு அப்போது முழு உரிமையுண்டு. "மூன்று நாளைய அரசர்" என்று அவரைக் கூறலாம்.

அந் நாட்டவர்தம் ஆண்டின் முதல் திங்களில் இத் திருவிழா நிகழும். வளர்பிறைச் சத்தமி அல்லது ஏழாம் நாட் காலையில் சிவனார் ஊர்வலமாக வருவார். (படம் 4) பிற்காலத்தில், சயாம் நாடு பௌத்த நாடாக மாறினமையால் பௌத்தமதக் கூறுகளையும் இந்தத் திருவிழாவில் காண்போம். இதற் கேற்ப, அவர்கள் வணங்கும் புத்தர் பெருமான் கோயிலிலிருந்தே ஊர்வலம் தொடங்கும். நகரத்தின் மதிலை வலமாகச் சுற்றிக் கொண்டு ஊர்வலம் வெட்ட வெளியில் ஊஞ்சற் கம்புகள் நட்டுள்ள அவ்விடத்திற்கு வரும்.

சிவபெருமான் அப்போதுதான் உலகத்தில் வந்துள்ளார் என்று எல்லோரும் கொள்வர். சிவனாக வருபவர் நீண்ட கூரிய முடியொன்று அணிந்திருப்பாராம். இதை நம் கோயிலில் காணும் கிரீடமே எனலாம். அரசனைப் போலவே இவரும் நீண்ட கஞ்சுகம் அணிந்திருப்பார். துணியின் ஒரு முன்றானையைப்



படம் (4) — சிவனர் ஊர்வலம்

பின்புறமாக இருக்கும்படி செருகிக் கொள்வர். மற்றொன்று முன்புறத்தே தொங்கும். இது அர்த்த நாரீசுர வேடத்தின் உடைக் கோலம் போலத் தோன்றுகிறது. நம் நாட்டில் இப்போது கீழ்ப்பாய்ச்சு என்று வழங்குவது போல இது அமைகின்றது என்பதை நாம் உய்த்துணரலாம். இச்சிவனார் பல்லக்கில் ஏறிச் செல்வார். வெண்குடை முதலிய அரசர் பெருமைகள் (விருதுகள்) சிவனாருடன் வரும்.

பின்னர், பலபல வேடங்கள் தாங்கிப் பலர் ஆடியும் விளையாடியும் வருவர். நம் நாட்டில் பொங்கலின் மூன்றாம் நாளும், ஆயுத பூசையின் போதும், இவ்வாறு பலபல வேடம் பூண்டு, தொழிலாளிகளும் பிறரும் ஆடுவதுண்டு. இந்த ஆட்டமும் விளையாட்டுமாகிய சடங்கினைத் தொழிற்சாலைக் கண்காட்சியாகவும், போர்க் கோலக் கண்காட்சியாகவும், பின்வந்த அரசியலார் பயன்படுத்திக் கொண்டதுண்டு. தொடக்கத்தில் இவ்வாறு பல கோலம் பூண்டவர்கள் சிவபெருமானின் பூதகணங்களைக் குறிப்பவராக இருந்திருக்கலாம்.

சிவனார் வடகிழக்கு மூலையில் வந்து இறங்குவார். அது கூரை வேய்ந்த இடமாகும். ஈண்டு, ஈசான மூலை சிவனாருக்கு உரியதென்பதை நினைவிற் கொள்ள வேண்டும். அவர் இறங்குமிடத்தைச் சாலை என்பார்கள். அந்த வெட்ட வெளியின் வடபுறத்தில் கிழக்கு மேற்காக வரிசையாக மூன்று பந்தல்கள் இருக்கும். மூங்கிற் கம்புகளை நட்டு வெள்ளைத் துணியை மேலே பரப்பி வைத்திருப்பார்கள். இந்த மூன்று பந்தலில் மேற்குக் கோடியில் இருப்பதனுள்

சிவஞர் செல்வார். அங்கே மூங்கிலாலாகிய அமைப்பொன்று தோன்றும். அதில் இருப்பதற்கும் சாய்வதற்கும் துணியைப் பரப்பி வைத்திருப்பார்கள். சிவஞர் தமது இடதுகாலே வலது முழங்கால் மேல் இட்டு, வலக்காலே நிலத்தில் ஊன்றி அமர்ந்திருப்பார். இது தென்முகம் கொண்ட தட்சிணுமூர்த்தியின் வீராசனத்தை நமக்கு நினைப்பூட்டும். இந்தச் சிவஞரும் தென்முகம் நோக்கியே வீற்றிருப்பார். (படம் 5) தட்சிணுமூர்த்திக்கருகே நான்கு முனிவர்கள் இருக்கக் காண்போம் அல்லவா? அது போல இந்தச் சிவஞரின் வலப்புறத்திலும் நான்கு பார்ப்பனர்கள் நிற்பார்கள். இடதுபுறத்தே இரண்டு அலுவலாளர்கள் நிற்பார்கள். சங்கு ஊதுவோர் இருவர் இவரெதிரே நிற்பர். இரட்டைச்சங்கு நம் நாட்டிலும் ஒரு சிறப்பினைக் குறிக்கும்.

சிவஞர் இங்கே வந்ததும் புத்தர் கோயிலுக்கு வழிபாட்டுப் பொருளே அனுப்புவது வழக்கம். சில போது வெற்றி முழவு முழங்கச் சிவஞரே புத்தர் கோயிலுக்குப் போவதும் உண்டு. ஆனுல், இவையெல்லாம் புத்தமதம் மேலோங்கியபோது உட்புகுந்த சடங்குகள் என விட்டொழிக்கலாம்.

ஊஞ்சலாட்டம், முன்னர் நாம் குறித்த வகையில், நடைபெறும். ஊஞ்சலாடுவோர் ஊஞ்சற்பலகைமேல் ஏறியதும் சிவஞரை நோக்கி வணங்குவர். தொங்கும் கயிறுகளே அசைத்து ஊசலே நிறுத்திய பின்னும் கைகூப்பிச் சிவஞரைக் கும்பிடுவர். அதன்பிறகே அவர்கள் கீழே இறங்குவார்கள். பின்னர்ச் சிவஞர் சிவிகையில் அமர்ந்து ஊர்வலமாகத் திரும்புவார்;



படம் (5) — சிவனர் வீராசனம்

அவர் நன்கொடைகள் வழங்குவார். அப்போது பலருக்கும் நன்கொடை வழங்குவதுண்டு. சில போது அரசர் பெருமான் திருவிழாவைக் காண வந்திருந்தால் அப்போதெல்லாம் சிவபெருமானுகை ஏற்படுத்தப்பட்டவர் முடிவில் அவரை மண்டியிட்டு வணங்குவார்.

அன்று மாலையிலும் அடுத்த நாளிலும் கோயிலில் மட்டும் வழிபாடுகள் நடைபெறும். மூன்றும்நாள் மாலையில் ஊஞ்சல் திருவிழா மறுபடியும் நிகழும். சிவனுர் ஊர்வலமாக ஊஞ்சல்வெளிக்கு எழுந்தருளுவார். ஆனுல், முன்போல் சாலைக்கு எழுந்தருளாமல் நேரே மேற்குப்பந்தருள் புகுவார். முன் போலவே மூன்று முறை ஊஞ்சலாட்டம் நிகழும்; பொற்கிழியைப் பல்லால் பற்றி இழுப்பர். ஊஞ்சல் திருவிழா இதனுடன் முடிவுபெறும்,

## மழைத்திருவிழா

இந்த ஊஞ்சலைத் தொடர்ந்து மற்ருெரு சடங்கு நிகழும். உலகில் பல இடங்களில் நிகழும் "மழை வேண்டும் திருவிழா"வைப் போல இச்சடங்கினைக் கருதலாம். ஆகவே, ஊஞ்சல் திருவிழாவோடு ஒன்ருக அமைந்திருந்தாலும் இதை வேருக ஆராய்வதே பொருத்தமாகும்.

முதல்நாள் போல மூன்றும் நாளும் ஊஞ்சலாடி முடிந்தபின் ஊஞ்சலாடுபவர்கள் சிவனுரை வணங்குவதுடன் நில்லாமல் அவரெதிரே செல்வார்கள். அவர் அமர்ந்திருக்கும் பந்தலிலே ஒரு பெரிய பித்தளைக் கங்காளத்தைக் கொண்டுவந்து வைப்பார்கள். "கல் சாகரம்" என்று அதனை வழங்குவர்.

கடலைக் குறிக்கும் சாகரம் என்ற வடமொழியின் தொடர்பையே அங்குக் காண்கிறோம். அந்தத் தொட்டி நிறையத் தண்ணீர் இருக்கும். ஊஞ்சலாடிய நாகர்கள் அதைச் சுற்றி ஒரு வட்ட நடனம் ஆடுவர். இவ்வாறு ஆடிக்கொண்டே அந்தச் சாகரத்தை மூன்று முறை சுற்றிவருவர். ஒவ்வொருவரும் எருமைக் கொம்பொன்றை ஏந்தி வீசிச் சுழற்றிக் கொண்டே ஆடிவருவர். சாகரத்தை மூன்றும் முறை சுற்றும்போது அதை நோக்கி ஓடி ஒவ்வொரு கொம்பிலும் அதிலுள்ள நீரை நிரப்பிக்கொள்வர். அந்தச் சுற்று முடிந்ததும் அக் கொம்பிலுள்ள நீரினை ஒருவர்மேல் ஒருவர் வீசியெறிந்து கொள்வர். (படம் 6).

இது முடிந்தவுடன் சிவனார் இரண்டாவது பந்தலிற் போய் வீற்றிருப்பார். அங்கும் அவர் எதிரே சாகரத்தைக் கொண்டுவந்து வைத்து, எருமைக் கொம்பேந்தி, அதனை அப்புறமும் இப் புறமும் வீசிக்கொண்டு நடனம் ஆடுவர். மூன்றும் முறை சுற்றும்போது கொம்பில் நீரை மொண்டு நடனமாடியபின் ஒருவர்மேலொருவர் நீரை வீசிக் கொள்வர். பின்னர், சிவனார் மூன்றும் பந்தலுக்குள் போக அங்கும் முன்னிரண்டிடத்திற் போலவே நடனமாடித் தண்ணீரை வீசியெறிந்துகொள்வர். இது முடிந்ததும் சிவனார் பல்லக்கில் ஊர்வலமாகத் திரும்பிப் போவார்.

**உறியடி**

இந்த நீர்வீச்சு விழா இந்தியாவில் நிகழும் ஹோளிப் பண்டிகையை நினைவூட்டுகிறது.



படம் (6) — மழைச் சடங்கு

ஹோளிப் பண்டிகையின்போது, துருத்தியில் பலநிற நீர்களை உறிந்து வீசியெறிந்து விளையாடுவர். ஆனால், ஹோளிப் பண்டிகை அறுவடைத் திருநாளாகும். எனினும், மார்கழி அல்லது தைமாதத்தில் கொண்டாடப்படுவதில்லை. அது வேனிற்காலத் திருவிழா. வங்காளத்தில் டோலா யாத்திரை அறுவடைத் திருவிழாவாகவும் விளங்குகிறது.

தமிழ் நாட்டில் இந்த ஊஞ்சல் திருவிழாவிற்குப் பதிலாகக் கண்ணன் பிறந்த அன்றே இரவில் உறியடித் திருவிழா நடைபெறுகிறது. இதில் இரண்டு பெருங்கம்பங்களை நடுவார்கள். பிறகு, இரண்டையும் குறுக்குக்கம்பி ஒன்ருகச் சேர்க்கும்; மிக உயரத்திலிருக்கும் அதிலிருந்து கண்ணனுக்கு உகந்த வெண்ணெய் முதலிய பொருள்கள் தொங்கும். ஒரு புதுத்துணியில் இவற்றையெல்லாம் கட்டிவைப்பார்கள். இந்தக் கிழியைச் சிலவிடங்களில் ஏறியும், சிலவிடங்களில் அலக்கு கொண்டும் பற்ற முயல்வார்கள். அவ்வாறு முயல்பவர்களின் மூச்சுத் திணருமாறு அருகிலுள்ளார் மஞ்சள் நீரை உரத்தோடு வீசி வருவார்கள். சில இடங்களில் பீச்சாங்குழல் கொண்டும் ஹோளிப் பண்டிகையிற் போல நீரினைப் பீய்ச்சுவதுண்டு. கண்ணன் உறியிலுள்ள வெண்ணெய் முதலியவற்றைக் கள்ளமாகக் கவர்வதும், ஆய்ச்சியர் அதனைத் தடுத்து ஓட்டுவதும், முடிவில் அவர்களை மீறிக் கண்ணன் உறியிலுள்ளவற்றைக் கொண்டு செல்வதுமான கதையைக் குறிக்கின்றது இத்திருவிழா என்பர். உறியாட்டு இங்கே ஓர் ஊசலாட்டம்

போல்வதாம். அதோடு நீரை வீசியெறிவது மழைத் திருவிழாவோடு தொடர்புள்ளதனைக் குறிக்கும்.

**மாந்திரிகம்**

பல நாடுகளிலும் மழைத் திருவிழா நடக்கக் காண்கிறோம். வேண்டியதோர் இயற்கை நிகழ்ச்சியை மனிதன் சாயல் பிடிப்பதால், உண்மையாகவே அந்த இயற்கை நிகழ்ச்சியே நடந்துவிடுமென மக்கள் நம்பினர். மழை பெய்வதுபோல நீரை வாரி இறைத்தால் மழையே ஏதோ ஒரு வகையாற் கட்டுப் பட்டுப் பெய்துவிடுகிறதாம். போலி நிகழ்ச்சி உண்மை நிகழ்ச்சியினை இவ்வாறு விளைக்குமென்பது பழங்கால மக்களின் நம்பிக்கை. பகைவனது ஓர் உறுப்பை அழிக்கவேண்டுமென்று விரும்பினால், அவனைப்போல மாவினால் ஓர் உருவம் செய்து, அந்தப் பாவையில் தான் அழிக்கவேண்டிய உறுப்பில் ஆணியை அறைந்தால் பகைவனது உறுப்பும் அழியும் என்று நம்பும் மாந்திரிகச் சடங்குகளும் உண்டன்றோ? எனவே, நீரை வீசி இறைத்துக்கொள்வது மழை பெய்வதற்காகச் செய்யும் ஒரு சடங்கேயாம்.

# 2. கோயில் வழிபாடு

## காப்புக்கட்டுதல்

இந்த ஊஞ்சல் திருவிழாவும், மழைத்திருவிழாவு மேயன்றி, இந்தத் திருவிழாவின்போது கோயில் களில் சில பல சடங்குகளும் நிகழும். அவை தமிழ் நாட்டுக் கோயில்களில் நடைபெறும் சடங்குகளை நினைவு படுத்துகின்றன.

வளர்பிறை ஆறும் நாளும், ஏழாம் நாளும் சிவன் கோயிலில் பார்ப்பனரெல்லாம் ஒன்று திரளுவார்கள். தம்மைப் புனிதமாக்கிக் கொள்ளத் தூய நீராடி வருவர். காப்புக் கட்டுதல் (ரட்சாபந்தனம்) என்று நாம் வழங்குவது போன்ற சடங்கு அங்கேயும் நிக ழும். ஒவ்வொருவரும் தம் தம் தோளில் ஒரு கயிற் றை(நூலை)க் கட்டிக்கொள்வர். "நோன்பு கட்டுதல்" என்று அவர்களின் மொழியில் இது வழங்குகிறது நோன்பு என்பதை 'ப்ரத்' என்பர். இது 'வ்ரதம்' என்பதன் திரிபு என்பது நன்கு விளங்கும். தங்க ளுடைய நோன்பு முடிகிற வரையில் அவர்கள் சைவ உணவையே உட்கொள்ள வேண்டும்; தம்தம் மனைவி யரிடமிருந்து பிரிந்து வாழ வேண்டும். அரச குரு இச்சடங்குகளுக்கெல்லாம் தலைமைபூணுவார். இந்தத் திருவிழாவின் போது அவர் பதினைந்து நாளும் நோன்பு நோற்றல் வேண்டும். அவர் சிவன் கோயி லுக்குள்ளேதான் வாழ்தல் வேண்டும். மற்றவர்களோ வளர்பிறை ஏழாம் நாளிலிருந்து மூன்று நாட்கள் மட்டுமே விரதம் காப்பர்.

வளர்பிறை ஏழாம் நாளன்று விடியற்காலையில், அரச குரு கைலாசத்தின் கடை திறப்புப் பாடுவார். அவர்களின் சடங்குகளில் மலை வழிபாடு தனிச் சிறப்புப் பெறுவதைக் காண்கின்றோம். இந்தக் கடை திறப்புப் பாடல் கடவுளரைக் கீழே இவ்வுலகிற்கு வருமாறு வேண்டிக் கொள்வதாகும். இந்தப் பாடல் தமிழ்ப்பாடல் என அறிகிறோம். ஆனால் என்ன பாடல் என்பது விளங்கவில்லை. பின்னர், அரச குரு சிவனுரை, முன்னே நாம் கூறிய சாலையில், எதிர்கொள்ளச் செல்லுவர்.

## மாலை வழிபாடு

அன்று மாலை, பார்ப்பனர்கள் சிவன் கோயிலில் வந்து சேர்வார்கள். அரச குரு புனிதமாக்கும் சடங்குகளைச் செய்வார். இச்சடங்குகளின் பெயர் Krah suddhi, Atama suddhi; கிரஹ சுத்தி, ஆத்மா சுத்தி என்ற பெயரால் நம் நாட்டில் வழங்குவனவே இச்சடங்குகள். 'G' என்பது 'K' என ஆகியுளது; உகரமும் இகரமும் நீண்டுள்ளன. 'ஹ' என்பது 'ஹ்' என்றுயது. 'ஆத்ம' 'அதம' என, முதல் ஆகாரம் குறுகியும், தகர ஒற்று ஓர் அகரம் பெற்றும் நிற்கக் காண்கிறோம். அரசகுரு பத்மாசனமிட்டுக் குந்தியிருப்பார் என்று படத்தைப் (படம் 7) பார்த்தால் விளங்குகிறது. பின்னர்ப் 'பார்ப்பனக் கயிறு' என அவர்கள் வழங்கும் பூணூலை அணிந்துகொள்வார். பவித்திரம் என்று நாம் வழங்குவதனை அவர்கள் விரல் ஆழி என்பர். அதனைச் சுட்டு விரலில் அணிந்து கொள்வார். சந்தனக் குழம்பு எடுத்து நெற்றியிலே ஒரு பொட்டிட்டுக் கொள்வார். தம் உடலில் தொடுமிடங்



1 அத்தர் புட்டிகள்
2 எழுசுடர் தீபக்கால்
3 (சடங்கு செய்யும்) எல்லீ விளக்கில் ஒன்று
4 அபிடேகத் தொட்டி (செம்பொன்)
5 (சிறு விக்கிரகங்களை எடுத்துப் போவதற்காக) ரோசா இதழ்கள் நிறைந்த செம்பொன் வட்டில்
6 பொன் பூண்ட சங்கும் தாங்கியும்
7 வெள்ளிக் கெண்டி-கலசம்
8 சிறு மெழுகுவர்த்தி விளக்குகள்
9 பஞ்ச கர்ப்ப தீர்த்த வட்டில்கள்
10 அன்னத்தைச் சுற்றிவர எடுக்கும் மெழுகுவர்த்தி
11 உதிரி மெழுகுவர்த்திகள்
12 மணி
13 விமானம்
14 பத்திர பீடம் (செம்பொடி, வெண்பொடி, பசும்பொடி குவித்துள்ள பத்திர பீடம்)
15 வழிபடு பொருள்கள் வைக்கும் தாங்கி
16 வாழை இலையில் குவித்து வைத்த நைவேத்தியம்
17 ஊதுவர்த்தி
18 பூ வட்டில்
19 தீர்த்தம் தெளிக்கும் தர்ப்பைக் கூர்ச்சம்
20 மந்திர ஏடு
21 கண்ணடிச் சாடியில் தீர்த்தம்
22 உமிழ் வட்டில்
23 எட்டுத் திக்குகளை வழிபட்ட பூக்கள்
24 மூடிய மந்திர எட்டை வைக்கும் மணை
25 செபமாலை
26 வெள்ளிப் பூவேலை செய்த மெல்லிய மேலாடை
27 காப்பு நாண்
28 பூணூல்
29 கீழ்ப்பாய்ச்சு
30 செப்புத் தட்டு

படம் (7) — கோயில் வழிபாடு

களை முத்திரைகள் காட்டித் தொடுவார். (அங்கநியாசம் கரநியாசம் சகளீகரணம் முதலியன.) செபமாலையை எடுத்து அதிலுள்ள மணிகளை விரல்களினிடையே உருட்டுவார். மனத்தை ஒரு முகப்படுத்தி ஆழ்ந்த தியானத்தில் இருப்பவர் போலத் தோன்றுவார். மந்திரத்தை உள்ளுக்குள்ளேயே செபிப்பார் போலும்! ஈங்கெல்லாம் மெழுகுவர்த்திகளே விளக்குகள். ஏழு கிளைகளுள்ள விளக்கை வலது கையில் எடுத்துக்கொண்டு, இடது கையால் மணியை அடித்துக் கொண்டே, இப்புறமும் அப்புறமும் ஊஞ்சலாடுவது போலச் சுற்றுவார். தீபாராதனை செய்கிறார் என்பது தெளிவு. இவ்வாறு முப்பத்தாறு முறை சுழற்றுவார். சைவ சித்தாந்திகள் கூறும் 36 தத்துவங்கள் நினைவுக்கு வருகின்றன. 36 தத்துவங்களைக் கடந்து எதிரே நிற்பவரே கடவுள் என்பதைத்தான் இச்சடங்கு குறிக்கின்றதோ ? இவ்வாறு செய்யும்போது மற்றைய பார்ப்பனர்கள் சங்குகளை ஊதுவார்கள். இந்தத் தீபாராதனை இவ்வாறு மூன்று முறைநிகழும்.

இவ்வாறு அரசகுரு தாம் புனிதமானவுடன் மற்றைய பார்ப்பனர்களையும் தூய்மையாக்கத் தொடங்குவார். அவர்கள் தண்டனிட்டு வருவதைக் கண்ட 'வேல்ஸ்' என்ற அறிஞர், 'அவர்கள் மார்பால் ஊர்ந்து வந்தார்கள்' என்று எழுதி வைத்துள்ளார். அவர்கள் எழுந்து கைகூப்பி நிற்பார்கள். தூய்மையாக்கிய நீரை அவர்கள் தலைமேல் அரசகுரு தெளிப்பார். பின்னர், அவர்கள், திருமேனிகள் வைத்துள்ள இடத்திற்குச் சென்று, அவற்றின் எதிரே கீழே விழுந்து வணங்கு

வார்கள். இப்படி மும்முறை வணங்குவர். இது நாமறிந்த வழக்கமன்ரு? திருமேனியின் எதிரே ஒரு மேசை இருக்கும். அதன்மேல் நடுவேஅவல், குவிந்து கிடக்கும். (படம் 2) அதன் தலையில் ஒரு தேங்காய் இருக்கும். இதன் மேலே இரண்டு கிளையுள்ள விளக்கும் பொருந்தியிருக்கும். அவலின் இருபுறத்தும் வாழை முதலிய பலவகையான கனிகள் கிடக்கும். மேசையின் கீழே தேங்காய்கள் வரிசையாக அடுக்கியிருக்கக் காணலாம். திருமேனிகளுக்குச் சிறிது அருகிலேயே ஒரு சிறு மேசையின் மேல் நான்கு கிளையுள்ள விளக்கு ஒன்று சுடர்விட்டு எரியும். மலர்கள் நிறைந்த பல தட்டுகளும் அங்கே இருக்கும். கோயிலின் நாற்புறத்தும் கரும்புகளை அடுக்கி வைத்திருப்பர் நான்கு பார்ப்பனர்களும் மேசைக்கெதிரே திருமேனிகளை நோக்கி நிற்பர். ஒவ்வொருவரும் அவல் வைத்த ஒவ்வொரு தட்டை ஏந்தி நிற்பர். அவர்கள் வெவ்வேருய் இருந்து ஒவ்வொருவரும் ஒவ்வொரு மந்திரமாக நான்கு மந்திரங்களை ஓதி முடிப்பர். பின், எல்லாரும் ஒருங்குகூடி "லொரி பாவாய்" என்ற மந்திரத்தைப் பாடுவார்கள். "ஏலோரெம் பாவாய்" என்று முடியும் பாவைப் பாடல் இது என்பதை மட்டும் இங்கு நினைவில் வைத்துக்கொண்டால் போதும். ஒவ்வொரு மந்திரமும் ஓதி முடிந்ததும் மற்றைய பார்ப்பனர்கள் சங்கம் முழக்குவர்; பதின்மூன்று முறை சங்கங்களை முழக்குவார்கள்.

அரசகுரு தாம் இருந்த இடத்திலிருந்து எழுந்து திருமேனிகளை நோக்கி, மேசைக்கருகில் போவார். அங்குள்ள பழங்களின் மேல் நீர்தெளித்துக் கடவுளுக்

குப் பலியாகத் தருவார். முன்பு போலவே மணியடித்துக்கொண்டு சங்க முழக்கத்தினிடையே தீபாராதனை செய்வார். தாம் கொண்டு வந்துள்ள மந்திர நூலிலிருந்து படித்துக்கொண்டே, தாம் ஏந்தி நிற்கும் தட்டிலே உள்ள மலர்களைத் திருமேனிகளின் மீது தூவி வழி படுவார்; இது முடிந்ததும் அவர் போய்விடுவார். மேசை மேலுள்ள விளக்குகளை யெல்லாம் பிறர் கையமர்த்துவார்கள். அவல் குவியலிலிருந்த தேங்காயையும் எடுத்து விடுவார்கள். அக்குவியலின் மேல் பழம் நிறைந்த நான்கு சாடிகளை வைப்பர். முன் கூறிய நான்கு பார்ப்பனருள், ஒவ்வொருவரும் ஒருவர்பின் ஒருவராகச் சென்று, ஒவ்வொரு சாடியாகத் தூக்கிப் பிடிப்பர். 'பழந்தூக்குதல்' என்பது இச்சடங்கிற்குப் பெயர். பழங்களைக் கடவுளுக்குத் தருவதே இச்சடங்கின் நோக்கமாம். பின்னர் இப்பழங்களை வந்திருக்கும் மக்களுக்கு வழங்குவர். இதனுல் நல்ல பயன் கிடைக்குமென அம்மக்கள் நம்பினுர்கள். சிவன் கோயிலில் இச்சடங்குகள் முடிந்ததும் பிள்ளையார் கோயிலிலும் இஃதேபோன்ற வழிபாடு நடைபெறும்.

### சித்திரப் பலகைகள்

வளர்பிறை எட்டாம் நாளாகிய அடுத்த நாள் விடியற்காலையில், அரசகுரு சிவன்கோயிலுக்குள்ளே போவார். அங்கே மூன்று மரச்சிற்பப் பலகைகள் இருக்கும், ஒவ்வொன்றும் நான்கு முழ நீளமும் ஒருமுழ அகலமும் உள்ளது. ஒன்றில் ஞாயிற்றின் வடிவம் இருக்கும். Brah Atith என்று அவர்கள் வழங்குவர். Brah (ப்ரஹ்) என்பது பிரம்மஸ்ரீ அல்

லது தெய்வத்திரு என்பது போலவரும் அடையாம். Atith (அதித்) என்பது ஆதித்தன் என்பதாம். இதிலேயே Brah Chandra (ப்ரஹ் சந்த்ர) என வழங்கும் திங்களின் வடிவமும் செதுக்கப்பட்டிருக்கும். இரண்டாவது பலகையில் தரைமகளின்வடிவம் செதுக்கப்பட்டிருக்கும். ஒரு பெண் குளித்த நீண்ட கூந்தலிலிருந்து நீரைப் பிழிவது போன்ற வடிவம் தரைமகளின் வடிவமாகச் செதுக்கப்பட்டிருக்கும். இதனை Nan Brah Tharani (நன் ப்ரஹ்தரணீ) என்று வழங்குவர். மூன்ருவதனை Brah Ganga (ப்ரஹ் கங்கா) என்பர். ஆனல், கங்கா வடிவம் ஆண் வடிவம். ஒருவேளை காங்கேயன் என்ற முருகன் வடிவத்தை இவ்வாறு திரித்துச் சொல்கிருர்களோ என்னவோ? சூரியனும் சந்திரனும் சக்கரங்கள்போல் வட்டமாகச் செதுக்கப்பட்டுள்ளனர். அவ்வட்டத்தின்மேல் பல அடுக்குடைய குடை, பொன் மெருகிட்டுத் தோன்றும். அரசகுரு இப்பலகைகளை எடுத்துக் கொண்டுபோய், சிவனுர் முந்திய நாள் எழுந்தருளியிருந்த வடபுறத்தி லுள்ள மூன்று பந்தர்களுக்கும் எதிரே, ஒவ்வொரு பந்தர்க்கும் ஒவ்வொன்ருக அமைந்த குழியில், ஒவ்வொன்றை இறக்குவார். ஒவ்வொரு குழியும் ஒரு முழம் அகலமும் நான்கு விரல் ஆழமும் உள்ளது. இதன்மேல் தருப்பையை மூடியிருப்பார்கள். ஒவ்வொரு குழியைச் சுற்றிலும் 'ராஜவத் வேலி' அமைந்திருக்கும். இந்தப் பலகை அந்த வேலியின்மேல் சாய்ந்திருக்கும். கிழக்கே இருக்கும் குழியில் சூரிய சந்திரர் பலகை இறங்கும். மேற்கேயுள்ள குழியில் கங்கைப் பலகை இறங்கும். நடுவேயுள்ள குழியில் தரணிப் பலகை இறங்கும். அங்கே அவை மூன்று

நாட்கள் இருக்கும். வளர் பிறைப் பன்னிரண்டாம் நாளன்று விடியற்காலையிலேயே அப் பலகைகளைச் சிவன் கோயிலுக்குக் கொண்டுவருவர். இவ்வாறு கீழே இறக்குவதால் அந்தக்காலம் குளிராக இருக் கிறது என்று மக்கள் கொள்வர். சிவபெருமான் உலகிற்கு வரும்போது பிற கடவுளரும் உடன் வரு தலை இப்பலகைகள் குறிக்கலாம்.

**ஊர்வலம்**

ஏழாம் நாள் மாலையில் நடந்த வழிபாடுபோலவே, சிவன் கோயிலிலேயும் பிள்ளையார் கோயிலிலேயும் ஒவ்வொரு நாளும் தேய்பிறை முதல்நாள் வரையும் இவ்வழிபாடு நடைபெறும். அன்றுதான் சிவபெரு மான் இந்த உலகை விட்டு எழுந்தருளுவாராம். அன்றுதான் திருமால் உலகிற்கு வருவாராம். அன்று பார்ப்பனர்கள் திருமாலின் கோயிலில் வந்து கூடு வார்கள். அரசகுரு கடைதிறப்பு மந்திரம் ஓதித் திரு மாலை உலகிற்கு வருமாறு அழைப்பார். மாலையில் திருமாலின் கோயிலில், சிவன் கோயிலில் நிகழ்வது போலவே, சடங்குகள் நிகழும்.

அன்றிரவு திங்கள் புறப்பட்டதும் ஓர் ஊர்வலம் செல்லும். ' நரேசுவரர் ஊர்வலம் ' என்று இதனை வழங்குவார்கள். அப்போதுதான் சிவபெருமான் இந்த உலகை விட்டு எழுந்தருளுவாராம். பார்ப்பனருடைய ஊர்வலம் அரண்மனைக்குச் செல்லும். இப்போது அரசர் மூன்று சிறிய கடவுள் திருமேனிகளைத் தரு வார். ஒன்று சிவனார் திருமேனி; இரண்டாவது உமையம்மை திருமேனி; மூன்றாவது கணேசர் திரு

மேனி. வாணவேடிக்கைகளும் நடைபெறும். முன்பெல்லாம் அரசரும் இதில் கலந்துகொண்டு கோவிலுக்குச் செல்வாராம். கீழ்க்கண்டபடி 'வேல்ஸ்' என்ற மேல் நாட்டார் 1931-ஆம் ஆண்டில் ஊர்வல அமைப்பைத் தாம் நேரில் கண்டதாக எழுதியுள்ளார்.

| | | |
|---|---|---|
| தாமரை விளக்கேந்தியவர் வரிசை. | கஞ்சப்பறை-அரசகுரு. | தாமரை விளக்கேந்தியவர் வரிசை. |
| செந்நிறப்பறையும் பொன்னிறப் பறையும் கொட்டுவார் வரிசை. | சங்கு ஊதிச்செல்லும் பார்ப்பனர். | செந்நிறப் பறையும் பொன்னிறப் பறையும் கொட்டுவார் வரிசை. |
| குடையும் ஆலவட்டமும் ஏந்துவார் வரிசை. | நடராசரையும் 3 திருமேனிகளையும் தூக்கிச் செல்லும் பல்லக்கு. | குடையும் ஆலவட்டமும் ஏந்துவார் வரிசை. |
| பல கிளை விளக்கு ஏந்திச் செல்லும் பார்ப்பனர். | கணேசர் திருமேனிகளைத் தூக்கிச் செல்லும் பல்லக்கு | பலகிளை விளக்கு ஏந்திச் செல்லும் பார்ப்பனர். |

மூன்று வரிசைகள் அடுத்தடுத்து நிற்க ஊர்வலம் சென்றதென அந்த அறிஞர் கூறுகிருர்.

## சிவனுர் கைலை திரும்புதல்

ஊர்வலம் சிவன் கோவிலுக்கு வரும். கோயிலின் கிழக்கு வாயிலில் 'பத்திர பீடம்' என வழங்குவது ஒரு சிறிய அகன்ற மேசையாக உள்ளது. (படம் 7) அதன் மேலே பல நிறப் பொடிகளைக் குவித்திருப்பார்கள். அரசர் பட்டாபிஷேகம் செய்துகொள்ளும்போதும் அத்தகைய பத்திரபீடத்தில் வீற்றிருப்பார். அரசகுருவுக்கருகே மற்ருெரு மட்டமான மேசையின்மேல் சங்கும்,

கலசம் என வழங்கும் மூக்குவைத்த கெண்டியும் பஞ்ச கர்ப்ப (Penca Karbha) என்று வழங்கும் ஐந்து வட்டில்களும் இருக்கும். இந்தச் சொல் பஞ்ச கௌவ்யம் என்பதன் மரூஉ என்பார் ஓர் அறிஞர். இந்த ஐந்து வட்டில்களில் ஒன்று பளிங்கு வட்டில். பிறநான்கும் வெவ்வேறு உலோகங்களால் ஆனவை. சக்கரமில்லாத தேர்போன்ற சிறுவிமானம் ஒன்றும் அங்கிருக்கும். பிராசாதம் என்று இதனை வழங்குவர். இதனுள் தான் இவ்விரண்டங்குல உயரமுள்ள அந்த மூன்று விக்கிரகங்களும் அரண்மனையிலிருந்து கொண்டுவந்து வைக்கப்பெறும். பத்திரபீடத்தின் அருகே ஒருதட்டு ஓர் உயரமான காலின்மேலே இருக்கும். அதிலே சுடர்விடும் விளக்குகளும், நறுமணப் புகைக்குச்சுகளும் உணவுவைத்துச் சுருட்டிய வாழை இலைகளும் இருக்கும். மணி, கிளைகளோடு கூடிய தீபம் ஆகியவை, பிற சடங்குப் பொருள்களோடு விளங்கும். கோவிலுக்குள் இருக்கும் என்று முன் நாம் கூறிய ஊஞ்சற் கம்புகள் வாழை இலையால் அணி செய்யப்பட்டு விளங்கும். குறுக்குப் பலகையிலிருந்து கயிறு கட்டி ஒரு தொட்டில் இருக்கும். அதிலே பொன்மெருகிட்ட ஓர் அன்னத்தைக் கிழக்கு நோக்கி நிற்கும்படி கட்டியிருப்பார்கள். ஓர் அம்மியும் உரலும் தொட்டிலுக்கெதிரே தரையில் இருக்கும். இதனைப் 'பாபோத்' (Paboth) என்பர். மலையெனப் பொருள்படும் பர்வதம் என்பதன் திரிபாகும் இச்சொல்.

பத்திரபீடத்தின் அருகே விரித்துள்ள வெள்ளைத் துணியில் அரசகுரு அமர்ந்து சடங்குகளைத் தொடங்குவார். முன்போல் புனிதமாக்கும் சடங்குகளும்,

பழந்தூக்கும் சடங்கும் நிகழும். ஆனால், இப்போது அவல் குவியல் அரசர் பெருமானுக்குத் தருவதற்காக ஒதுக்கி வைக்கப்படும். அங்கு வந்திருப்போருக்கு அதனைக் கொடுப்பதில்லை. அரச குரு இரண்டு மந்திரங்களை ஓதிப் பஞ்சகர்ப்ப வட்டில்களிலிருந்து நீரை வெள்ளிக்கலசத்தில் ஊற்றுவார். பின், தீபம், தூபம், பூ முதலியவற்றை வழிபாடாகத் தருவார். மணியை அடித்துக்கொண்டே சங்கு முழங்கக் கிளை விளக்கு களைக்கொண்டு தீபாராதனை செய்து சங்கையும், கலசத்தையும் சுழற்றி அவற்றைத் தெய்வீகமாக்குவார். அன்னத்திற்கு அபிடேகம் செய்யும் மந்திரங்களை ஓதுவார். தாம் இருந்த இடத்திலிருந்து எழுந்து அன்னத்தின் அருகில்வந்து அம்மிமேல் கால்வைத்து ஏறிக் கலசத்திலிருந்து நீரை ஊற்றி அன்னத்திற்கு அபிடேகம் செய்வார். சங்குகள் முழங்கத் தம் பெருவிரலால் அதன் கழுத்தில் சந்தனப் பொட்டுகள் இடுவார். அதன் அலகில் அமைந்துள்ள விளக்கை ஏற்றுவார். அதன் எதிரில் மண்டியிட்டுமணியை அடித்துக்கொண்டே தீபாராதனை செய்வார். முதலில் ஒரு விளக்கை மட்டும் ஏற்றித் தீபாராதனை செய்வார். பின் எல்லா விளக்கையும் ஏற்றித் தீபாராதனை செய்வார். முடிந்ததும் தம் இடத்திற்குத் திரும்பி வந்து அமர்வார். சிவனாரையும் உமையையும் கணேசரையும் அழைக்கும் மந்திரத்தை ஓதுவார். செம்பொன்னாலாகிய ஒரு பெரிய வட்டிலில் அன்பர்கள் கொண்டு வந்திருந்த புட்டிகளிலுள்ள அத்தரை ஊற்றிக்கொள்வார். பிராசாதத்திலிருந்து விக்கிரகங்களை அவற்றிற்குக் கட்டியதுணியோடு எடுத்து வட்டிலில் வைப்பார். விக்கிரகங்களின் மார்பளவுக்கு அந்த அத்தர்

இருக்கும். சங்கிலிருந்தும், கலசத்திலிருந்தும் தூய நீரைக் கைக்கொண்டு, சங்கங்கள் முழங்க மூன்று விக்கிரகங்கட்கும் அபிடேகம் செய்வார். முத்திரை காட்டி அம்மூன்று விக்கிரகங்களேயும் வட்டிலிருந்து எடுத்துத் தலேமேல் வைத்துத் தூக்கிக்கொண்டு போய்ப் பத்திரபீடத்தில் அமர்த்தி மூன்று மந்திரங் களே ஓதுவார்.

## அன்ன வழிபாடு

ரோசா மலர்கள் நிறைந்த ஒரு சிறு செம்பொன் வட்டிலில் பத்திரபீடத்திலிருந்த விக்கிரகங்களே எடுத் துக்கொள்வார். பின், தாம் இருந்த இடத்திலிருந்து எழுந்து அன்னத்தை நோக்கிச் செல்வார். இடது கையில் விக்கிரகங்களுள்ள வட்டில், வலது கையில் விளக்கு – இவ்வாறு தூக்கிக்கொண்டு அன்னத்தைச் சுற்றிவருவார். ஒவ்வொரு முறையும் அம்மி அருகே வரும்போது அதன்மீது கால் வைத்துச் செல்லுவார். அவ்வாறு வைக்கும்போதெல்லாம் சங்கங்கள் முழங் கும். இரு பார்ப்பனர்கள் வட்டிலிருந்த விக்கிர கத்தை எடுத்து அன்னத்தின் மேல் வைப்பர் (படம் 2) அவ் வன்னத்தின் உடலிலுள்ள விளக்குகளே யெல் லாம் அவ்விருவரும் ஏற்றுவர்; தொட்டிலில் நான்கு மூலேகளிலும் உள்ள விளக்குகளே ஏற்றுவர். அரசகுரு மணியடித்துக்கொண்டே சங்க முழக்கத்தினிடையே தீபாராதனே செய்வார். இடையிடையே அவ்விரு பார்ப்பனரும் தொட்டிலே மெல்ல அசைப்பார்கள். அரசகுரு தம் இருப்பிடத்திற்குப் போய், அன்னத் திற்கும், மலேக்கும் வழிபாடாற்றும் மந்திரங்களேப் படிப்பார்.

அரசகுரு பின்னர்க் " கைலையின் புகழ் " என்ற மந்திரத்தைப் பாடுவார். இந்த மந்திரத்தைச் சயாம் மொழியில் " கைலையின் வாயிலைத் திறத்தல் " என்று கூறுவர். இந்த மந்திரம் தமிழ் மந்திரமாம். இதே மந்திரத்தை அரசனைப் பத்திர பீடத்தில் வைத்து முடிசூடுதற்கு முன்னும் பாடுவது வழக்கம். பின்னர், அருக்கிய நீரை அர்ப்பணம் செய்வார். எட்டு விளக்குகளை ஏற்றி, அவற்றைப் பூவால் அணி செய்து, எட்டுத் திசைகளிலும், திசைக்கு ஒன்ருக வைப்பார். இப்படிச் சுற்றி வரும்போது Tro Dvara (த்ரோ த்வாரா) என்ற மந்திரத்தை ஓதுவார். இது துவாரபாலகர் வழிபாடாகலாம்; அல்லது எட்டுத் திக்கிலும் பலிதருவதும் ஆகலாம். இதே பாட்டினை அரசரின் குழந்தையினை முதன் முதலில் தொட்டிலில் இடும்போதும் பாடுவார்கள். இப் பாட்டினையே இரண்டு பிராமணர்கள் அன்னத்தின் தாலாட்டுப் பாடலாகச் சங்கங்களின் முழக்கத்திற்கிடையே பாடுவார்கள். அரச குரு, "செய்தி அனுப்புதல்", " கடவுளரை வழியனுப்புதல், " " சிவாலயத்தின் கடையடைத்தல் " என்ற மந்திரங்களைப் பாடுவார். Pit Dvāra Sivalai (பிட் த்வாரா சிவாலை) என்று பின்னர் அதை வழங்குவர். Dvara (த்வாரா) என்பது கடைவாயில்; Sivālai (சிவாலை) என்பது சிவாலயம் என்பதன் மரூஉ. சிவாலயத்தைக் " கைலைமலை" என வழங்குவது அவர்கள் வழக்கம்.

அன்னத்தின் வழிபாடு என்பது என்ன என்று பலர் மயங்குகின்றனர். அன்னத்தின் பெயரான 'ஹம்ச' என்பது ஒரு மந்திரத்தைக் குறிக்கும்.

வழிபடுவோன் தன் உயிர்க்குள்ளே உள்ள ஆண்டவனை, வழிபடும் விக்கிரகத்தில் வந்தமர்வதாக நினைத்து வழிபடுவான். பிராணப் பிரதிட்டை என்று நம்மவர்கள் கூறுவார்கள். ஹம்ச மந்திரத்தைக் காட்ட அன்னப் பறவையை அமைப்பதை இராம கிருட்டினரது கூட்டத்தினர் நூலில் காணலாம். இந்த வழிபாடு முடிந்தவுடன் விக்கிரகத்தில் உயிராகப் புகவைத்த ஆண்டவனை மறுபடியும் தன்னுயிர்க்குள்ளே வீற்றிருக்க வாங்கிக்கொள்வது போல் நினைத்து வழிபடுவதும் உண்டு. ஹம்ச மந்திரம் கூறி இதனைச் செய்வது வழக்கம். இதனை அன்னமாகவே படைத்து, அதன் மேல் விக்கிரகங்களை வைத்து வழியனுப்புவதாகக் கருதினர் போலும்.

பிரசாதம்

செம்பொன் வட்டிலில் அபிடேகம் செய்த நறுமணத் தீர்த்தத்தின்மேல், சங்கிலும், கலசத்திலும் உள்ள நீரைத் தெளித்து, புட்டியைக் கொண்டுவந்தவர்களிடம் தீர்த்தத்தை ஊற்றி நிரப்பித் திருப்பிக் கொடுப்பார்கள். ஒரு பார்ப்பனர் காணவந்தவர்களிடையே சென்று அபிடேகத் தீர்த்தத்திலிருந்து சிறிது எடுத்துத் தெளிப்பார்.

மறுநாள், அரசகுருவும் பார்ப்பனர்களும், அரசர்க்கென முன்னாள் இரவு வழிபாட்டின்போது வைத்திருந்த பிரசாதத்தை அரசரிடம் கொண்டு தருவார்கள். இரண்டு தட்டு நிறைய அவலும், இளநீரும், கரும்பும், பலவகை அப்பங்களும் கொண்டுவந்து தருவார்கள்.

" பழத்தை உயர்த்திக் காட்டுவது " என்கிற வழி பாடு பெருமாள் கோயிலில் மட்டும் ஒவ்வொரு மாலே யிலும் தேய்பிறை ஐந்தாம் நாள் வரை நடைபெறும். அன்றிரவு பேரரண்மனைக்கு ஊர்வலம் ஒன்று செல் லும். அங்கிருந்து விட்டுணுவின் சிறிய விக்கிரகத்தை வாங்கிக்கொண்டு கோயிலுக்குத் திரும்புவார்கள். கடவுள் உலகை விட்டுத் தம் உலகினுக்குப் போவ தனைக் கொண்டாடத் தேய்பிறை முதலாம் நாள் கொண்டாடியதைப்போலவே இந்த முறையும் பெரு மாள் கோயிலில் பழையபடி சடங்குகளை நடத்து வார்கள்.

# 3. மந்திரச் சடங்கும் பார்ப்பனரும்

## கார்த்திகை

சயாமியரிடையே தீபாவளி, கார்த்திகை விளக்கு என்று நாம் கூறுவது போன்ற வழிபாடும் இருந் திருக்கக் காண்கிறோம். அவர்தம் ஆண்டு மார்கழியில் தொடங்கும். அவர்களுக்குப் பன்னிரண்டாவது மாதம் கார்த்திகையாகும். அப்போது சூரியன் விருச் சிகத்தில் இருப்பான். கார்த்திகை நட்சத்திரம் நன்றாக விளங்கும்போது விளக்கைக் கொம்பில் அவர்கள் தூக்கிவிடுவது உண்டு. சய தீபத் தம்பத்தை அன்று காலை அரசர் பெருமானார் தீர்த்தம் தெளித் துப் புனிதமாக்குவர். மூன்று தம்பங்கள் இருக்கும். ஒன்பது அடுக்கு வெண்குடைகள் கம்பங்களில் ஒவ் வொன்றின் மேலும் கட்டப்பெறும். வேறு மூன்று தம்பங்களும் இருக்கும். அவற்றில் ஏழடுக்கு வெண் குடைகளே கட்டப்பெறும். அரண்மனை முற்றத் திலேயே இந்தச் சயப்பிரதீபத் தம்பங்கள் நடப் பெறும். அரசர் அவ்வாறு தீர்த்தத்தைத் தெளிப் பதற்கு நீரைப் பார்ப்பனரே தருவர்.

மற்றொரு திருவிழாச் சடங்கும் சென்ற நூற் றாண்டில் நடந்துகொண்டு வந்தது. முதலில் அது கார்த்திகை மாதத்தில் நடைபெற்றது என்றும், பின் னர், ஊஞ்சல் திருவிழா தை மாதத்தில் கொண்டாடப் பெற்றபோது, இத்திருவிழா மார்கழி மாதத்தில் கொண்டாடப்பெற்றது என்றும் கூறுவர் அறிஞர்

வேல்ஸ். நான்கு முழ உயரமுள்ள மூன்று மேடைகளை முன்னே கூறிய மூன்று கோயில்களின் எதிரே அமைப்பார்களாம். ஒவ்வொரு மேடையின் நாற்புறத்தும் மணலும் சாணமும் கொண்டு மலை என்ற பெயரால் நான்கு குவியல்கள் குவிப்பார்கள். ஒவ்வொன்றும் ஒரு முழ உயரம் இருக்கும். நூல் சுற்றிய புதுக் குடங்கள் மூன்றினை "இரத்தின கலசம்" எனப் பெயரிட்டுப் பார்ப்பனர் கொண்டு வருவர். ஒரு துத்திநாகக் குழையில் நான்கு பருத்தித் திரிகளை அமைத்துக் குடத்தில் செருகுவார்கள். குடத்திற்-குள் எள், பருப்பு (நவதானியம்) முதலியவற்றைத் தனித்தனியே துணியில் கட்டி வைப்பார்கள். "தேவ தண்டம்" எனப் பன்னிரண்டு குச்சிகளைக் கொண்டு வருவர். இவை ஒவ்வொன்றும் நான்கு முழ நீளம் இருக்கும். ஒவ்வொன்றின் இரு நுனிகளிலும் துணியைச் சுற்றி வைத்திருப்பர். அரசகுரு இரவானதும் அக்குச்சிகளையும், குடத்தையும் தூய்மைப்படுத்திக் குடத்தில் உள்ள திரிகளை ஏற்றுவார். குடங்களை மேடையின் அருகிருந்த கம்பங்களின் மேல் அமர்த்தி விட்டுக் குச்சிகளின் முனைகளை ஏற்றி, ஒன்றன்பின் ஒன்ருக மலைகளை நோக்கி எறிவார். அவை வீழும் திசையைக் கொண்டு நன்மை தீமை அறிவதும் உண்டு. அரசகுரு இரத்தின கலசத்திற்குப் பொரியைப் பலியாக வழங்குவார். இவ்வாறு மூன்று இரவு இரத்தின கலசத்தில் உள்ளவை எரிந்து கொண்டிருக்கும். மூன்ரும் நாள் கலசங்களைக் கோயிலுக்குக் கொண்டு சென்று தீர்த்தத்தால் நெருப்பை அவிப்பார்கள்.

### நீர்ப்பலி

முதலில் கூறிய சயப்பிரதீபத்தம்ப விழாவோ வைணவர்கள் செய்வது. பின்னே கூறியதோ கார்த்தி கேயன் திருவிழா என வழங்கும். இரண்டும் கார்த்தி கைத் திருநாளின் தொடர்புடையவை என்பதை வற் புறுத்த வேண்டுவதில்லை. "மலை" என அமைத்து, அதன் முடியில் குடவிளக் கேற்றுவது அண்ணுமலைத் தீபத்தை நமக்கு நினைப்பூட்டுவதோடு தமிழ் நாட்டு ஊர்களில் சொக்கபாணம் எரிப்பதையும் நினைப்பூட் டும். கார்த்திகை மாதத்திலும் ஐப்பசி மாதத்திலேயும் வாழைத் தண்டை மிதக்க விட்டு, அதில் கொடி, காகிதக் குடை, புகை, விளக்கு, பூ, பொரி முதலியன வைத்து ஆற்றில் மிதக்க விடுதலும் உண்டு. இது பழையதொரு வழக்கம். ஆற்றினைத் தாயாக வழிபடு வோர் இவ்வாறு வழி படுவதை இன்றும் நம் நாட்டில் காணலாம்; வட நாட்டுக் கங்கையிலும் காணலாம்.

பரிபாடலில், புகையும், பூவும், அவியும், ஆரா தனையும், அழலும் ஏந்தி, மகளிர் வையையை வழிபட் டனர் என ஆரும் பாட்டுப் பாடுகிறது. (6–11).

> "நத்தொடு நள்ளி நடை இறவு வயவாளை
> வித்தி அலையில் விளைக பொலிக......" (10-85, 86)

என்று பெண்கள் பாடி வழிபாட்டுப் பொருள்களை வையையில் இட்டதாக அது கூறும்.

### தெப்பம்

இதுவேயுமன்றித் தெப்பத் திருவிழா நம் நாட்டுக் கோயில்களில் இன்றும் நிகழ்கின்றது. கடவுளர்க் கன்றிப் பொதுமக்களுக்கும் அத்தகைய நீர் மாடங்கள் வாய்த்திருந்தன எனப் பரிபாடலால் அறிகின்றோம்.

சயாமில் அத்தகைய நீர் மாடங்கள் பல, பற்பல விளக்குகளோடு கார்த்திகைத் திங்களில் மிதக்கவிடப் பெறும். அரசர், முதலில், அணி செய்த படகொன்றை மிதக்க விடுவார். அரண்மனைப் பெண்களுள் ஒவ்வொருவரும் அவ்வாறு செய்வர். பொதுமக்களும் தங்களால் இயன்ற அளவு வேலைப்பாடான மிதவைகளை மிதக்க விடுவர். இப்போது இதனைப் புத்தர் திருவடியினை மிதவையில் வைத்து வழிபடுவதென மக்கள் பொருள் கொண்டாலும், கார்த்திகை மாதத்தில் இக் கொண்டாட்டம் நிகழ்வதைக் கருதும்போது இது கார்த்திகை விளக்கேற்றுத் திருவிழாவோடு தொடர்புடைய தென்பதில் ஐயமில்லை.

ஐப்பசி மாதத்திலும் ஆற்றில் விளக்கை மிதக்க விடுவது அங்கேயுள்ள வழக்கமாகும். வளர்பிறைப் பதினாலாம் நாளும், பதினைந்தாம் நாளும், தேய்பிறை முதலாம் நாளும் என மூன்று நாளும் தொடர்ந்து விளக்கு மிதக்க விடும் இத் திருவிழா நடைபெறும். ஐப்பசி மாதமே துலா மாதமாகும். இந்தத் துலா மாதத்தில் காவேரியில் நீராடிக் காவேரியை வழிபடுவதை நம் மக்கள் சிறப்பாகக் கருதுவதை மனத்திற் கொள்ள வேண்டும்.

கார்த்திகை விளக்கீட்டைக் கார்த்திகேயன் திருவிழா என்றே சயாம் நாட்டில் வழங்கினர். ஆதலின் கங்கா என்று அவர்கள் கொள்ளும் வடிவம் காங்கேயனுகை இருக்கலாமென நாம் கூறியது வலுப்பெறுகின்றது. கார்த்திகை விளக்கீட்டுத் திருவிழாவோடு ஊஞ்சல் திருவிழாத் தொடர்புடையதென ' வேல்ஸ் ' என்ற அறிஞர் கருதுவதும் (பக்கம் 290) இங்குக் குறிக்கத்தக்கதாம்.

## கிழக்கிந்தியத் தீவுகளில் பார்ப்பனர்

கிழக்கிந்திய நாடுகளில் தென் இந்தியப் பண்பாடு பரவியதனை அங்குள்ள தென்னிந்திய கிரந்த எழுத்துக் கல் வெட்டுக்களும், மகாபலிபுரம் போன்ற கோயில் அமைப்புக்களும் நன்கு நிலை நாட்டுகின்றன.

ஏழாவது நூற்றாண்டில் கம்புச நாட்டிலிருந்து வரும் ஒரு கல்வெட்டு, பவவர்மன் தன் தம்பி சித்திர சேனனுடன் சேர்ந்து பழைய புனன் (Funon) நாட்டிற்குத் தன் நாடு அடங்கியிருந்த நிலைமையைத் தள்ளிக் களைந்து விடுதலை தந்தான் என்று கூறுகிறது. சித்திரசேனன் பவ வர்மனுக்குப் பின் அரசனானான். இவன் கி. பி. 589-க்கும் 608-க்கும் இடையே வெற்றியுடன் வாழ்ந்தான் எனத் தெரிகிறது. சித்திரசேனன் மகேந்திரவர்மன் எனத் தனக்குப் பெயர் வைத்துக் கொண்டான். (South Indian Influences in the Far East - Page 37) அதே காலத்தில் வாழ்ந்த பல்லவ மகேந்திர வர்மனுக்கும் இவனுக்கும் தொடர்பு இருக்குமா என நம் மனம் கேட்கின்றது. பதினாலாவது நூற்றாண்டில் சாவாவை ஆண்ட சயநகரன் அக்காலத்தில் பாண்டியப் பேரரசனாய் இருந்த சுந்தர பாண்டியனுடைய பெயரையே தன் பட்டப் பெயராகக் கொண்டு முடி சூடிக்கொண்டதோடு பாண்டியரது இரட்டை மீனையும் தன்னுடைய இலாஞ்சனையாகக் கொண்டான் என்று அறிவதால் (Ibid. page 136) சித்திர சேனனும் மகேந்திரவர்ம பல்லவனுடைய பெயரைச் சூடிக்கொண்டானோ என்ற ஐயம் எழுவது இயல்பேயாம். அதே ஏழாம் நூற்றாண்டில் கம்புச

மன்னன சயவர்மனது கல்வெட்டே காஞ்சிபுர அரசனைச் சுட்டுகிறது என்பதும் இங்கே குறிக்கத் தக்கதாம்.

திருமால் சாவாவின் குடிமக்கள் சோழர், பாண்டியர் என்ற குடிப்பெயர்களை இன்னும் வைத்து வாழ்கிருர்கள். விட்டுணு வழிபாடும், சிவ வழிபாடும் கீழைத் தீவுகளில் பரவியிருந்தன. சிவவிட்டுணு விக்கிர கங்கள் இன்றும் அங்கே கிடைக்கின்றன.

''மகரிஷி கம்பு'' என்பவரின் வழிவந்தவர்களும், கவுணியன் ஒருவனின் வழிவந்தவர்களும் அங்கே சென்று நாட்டை வளப்படுத்திச் சம்பாவை ஆண்டனர் எனக் கதைகள் கூறும். சம்பா என்பது காவிரிப் பூம் பட்டினத்தின் மற்ருெரு பெயரை நினைப்பூட்டு கின்றது. கவுணியரான ஞானசம்பந்தர் வாழ்ந்த சீகாழிக்கும் சண்பை என்ற பெயருண்டு.

சிவபாத வழிபாடும் கீழைத்தீவுகளில் சிறந்து விளங்கியது. இந்த அறிவு கொண்டுதான் அப்பரடிகள் '' ஐயாறன் அடித்தலமே'' என்று பாடுவதன் உண்மைப் பொருளை நாம் அறியமுடிகின்றது. புத்தரது திருவடியையும், திருமாலின் திருவடியையும் வணங்கியதுபோலச் சிவபெருமானது திருவடியையும் வணங்கிவந்த வழக்கம் நமக்குத் தெரியவருகிறது. ஒன்பதாவது நூற்ருண்டின் பிற்பகுதியில் எழுந்த ஒரு கல்வெட்டு, சங்கராச்சாரியாருடைய மாணவர் என்று அந்நாட்டு அரசகுருவான சிவ சோமனுரைக் குறிக்கின்றது. (Coedes - Inscriptions - page 40) பாசுபத மதம் அங்கே பரவியிருந்தது, பலசைவ ஆச்சாரியர்களின் பெயர்களையும் அங்கே காண்

கின்றோம். முடி கழித்தல் முதலான பல சடங்கு களும் அந்நாடுகளில் பரவியிருந்தன. இச்சடங்கு களைச் செய்து வைப்போர் பார்ப்பனரே.

## தமிழ்ப் பார்ப்பனர்

கம்புசத்தில் இன்றும் (Phnom-Ponch) பகு என்கிற அரண்மனைப் பார்ப்பார்கள் வாழ்கின்றார்கள். அவர்கள் குடுமியும், பூணூலும் கொண்டு விளங்கு கிறார்கள். சம்பா நாட்டிலும் முன்னிருந்த பார்ப் பனர்கள் இசுலாமியரான பின்னும் "ஆச்சாரியர்", "குரு" என்ற பட்டம் பெற்று உள்ளார்கள். இப்போதுள்ள பார்ப்பனர் "பஸ்ஸே" என்று அழைக்கப்படுகின்றனர். இது "தபஸ்வி" என்ற சொல்லின் மரூஉ என்று அறிஞர் கொள்கின்றனர். (South Indian Influences in the Far East P. 62). சயாமிலுள்ள பின்னுளைய ஓலைச்சுவடிகள் சில, அவர் கள் இந்தியாவிலிருந்து எட்டாம் நூற்றாண்டில், பர்மா வுக்கும், சயாமுக்கும் சென்ற கதையைக் கூறும்.

சயாமிலே இந்தியாவில் அகப்படுவதுபோல, கிரேக்க, ரோம விளக்கொன்றைக் கண்டெடுத்துள் ளார்கள். தென்னாட்டிலிருந்து இவ்விளக்கு அங்கே போயிருக்கலாம். ஸ்ரீ தேவ் என்ற இடத்தில் செங் கல்லால் கட்டிய ஒரு வைணவக் கோயில் உள்ளதைக் கண்டுபிடித்துள்ளார்கள். அங்கேயுள்ள அரண்மனை களிலும், கோவில்களிலும் இந்துமதத்தைச் சார்ந்த வைணவமும், சைவமும் பரவியிருந்தன என்பதற்குப் பல சான்றுகள் உள்ளன.

பௌத்தமதம் பின்னர்ப் பரவியபோது அது மேலோங்கியது. சைவ, வைணவ விக்கிரகங்கள்

பௌத்தர் கோயிலுக்குள் புகுந்தன. நாராயண என்ற பெயர் மருவி நரை என்ருகி ஓர் ஊரின் பெயராக விளங்குகின்றது, (South Indian Influences in the Far East - page 74)

சயாமிலும் பல பார்ப்பனர் அரண்மனையைச் சார்ந்திருந்தனர். இப்போது குடியரசு வந்தமையால் இவர்களுக்கு அரசியலில் பங்கொன்றும் இல்லை. ஆனல், முப்பது ஆண்டுகளுக்கு முன் இங்கே சென்ற அறிஞர், எண்பது பார்ப்பனக் குடும்பங்கள் இருந்தன எனக் கூறுகின்ருர். மூன்று கோயில்கள் உள்ளன என முன்னர்க் குறிப்பிட்டோம். அவற்றைச் சுற்றியே இவர்கள் வாழ்கின்ருர்கள். இவர்களுடைய நீண்ட குடுமியைக் கண்டே இவர்களைப் பிரித்தறியலாம். (படம் 7) பட்டாபிஷேகம் செய்யும் சிறப்பும் இவர்களுக்கு இருந்தது. இவர்களுடைய தலைவர் மகாராசகுரு என்ற பட்டத்தோடு வாழ்ந்தார். பட்டாபிடேகத்திற்குப் போகும்போது யானைமேல் ஏறிச்சென்ருர். தாய் நாட்டு மக்கள் சயாமை வென்ற போது அவர்கள் பழைய மரபைப் பாதுகாத்து மக்கள் கண்ணில் உயர்வதற்காகப் பழைய சடங்குகள் இயற்றப் பார்ப்பனர்களைக் கொண்டுவந்து குடியேற்றினுர்களாம்.

1821இல் வாழ்ந்த பார்ப்பனர்கள் இராமேசுவரத்திலிருந்து அங்குக் குடியேறிய பார்ப்பனக் குடும்பத்தின் ஐந்தாம் தலைமுறையினர்தாம் எனக் கூறினுர்களாம். (Crawford-Embassy to Siam, London-1828. Page 119). இப்போதுள்ள பார்ப்பனர்கள் காசியிலிருந்து வந்ததாகச் சொல்லிக்கொள்கிருர்கள். இவர்

கள் பிற்காலத்தில் வந்தவர்களாகலாம். இவர்கள் வெள்ளைச் சட்டை உடுத்தியிருந்தனர். தலைமைக் குருவின் சட்டையில் வெள்ளிப் பூ வேலை விளங்கும். (படம் 7).

இப்போது இவர்கள் தூய பார்ப்பனர் என்று சொல்வதற்கில்லை. கடல்கடந்து வந்தபோது தங்கள் இனப் பெண்களைக் கொண்டு வாராமையால் தாம் வந்த நாட்டிலேயே தலைமுறை தலைமுறையாக மணம் செய்துகொண்டு பெரும்பான்மையும் அந்நாட்டினராகவே இன வகையில் விளங்கினுர்கள் எனலாம். இவர்கள் பேசுவது சயாம் மொழியே ஆம்.

ஆனுல், இவர்களுடைய மந்திர நூலில் மந்திரங்களெல்லாம் வடமொழியாகவே இருக்கக்காண்கிருேம். அதிலே ஒரு மந்திரம் தமிழ் மந்திரம் என்றும், இந்திய லிபி ஒன்றில் எழுதப்பட்டுள்ளது என்றும் அறிகிருேம். சடங்குகளைச் செய்யும் முறையெல்லாம் சயாம் மொழியிலேயே உள்ளனவாம். இந்தப் பார்ப்பனக் கையேடுகள் பாங்காக் நூல் நிலயத்தில் 1931-இல் இருந்தன என்று அறிஞர் வேல்ஸ் கூறுகிருர். (Siamese Court Ceremonies. page 56).

இந்தச் சடங்குகளில் பௌத்தமதக் கூறுகளும் புகுந்துள்ளன. அவர்கள் இப்போது பௌத்தர்களாகவே விளங்குகிருர்கள். அவர்கள் பார்ப்பனராக ஆவதற்கு உபநயனம் போன்ற சடங்கு ஒன்று நிகழும். அதில் மூன்று இழை உள்ள பூணுலை அணிந்துகொள்வார்கள். பின்னர் ஒரு சடங்கு நிகழும்; அப்போது ஆறிழைப் பூணூல் பூணுவார்கள்.

அரசனைக் கடவுளாக வழிபடும்கொள்கை கீழைத் தீவுகளில் பரவியது. நம்மாழ்வார் 'திருவுடை மன்னரைக் காணின் திருமாலைக் கண்டேனே என்னும்' என்று பாடுவது அரசனைத் திருமாலாகக் கொள்கின்ற கருத்தை வலியுறுத்தும். அங்கோர்வாட் என்ற பெரு நகரமும் கோயிலும் இந்தக் கொள்கையில் முடிமணி எனலாம். தேவராசர் என்று அரசர்கள் தங்களை வழங்கிக்கொண்டார்கள். அவர்கள் இறந்தபோது அரசர்களைத் திருமாலாகவோ சிவனாகவோ கோயில் கட்டி வழிபடுவதுண்டு. தமிழ்நாட்டுப் பள்ளிப்படைக் கோயில்கள் இங்கே நம் நினைவுக்கு வரும். இந்தத் தேவராச வழிபாடு வளர்ந்தபோது பார்ப்பனர்கள் அதனைக் காப்பவர்களாகி அரசர் அருளால் சமுதாயத்தில் சிறந்ததோர் இடம் பெற்றனர். பார்ப்பனர், கேரளத்தில் போல, அரச குடும்பத்தில் மணம் செய்து கொண்டனர். புத்தமதம் பரவியபோதும் பட்டாபிடேகம் முதலிய ஆரவாரச் சடங்குகளைச் செய்து மக்கள் உள்ளத்தைக் கவர அப்பார்ப்பனர்கள் அரசியலின் இன்றியமையா உறுப்பினராயினர். ஆனால், இப்போதுள்ளவர்கள் ஒன்றும் அறியாதவர்களேயாம்.

### மந்திர ஏடு

இவர்கள் மந்திரம் எழுதிய ஏடுகளில் கீழ்க்காண்பவை உள்ளனவாம். (Wales p. 63)

முதற் பகுதி: எட்டுத்திக்குகளின் வழிபாடு; அன்ன வழிபாடு; யட்ச வழிபாடு; சிவாலயக் கடை திறப்பு.

இரண்டாம் பகுதி: பூசை; பஞ்ச கௌவ்யம்; வாஸ்து பூசை; கலச பூசை; கும்ப பூசை; இராச

ஹம்ச பூசை ; மகாகணபதி பூசை ; அரசனைப் பின் பற்றி நடப்பதற்குத் தீர்த்தத்தைக் கடவுள் தன்மை உடைய தாக்கல்.

மூன்ரும் பகுதி : ஹம்ச பூசை; நவக்கிரக பூசை; ஓம குண்டம் ; நீராஞ்சன பூசை ; அனுமான் மந்திரம்; பிராத்திய பூசை. (?)

நான்காம் பகுதி : ப்ரஹ் அபிஸீத் (?) பூசை முறை (இது தமிழாயிருப்பதைக் காண்க) ; Praj Brath – சிவாலயக் கடைவாயிலை மூடுதல்.

ஐந்தாம் பகுதி : கடவுளரை அழைத்தல் ; யம்பு (?) வழிபாடு ; சிவன், உமை, விநாயகர் வழிபாடு ; சந்திர நமஸ்காரம் ; வேதம்

ஆரும் பகுதி : யானைத் திருவிழா.

ஏழாம் பகுதி ; பழத்தை உயர்த்துதல் ; மூன்று கோயில்களிலும் பூப்பலி இடுதல்.

### பட்டாபிடேகம்

பட்டாபிடேகத்தின்போது பார்ப்பனர் முன்னே போக அரசர் பின்னே செல்வார். எட்டுக்கோண மான அரசுகட்டிலில் அரசர் அமர்வார். (Wales p.78) பாலி மொழியால் அந்தப் பார்ப்பனர் அரசரை வாழ்த் துவர். அரசர் பாலியில் அவர் கூற்றை ஏற்று, நாட் டையும், மக்களையும், பௌத்த மதத்தையும் காக்க அரசேற்பதாக உறுதி கூறுவார். அங்கிருந்து அரச சின்னங்களோடு பட்டாபிடேகத்திற்குச் செல்வார். பத்திரபீட அரசு கட்டிலில் அரசர் அமர்வார். (Wales p. 83). அப்போது ஏழடுக்குக் குடையே மேலிருக்கும். பட்டாபிடேகமானவுடன் ஒன்பதடுக்குக் குடை

அங்கே வைக்கப் பெறும். அரசர் முழு இறைமையைப் பெற்ருர் என்பதற்கு அது அடையாளமாகும். சிவஞரை வழிபடும் அரச குரு அரசர் எதிரே வந்து வணங்கியபின் சயாம் மொழியில் 'கைலாசக்கடை திறப்பு' என்று வழங்கும் தமிழ் மந்திரத்தை ஓதுவார். அரசருடைய பட்டங்களை எழுதிய பொன் ஏட்டை அரசர் கையில்தந்து, பாலியில் அரசரை அரசேற்க வேண்டிக்கொள்வார். "அப்படியே ஆக" என்று அரசரும் பாலியில் விடை தருவார். பாலியில் கூறியதையே சயாம்மொழியில் மறுபடியும் இருவரும் கூறுவர் (Wales p.84). அரசகுரு வெற்றி முடியை, அதனை எடுத்து வந்தவர் கையினின்றும் வாங்கி, அரசர் கையில் தருவார். அரசர் தாமே முடியை அணிந்து கொள்வர். கொண்டுவருபவர் யார் என்பதை அறிஞர் வேல்ஸ் குறிப்பிடவில்லை. கம்பர், சடையப்பரின் குலத்தவரே சோழரது திரு முடியைக் கொண்டு வந்ததாகவும், அதை எடுத்துப் பார்ப்பன முனிவரான வசிட்டர் இராமனுக்குச் சூட்டினதாகவும் பாடுகிருர். சயாமில் பார்ப்பனர் பெருமை குறைந்து விட்டதன் காரணமாக அரசர் தாமே முடியை எடுத்து அணிந்து கொள்கிருர் போலும். ரஷ்ய நாட்டு சார் அரசரும் இவ்வாறு முடியைத் தாமே சூடிக் கொள்வது வழக்கமாம்.

அரசகுரு பின் அரச சின்னங்களை ஒவ்வொன்ருகத் தருவார். திருமால் கோயில் பார்ப்பனர் ஒன்பதடுக்குக் குடையைத் தருவார். (Wales p. 84) அவரும் அரசகுரு போலவே பாலியிலும் சயாம் மொழியிலும் பேசுவார். முடிவில் சிவன் கோயில் அரச குரு மண்டியிட்டு வாழ்த்துவார் (Wales p . 85).

கைலைக் கடைதிறப்புப் பாடுவது சிவனாரை வழி படுதற்காக அழைப்பதாகும். பட்டாபிடேகத்தன்று அதனைப்பாடுவது அரசரைச் சிவனாகக் கொள்வதற் குரிய அறிகுறியாகும். அரசர் பட்டங்களில் ‘ திவ்ய தேவாவதாரம் ’என்பதும் ஒன்று. இங்கே தமிழ்ப் பாட்டு ஒன்றை மந்திரம் என்று பாராட்டுவதைக் குறிப்பிட வேண்டும். சிவன் கோயில் பார்ப்பனருக்கு முதலிடம் அமைந்ததையும் மறந்து விடுதலாகாது. முற்காலத்தில், சைவமும் வைணவமும் நாட்டில் தலைமை பூண்டதையும், அப்போது தமிழுக்கு இருந்த மந்திரச் சிறப்பையும் இவைகொண்டு உய்த் துணரலாம்.

---

# 4. மார்கழி நோன்பு

## மார்கழி – தை

உலகின் வட முனையில் இருப்பவர் நம்மைப் போலப் பகலெல்லாம் வெயிலிலும், இரவெல்லாம் இருட்டிலும் வாழ்வதில்லை. அவர்களுக்குப் பகலென்பது ஆறுமாத மாகவும், இரவென்பது ஆறுமாத மாகவும் நீண்டிருக்கும். சூரியன் வடக்கேயிருந்து தெற்கே போவதுபோலவும், பின் ஆறு திங்க ளானதும் தெற்கேயிருந்து வடக்கே திரும்பிப் போவது போலவும் நமக்குத் தோன்றுகிறன். வடக்கு நோக்கிப்போகும் ஆறு திங்களை உத்தரா யணம் எனவும், தெற்கு நோக்கிப்போகும் ஆறு திங் களைத் தட்சணுயனம் எனவும் வழங்குகிறோம். வட முனையில் தட்சணுயனமே இரவுக்காலம்; உத்தரா யணமே பகற்காலம். தை மாதத்திலிருந்து ஆறு திங்களை உத்தராயணம் என்றும், ஆடியிலிருந்து ஆறுதிங்களைத் தட்சணுயனம் என்றும் வழங்கு கிறோம். புராணங்கள். தேவர்களுக்கு ஓராண்டு ஒரு நாள் என்றும், உத்தராயணமே பகல் என்றும், தட்சணுயனமே இரவென்றும் கூறும். இந்த நிலை யில் தைமாதத்திற்கு முந்திய மாதம் செவ்வானக் காலமாகும். அந்த நிலையில் மார்கழி மாதம், இருளில் நீண்ட காலம் புழுங்கியவர்களுக்குத் துன்பமெல்லாம் நீங்கிப் பொழுது விடியும் காலமாக இன்பமூட்டுவது இயல்பே. வட முனையில் வாழ்ந்த வாழ்வின் நினைவே அந்த இனத்தின் நினைவில் தங்கிவிட

அதனையே தேவ ஆண்டாகப் புராணம் பேசியிருக்க லாம் எனக் கருதுவாரும் உண்டு. நாள் விடிவ தென்றல் நம் கணக்கில் ஆண்டு பிறப்பதேயாகும்.

திருவாதிரை ஒரு காலத்தில் சூரியராசியின் தொடக்கமாக இருந்ததாம். பூமியின் சுழற்சியின் பயனாக இவ்வாறு தொடங்குமிடம் பல நூற்றாண்டு களில் மெல்ல மெல்ல மாறி வருமாம். திருவாதிரை யிலிருந்து கார்த்திகை முதலாக மாறியிருந்த கால மும், அசுவினி முதலாக மாறியிருந்த காலமும் உண்டு. இப்போது பூரட்டாதி முதலாக உளது என்பர். திருவாதிரை முதலாக இருந்தகாலத்தில் வேதம் எழுதப்பட்டது என்பது திலகரது கொள்கை. கார்த்திகை மாதமே ஆண்டின் முதல் மாதமாக இருந் ததும் உண்டு. அது மாறிப்போன பின்னும்கூட மக்கள் அதனையே முதலாகவைத்து எண்ணி வந்த னர். ஞானசம்பந்தரது கோளறு பதிகத்தில் வழி நடைக்கு ஆகாத நட்சத்திரங்களைக் குறிப்பிடும் போது "ஒன்பதோடு ஒன்றோடு ஏழுபதினெட்டோடு ஆறும் உடனாய நாள்கள்" என்று கிருத்திகையை முதலாகவைத்தே எண்ணுகிறார் என்பர். ஆனால் அவருக்கு முன்காலத்திலேயே அசுவினி முதலாக வைத்து எண்ணப்பட்டு விட்டது. வட நாட்டில் வருடப்பிறப்புத் தீபாவளியன்று பிறப்பது இதனை ஒட்டியே எனலாம்.

அங்கு வழங்குவது சந்திரனை அடிப்படையாகக் கொண்டு வழங்கும் சாந்திரமானக் கணக்காகும். இனி, சூரியன் அசுவனியில் முதலாக இருப்பதைக் கொண்டு வழங்கும் சௌரமானக் கணக்கின்படி

தென்னாட்டில் சித்திரைமாதமே ஆண்டின் முதல் மாதமாகிறது. இப்போது அசுவினி முதலாகாமல் போனாலும், பழைய கணக்குப்படியே நாம் வழங்கி வருகிறோம்.

ஓர் அமாவாசையிலிருந்து மற்றோர் அமாவாசை வரை ஒரு சாந்திரமான மாதமெனக் கணக்கிடுவது வழக்கம். சூரியன் ஓரிராசியில் புகுவதனைச் சங்கி ராந்தி என்பர். மகர ராசியில் புகுவதனை மகர சங்கி ராந்தி என்றும் மகா சங்கிராந்தி என்றும் வழங்குவர். இந்தப் பெருநுழைவு, அது நிகழும் தைமாதம் ஆண் டின்முதலாக இருந்ததைக் குறிக்கலாம். அறுவடைத் திருவிழாவாகவும் அது அமைகிறது. அதனைப் பொங்கல் திருவிழா என இன்று நாம் கொண்டாடு கிறோம்.

## மார்கழி நோன்பு

மார்கழியும் தையும் முன்பனிக்காலம்; மாசியும் பங்குனியும் பின்பனிக்காலம். பனிக்காலத்தில் குளிர் மிகுதியாம். இக்குளிரிடையே மிகக் குளிர்ந்திருக்கும் நீரில் மூழ்குவது ஓர் அருமையேயாம், ஆனால் அவ் வாறு குளித்தவுடன் இயற்கைச் சூடொன்று உடம் பில் வருவதால் ஓர் இன்பந் தோன்றுகிறது. இயற் கையை எதிர்த்து ஒரு நோன்பு நோற்றோம் என்ற எண்ணம் தோன்றுகிறது. கடவுள் அருள்பெற இது நல்ல வழி என்று கருதிய காலமும் உண்டு. தைந் நீராடல் என்று இதனை ஒரு நோன்பாக முன்னோர் நோற்று வந்தனர். இதனைப் பரிபாடல் குறிப்பிடு கின்றது. 'அம்பா ஆடல்' என்ற சொற்றொடரும்

இப்பரிபாடலில் வரக்காண்கிறோம். மணமாகாத பெண்கள் இந்த நோன்பு நோற்பர்.

'அம்பா ஆடல்' என்பதற்குத் தாயுடன் ஆடுதல் என்று பொருள் கூறுவர். அம்பாவை என்பதே அம்பா என நிற்பதாகக் கொள்ளக் கூடுமோ என் ஆராய்தல் வேண்டும். பாவை போல ஒரு பெண் பிள்ளையின் - தாய்க் கடவுளின் - வடிவை அமைத்து வணங்கி வழிபட்டுப் பின் நீராடுவர் என்று இந்த நோன்பினைப்பற்றிக் கூறுவர். பாவை நோன்பு நோற்றார் விரும்பத்தக்க சிறந்த கணவனைப் பெறுவர் என்பது அந்தக் காலத்து நம்பிக்கை. இது நாட்டில் மழை பெய்ய நோற்கும் நோன்பாகும். கற்பே மழை யைத் தரும் என்று நம்பிய தமிழுலகம் இக்கன்னியர் நோன்பை மழைக்கென நோற்கும் நோன்பாகவும் கருதியது.

பின்னர் இந்த இரண்டையும் வேறு பிரிப்பதும் வழக்கமாகிவிட்டது. தை யொரு திங்களும் தரை விளக்கிக் காமதேவனை வழிபட்டுக் கணவனைப் பெறு வது ஒரு நோன்பாயிற்று. இதனை ஆண்டாளும் பாடு கின்றார். மழையை விரும்பிப் பாடுவது பழமை போல அம்பா ஆடலாகவே விளங்கியது. இது நாளடை வில் ஆண்டாள் கையிலும், மாணிக்கவாசகர் கையி லும், தெய்வ நோன்பாக மாறியது. இது ஆதிரை நோன்பாகவும், மற்றொன்று தைப்பூச நோன்பாகவும் வளர்ந்தன போலும். காமன் வழிபாடு வடநாட்டு ஹோளிப்பண்டிகையை நினைவூட்டுகிறது. பொது வாக இவ்விழாக்களைப் பனிக்கால விழாக்கள் என்று கூறலாம். மார்கழியும் முன் பனிக்காலமே ஆதலின்

அதிலே அம்பா ஆடல் சிறப்பாகக் கொண்டாடப் பட்டது. சங்க காலத்தில் தைந்நீராடலாக இருந்தது, ஆண்டாள் காலத்தில் மார்கழி நீராடலாக மாறியது.

திருவெம்பாவை - திருப்பாவை தமிழ் நாட்டில் தோன்றிய காலத்தில் இந்த நோன்பு மார்கழித் திங் களிலேயே நடைபெற்றது.

திருப்பாவை,

" மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால்
நீராடப் போதுவீர் போதுமினோ நேரிழையீர் "

என்றே தொடங்குகிறது. திருவெம்பாவையும்

" போற்றியாம் மார்கழிநீர் ஆடேலோர்
எம்பாவாய் "

என்றே முடிகிறது.

நீராடல் தையும் மார்கழியுமாய் மாருடியதோடு துலாக்காவேரி ஆருட்டாகவும், மாசிக் கடலாட்டாகவும் வரும் நீராடலோடும் மாருடியதனை மாக புராண அம் மானையின் முன்னுரையில் விளக்கியுள்ளேன். சயாமி லும் இவ்விழா மார்கழி மாதத்தில் நிகழ்ந்ததாம். பிற் காலத்தே தை மாதத்தில் நிகழ்ந்தது எனச் சயாம் அர சர் கூறியதாக வேல்ஸ் அறிஞர் குறிப்பிடுகிருர். தாங் கள் வரவழைத்தாலன்றிக் கடவுள் இந்தத் திருவிழா வில் வாரார் ; ஆதலின் தாங்கள் மார்கழியில் அழை யாது தையில் அழைத்தாலும் சிவனுர் வருவார் என்று அப்பார்ப்பனர்கள் இந்த மாருட்டத்தை விளக்கினுர் களாம். இதற்கு வேறு காரணம் இருத்தல்வேண்டும்.

## வடமொழிக் குறிப்பு

மார்கழித் திங்களைச் சிறப்பித்துப் பேசும் வழக் கத்தை வடமொழி நூல்களிலும் காண்கிருேம்.

"மாதங்களில் நான் மார்கழி மாதம் ஆகின்றேன்." என்று கண்ணன் கீதையில் பேசுகின்றான். வால்மீகியும், பஞ்சவடியில் இராமர் இருக்கும்போது, இலக்குமணன், இராமனுக்கு விருப்பமான பனிக்காலம் வந்ததென்றும், இந்த மார்கழி மாதத்திலேயே ஆண்டு முழுவதும் அணி பெறுகிறதென்றும் இராமனிடம் கூறுவதாகப் பாடுகின்றார். பெண்கள் அழகைப் பெற விரும்பினால் செய்யும் நோன்பு ஒன்றை விஷ்ணு தருமோத்த புராணம் கூறுகிறது. இந்த நோன்பு மார்கழியில் கடவுளை நோக்கி நடைபெறும் என்றும், அப்போது அவியுணவே கொள்ளுதல் வேண்டும் என்றும் அந்தப் புராணம் கூறுவதைக் காணலாம்.

அம்பா ஆடல் என்பதற்கும் உலகத் தாயின் வடிவைப் பாவையாக அமைத்து வழிபடுவது என்று பொருள் கூறலாம் என்று கண்டோம். (இது காலஞ்சென்ற மு. இராகவையங்கார் அவர்களின் கொள்கை.) பாகவதம் மார்கழி மாதத்தில் ஆயர் மகளிர் காத்தியாயினியை வழிபட்டு, அவியுணவு உண்டு கண்ணனை அடைந்தார்கள் என்று கூறுகிறது. இவ்வாறு வருகின்ற வடநூற் குறிப்புக்கள் தென்னாட்டின் தொடர்பால் எழுந்தன போலத் தோன்றுகின்றன. தென்னாட்டுப் பிரதிகளிலன்றிப் பிற நாட்டுப் பிரதிகளிலும் பழங் காலத்தில் இக் குறிப்புகள் இருந்தனவா என்பது பற்றி ஆய்தல் வேண்டும். பாகவதம் தென்னாட்டில் எழுந்தது என்பர். காத்தியாயனி விரதத்தைப் பற்றிக் கூறும் பகுதி ஆண்டாள் பாடும் திருப்பாவையை மனத்தில் வைத்து எழுதியது போலத் தோன்றுகிறது என்பா.

## பாவை நோன்பு

காத்தியாயினி விரதத்தைப் "பாவை நோன்பு" என்பாராகலின் 'எம்பாவாய்' எனப் பாவையை நோக்கி முதலில்பாடிய பாடல்களாகப் பாவைப் பாட்டெல்லாம் அமைதல் வேண்டும். 'ஏலோர் எம்பாவாய்' என்ற தொடர் ஒவ்வொரு பாட்டிலும் முடிவாக வருவதே பாவைப் பாட்டின் போக்கு. இப்பாட்டுப் பொதுமக்களிடத்திலே மத வேற்றுமை கருதாது வழங்கிய தென்று கொள்ள இடமுண்டு. யாப்பருங் கலத்தின் உரையாசிரியர், வேறு மதத்தினரும் பாவைப் பாடல் பாடினர் என்று நாம் முடிவு செய்யக் கூடிய வகையில், பாவைப் பாட்டு எல்லாம் குறில் அகவல் தூங்கிசை வண்ணம் என்று எழுதுகிருர்.

## நோன்பு

நோன்பு என்ற கருத்தும் உண்டு. அவியுணவு உண்ணுதலைப்பற்றி வடமொழி நூல்கள் கூறியதைக் கண்டோம். ஆண்டாளும் "பாலுண்ணோம் நெய் யுண்ணோம் கோல அணிகளெல்லாம் பூணோம்" என்று கூறுவார்; இதிலிருந்து இந்த நோன்பின் கடுமை விளங்கும். அதுமட்டுமே யல்லாமல் அறம் செய்தலும் வற்புறுத்தப் படுகிறது. அவர் ஐயமும் பிச்சையும் ஆந்துணையும் கைகாட்ட வேண்டுமெனப் பாடுகிருர். நோன்பு முடிந்த பின் எல்லா அணிகளை யும் அணிவதோடு முழங்கை வழியே நெய் ஒழுகச் சிறந்த உணவை உண்ணுவதனையும் அந்த அம்மை யார் குறிக்கின்ருர். சயாமில் நடந்த ஊஞ்சல் திருவிழா விலும் பார்ப்பனர்கள் இவ்வாறு நோன்பு நோற்கப்

பார்க்கிறோம். பெண்களின்றி ஆண்களே அங்கு நோற்கின்றனர். இன்று தமிழ் நாட்டில் ஆண்களும் பாவைப் பாட்டுப் பாடுகின்றனர். சயமியர்கள் சைவ உணவே கொள்ளுதல் வேண்டும்; மனைவியைப் பிரிந்து வாழ வேண்டும்; அதிலேயும் மகாராச குரு சிவன் கோயிலிலேயே திருவிழா முடியும் வரை வாழ்தல் வேண்டும். நோன்பென்ற அடிப்படைக் கருத்து இவ்வாறு அங்கே விளங்குவதைக் காணலாம்.

## மழை நோன்பு

இரண்டாவதாக இது மழையை வேண்டி நிற்கும் நோன்பு என்பதும் விளங்குகிறது.

*ஆழி மழைக்கண்ணா ஒன்றுநீ கைகரவேல்*
*ஆழியுள் புக்கு முகந்துகொடு ஆர்த்துஏறி*
*ஊழி முதல்வன் உருவம்போல் மெய்கறுத்துப்*
*பாழியம் தோள் உடைப் பற்பநா பன்கையில்*
*ஆழிபோல் மின்னி வலம்புரிபோல் நின்றுஅதிர்ந்து*
*தாழாதே சார்ங்கம் உதைத்த சரமழைபோல்*
*வாழ உலகினில் பெய்திடாய் நாங்களும்*
*மார்கழி நீராட மகிழ்ந்துஏல்ஓர் எம்பாவாய்.*

*(திருப்பாவை 4)*

என்ற பாடலில் ஆண்டாள் மழையை வேண்டிப் பாடுவதனை காணலாம். மழையின் பலவேறு நிலைகளையும் ஆண்டவனோடு ஒன்ருக்கிப் பாடுகின்ற சிறப்பே "ஆண்டவன் அருளே மழை" என்ற கருத்தை விளக்குகிறது எனலாம். மணிவாசகப்பெருமானும்,

*முன்னிக்கடலைச் சுருக்கி எழுந்துடையாள்*
*என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையாள் இட்டிடையின்*
*மின்னிப் பொலிந்துஎம் பிராட்டி திருவடிமேற்*
*பொன்னஞ் சிலம்பில் சிலம்பித் திருப்புருவம்*

*என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்*
*தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு*
*முன்னி அவள்நமக்கு முன்சுரக்கும் இன்னருளே*
*என்னப் பொழியாய் மழையேலோர் எம்பாவாய்*
(*திருவெம்பாவை 16*)

என்று வேண்டிக் கொள்வதைக் காண்கிறோம்.

பண்டைக் காலத்துத் தமிழர் வழிபாடெல்லாம் தனி யொருவர் வழிபாடாகாமல் சமுதாயத்தின் நலங் கருதிய வழிபாடாகவே விளங்குவதைச் சிலப்பதி காரத்தில் வரும் வரிப்பாடல்களிலும் குரவைப் பாடல்களிலும் காண்கிறோம். அதுபோலவே கன்னிப் பெண்கள் நோன்பாலும் 'நாடு முழுவதும் வாழ மழை பெய்யவேண்டும்' என்னும் பாட்டாகவே பாவைப் பாட்டு முடிகிறது.

### நீராடல்

சயாமில் நடந்த இந்த ஊஞ்சல் திருவிழாவில், மழைத்திருவிழாவின் அடிப்படையையும் கண்டோம். ஊசலாடியவர்கள் நீரை வாரியிறைத்து மழை பெய்வதுபோலப் போலிக் காட்சியை உண்டு பண்ணியது மழை வருதற்காகவே என்றும் கண் டோம். அந்நாட்டின் மழைத்திருவிழாவை இவ்வாறு பாவை நோன்போடு அந்நாட்டிற்கேற்பக் கலந்த மைத்த நுட்பத்தை இங்கே காணலாம்.

இந்தக் கண்கொண்டு நோக்கும்போது பெண் கள் குடைந்து குடைந்து நீராடுவது, மழை வெள்ளத்தில் மூழ்குவதுபோன்ற போலிக் காட்சியே யாதலின், அதுவும் ஒருவகையில் சயாம் மக்களின் கருத்துக்கு உகந்ததே எனலாம். மலையாள நாட்டில்

இந்த நோன்பினை நோற்கும் பெண்கள் குளித்து மகிழ்வர்; பாடிக்கொண்டே செல்வர்; பாடிக் கொண்டே நீராடுவர்; நீராடும்போது முழவொலி போன்ற ஒலியைத் தங்கள் கையாலேயே நீரை எற்றுவதால் எழுப்புவர். வாத்ஸ்யாயனர் தமது காம சூத்திரத்தில் ஜலக்கிரீடை எனும் நீராட்டத்தின் போது தண்ணீரிலே முழவொலி எழுப்புதல் என்ற கலையைக் கூறுவது இங்கு நினைவுக்கு வருகிறது. ஆடலும் பாடலுமாக இந்த நீராடல் அமைவதனைப் பாவைப்பாட்டில் காண்கிறோம்.

*மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்*
*கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி*
*ஐயா வழிஅடியோம் வாழ்ந்தோம்காண் ஆரழல்போற்*
*செய்யா! வெண்ணீருடி! செல்வா! சிறுமருங்குல்*
*மையார் தடங்கண் மடந்தை மணவாளா!*
*ஐயாநீ ஆட்கொண் டருளும் விளையாட்டின்*
*உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்*
*தோம்*
*எய்யாமற் காப்பாய் எமையேலோர் எம்பாவாய்.*
*(திருவெம்பாவை 11)*

“மொய்யார்தடம்பொய்கை புக்கு முகேர் என்னக் கையால் குடைந்து குடைந்து”-என்று ஆடுவதனைக் குறிக்கின்றார் மணிவாசகர். அடுத்த பாட்டிலும், வளைசிலம்ப வார்கலைகள் ஆர்ப்பரவம் செய்யப் பூத் திகழும் பொய்கை குடைந்தாடுவதைப் பேசுகிறார்.

பொங்கு மடுவில் புகப்பாய்ந்து பாய்ந்துநஞ்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய்.
(திருவெம்பாவை 13)

அடுத்த பாட்டிலும் கலனும் குழலும் ஆடப் புனலாடி ஆண்டவனையும் அருளையும் பாடி நீராடுதலைப் பாடு கின்ருர்.

*காதார் குழையாடப் பைம்பூண் கலனுடக்*
*கோதை குழலாட வண்டின் குழாமாடச்*
*சீதப் புனலாடிச் சிற்றம்பலம்பாடி*
*வேதப் பொருள்பாடி அப்பொருள்ஆ மாபாடிச்*
*சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி*
*ஆதி திறம்பாடி அந்தம்ஆ மாபாடி*
*பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்*
*பாதத் திறம்பாடி ஆடேலோர் எம்பாவாய்.*
(*திருவெம்பாவை 14*)

எனவே, நீராடுதல், ஆடலும் பாடலுமாக முகேர் எனக் குடைந்து குடைந்து ஆடுவது என்பது வெளியாகிறது. தாளத்திற்கேற்ப ஆடியும் பாடியும் வரும் ஒரு சிறந்த இசைக் கூத்தே இந்நீராடல் என்று உறுதி கூறலாம்போல் தோன்றுகிறது. இந்த வகையாலும் சயாமில் நடக்கும் திருவிழா வுக்கும், இந்த நீராடலுக்கும் உள்ள ஒற்றுமையைக் காண்கிறோம். சயாமில் சிவனர் எதிரிலேயே ஆடி ஞர்கள். பாவைப் பாடல்களிலும் கடவுள் எதிரி லேயே ஆடுகின்ருர்கள். கடவுளன்றி வேருென்றும் அவர்கள் கண்ணில் படுவதில்லையே! மழையும் அவனே! குளமும் அவனே! எல்லாம் அவனே!

*பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்*
*அங்கங் குருகினத்தால் பின்னும் அரவத்தால்*
*தங்கண் மலங்கழுவு வார்வந்து சார்தலினல்*
*எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த.*
(*திருவெம்பாவை 13*)

**கணவற் பேறு**

மூன்ருவதாகத் தமக்கேற்ற கணவனைப் பெற விரும்புதலும் இந்த நோன்பின் பயனும். " எங் கொங்கை நின் அன்பர் அல்லார் தோள் சேரற்க " என்று பாடுகிருர் மாணிக்கவாசகஞர். ஆண்டாளும் " கண்ணனையே விரும்பி மற்றெங்கள் காமங்கள் மாற்று " என்று பாடுகிருர் என்று பெரியார்கள் எடுத்துக் காட்டுகிருர்கள்.

ஆனல், சயாமில் நடக்கும் திருவிழாவில் கன்னிப் பெண்கள் இல்லை. ஆதலின் இந்தக் குறிப்பை இத்திருவிழாவில் நாம் காணமுடியாது.

# 5. சயாம் சடங்கும் பாவைப்பாட்டும்

## பெண்கள் இல்லாமை

சயாமில் நடக்கும் திருவிழாவில் பெண்கள் இடம் பெருமையின் நுட்பத்தைக் குறிப்பிடவேண்டும். தமிழ் நாட்டில் பாவைத் திருவிழா முழுதும் முன்னே பெண்கள் திருவிழவேயாம். இந்த வேற்றுமை இவ் விருவேறு பண்பாடுகளும் வெவ்வேறு அடிப்படையில் தோன்றியதால் விளைந்ததாதல் வேண்டும். சயாம் நாட்டு மக்களினம் இந்திய மக்களினத்திலும் வேருகும். அவர்களின் பண்பாடாம் மரத்தைச் சுற்றித் தமிழ் நாட்டுப் பண்பாடு கொடிபோல் தவழ்ந்ததெனலாம். எனவே இரண்டும் ஒன்றென்று மயங்குதல் கூடாது. ஆனல் தமிழ் நாட்டிலும் அது எல்லோரும் பாடும் பாட்டாகியுள்ளது.

## கூட்டுறவுக் குழந்தையுள்ளம்

பாவைப் பாடல்களில் கன்னியர் ஒருவரை ஒருவர் எழுப்பிச் செல்லும் சமுதாயக் கூட்டுறவு வாழ்க்கையின் குழந்தையுள்ளம் வெளியாவதுபோல, சயாம் சடங்கில் வெளியாவது இல்லை. இருந்தாலும் மழைத்திருவிழாச் சமுதாய ஒற்றுமைத் திருவிழாவே ஆம். அவர்கள் மந்திரமாகப் பாடும் பாடல் கன்னிப் பெண்கள் பாடும் பாடலாகவே அமைந்திருப்பது வியப்பே ஆம். சயாமில் மழைத் திருவிழாவில் "கல் சாகரத்தை"ச் சுற்றி நின்ருடுவார்கள்; தமிழ்

நாட்டில் கன்னிப் பெண்கள் இருந்த இடத்திலிருந்து, அங்கே ஆடுகிருர்கள் ஆடவர்கள்.

இந்தத் திருவிழாவில் திருவெம்பாவையின் முதலிரண்டு பாடல்களைப் பாடினுர்கள் என்பதனைப் பின்னர்க் காண்போம். ஆதலின், இந்தச் சுவையும், சயாம் மக்கள், முன் அறிந்து துய்த்ததே போலும்.

*ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்*
*சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள் தடங்கண்*
*மாதே வளருதியோ ? வன்செவியோ நின்செவிதான் ?*
*மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்*
*வீதிவாய்க் கேட்டலுமே விம்மி விம்மி மெய்ம்மறந்து*
*போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டு இங்ஙன்*
*ஏதேனும் ஆகாள் கிடந்தாள் ; என்னே என்னே*
*ஈதே எந்தோழி பரிசேலோர் எம்பாவாய்.* (1)

*பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல் நாம்*
*பேசும்போ தெப்போது இப் போதார் அமளிக்கே*
*நேசமும் வைத்தனையோ ? நேரிழையாய் நேரிழையீர்*
*சீசீ இவையுஞ் சிலவோ ? விளையாடி*
*ஏசும் இடமீதோ ? விண்ணோர்கள் ஏத்துதற்குக்*
*கூசு மலர்ப்பாதந் தந்தருள வந்தருளும்*
*தேசன் சிவலோகன் தில்லைச் சிற்றம்பலத்துள்*
*ஈசனுர்க் கன்பார் ? யாம் ஆடேலோர் எம்பாவாய்.* (2)

*முத்தன்ன வெள்நகையாய், முன்வந் தெதிர்எழுந்தென்*
*அத்தன் ஆனந்தன் அமுதன்என் றள்ளூறித்*
*தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்*
*பத்துடையீர் ஈசன் பழவடியீர் பாங்குடையீர்*
*புத்தடியோம் புன்மைதீர்த்து ஆட்கொண்டாற் பொல்லாதோ?*
*எத்தோ? நின் அன்புடைமை எல்லோம் அறியாமோ?*
*சித்தம் அழகியார் பாடாரோ நஞ்சிவனை?*
*இத்தனையும் வேண்டும் எமக்கேலோர் எம்பாவாய்.* (3)

ஒள்நித் திலநகையாய் இன்னம் புலர்ந்தின்றோ ?
வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ?
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோம் ; அவ்வளவும்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உள்நெக்கு நின்றுருக யாம்மாட்டோம் நீயேவந்து
எண்ணிக் குறையில் துயிலேலோர் எம்பாவாய். (4)

மாலறியா நான்முகனும் காணா மலையினை நாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மைஆட் கொண்டருளிக் கோதாட்டுஞ்
சீலமும் பாடிச் 'சிவனே சிவனே' என்று
ஓலம் இடினும் உணராய் உணராய்காண்
ஏலக்குழலி பரிசேலோர் எம்பாவாய். (5)

மானேநீ நென்னலை " நாளைவந் துங்களை
நானே எழுப்புவன் " என்றலும் நாணாமே
போனதிசைபகராய் ; இன்னம் புலர்ந்தின்றோ ?
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனேஉருகாய் உனக்கே உறும் எமக்கும்
ஏனோர்க்கும் தங்கோனைப் பாடேலோர் எம்பாவாய். (6)

அன்னே இவையுஞ் சிலவோ? பலஅமரர்
உன்னற் கரியான் ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் "சிவன்" என்றே வாய்திறப்பாய்
"தென்னா" என்னாமுன்னம் தீசேர் மெழுகொப்பாய்
"என்னானை என் அரையான் இன்னமுது" என்
றெல்லோமுஞ்
சொன்னோங்கேள் வெவ்வேறாய் இன்னந்
துயிலுதியோ?

வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோர் எம்பாவாய். (7)

கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கும் ;
ஏழில் இயம்ப இயம்பும்வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதிகேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோம் கேட்டிலையோ?
வாழிஈ தென்ன உறக்கமோ? வாய்திறவாய்
ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ ?
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழைபங் காளனையே பாடேலோர் எம்பாவாய். (8)

ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள்; சித்தங் களிகூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள்; விண்ணோரைத்
தான்பணியாள்;
பேரரையற் கிங்ஙனே பித்தொருவர் ஆமாறும்
ஆரொருவர்? இவ்வண்ணம் ஆட்கொள்ளும்
வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல்பாய்ந்து ஆடேலோர் எம்பாவாய்.(9)

என்பன திருவெம்பாவைப் பாடல்கள்.

மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால்
நீராடப் போதுவீர் போதுமினோ நேர்இழையீர்
சீர்மல்கும் ஆய்ப்பாடிச் செல்வச் சிறுமீர்காள்
கூர்வேல் கொடுந்தொழிலன் நந்தகோபன் குமரன்
ஏர்ஆர்ந்த கண்ணி யசோதை இளஞ் சிங்கம்
கார்மேனிச் செங்கண் கதிர்மதியம் போல்முகத்தான்
நாரா யணனே நமக்கே பறைதருவான்
பாரோர் புகழப் படிந்துஏல்ஓர் எம்பாவாய். (1)

தூமணி மாடத்துச் சுற்றும் விளக்குஎரியத்
தூபம் கமழத் துயில்அணைமேல் கண்வளரும்

மாமன் மகளே! மணிக்கதவம் தாள் திறவாய்
மாமீர் அவளை எழுப்பீரோ உன்மகள்தான்
ஊமையோ? அன்றிச் செவிடோ அனந்தலோ?
ஏமப் பெருந்துயில் மந்திரப் பட்டாளோ?
மாமாயன் மாதவன் வைகுந்தன் என்றுஎன்று
நாமம் பலவும் நவின்றுஏல்ஓர் எம்பாவாய். (9)

நோற்றுச் சுவர்க்கம் புகுகின்ற அம்மனாய்
மாற்றமும் தாராரோ வாயில் திறவாதார்
நாற்றத் துழாய்முடி நாரா யணன்நம்மால்
போற்றப் பறைதரும் புண்ணியனால் பண்டுஒருநாள்
கூற்றத்தின் வாய்வீழ்ந்த கும்பகரணனும்
தோற்றும் உனக்கே பெருந்துயில்தான் தந்தானோ?
ஆற்ற அனந்தல் உடையாய் அருங்கலமே
தேற்றமாய் வந்து திறஏல்ஓர் எம்பாவாய். (10)

கற்றுக் கறவைக் கணங்கள் பலகறந்து
செற்றார் திறல்அழியச் சென்று செருச்செய்யும்
குற்றம்ஒன்(று) இல்லாத கோவலர்தம் பொற்கொடியே!
புற்றுஅர(வு) அல்குல் புனமயிலே போதராய்
சுற்றத்துத் தோழிமார் எல்லாரும் வந்துநின்
முற்றம்புகுந்து முகில்வண்ணன் பேர்பாட
சிற்றாதே பேசாதே செல்வப்பெண் டாட்டிநீ
எற்றுக்(கு) உறங்கும் பொருள்ஏல்ஓர் எம்பாவாய். (11)

கனைத்துஇளங் கற்றுஎருமை கன்றுக்(கு) இரங்கி
நினைத்து முலைவழியே நின்று பால்சோர
நனைத்துஇல்லம் சேறுஆக்கும் நற்செல்வன் தங்காய்!
பனித்தலை வீழநின் வாசல் கடைபற்றிச்
சினத்தினால் தென் இலங்கைக் கோமானைச் செற்ற
மனத்துக்(கு) இனியானைப் பாடவும்நீ வாய்திறவாய். (12)

உங்கள் புழக்கடைத் தோட்டத்து வாவியுள்
செங்கழுநீர் வாய்நெகிழ்ந்து ஆம்பல்வாய் கூம்பினகாண்
செங்கல் பொடிக்கூறை வெண்பல் தவத்தவர்

தங்கள் திருக்கோயில் சங்கிடுவான் போதந்தார்
நங்காய் எழுந்திராய் நாணாதாய் நாஉடையாய்
சங்கொடு சக்கரம் ஏந்தும் தடக்கையான்
பங்கயக் கண்ணனைப் பாடுஏல்ஓர் எம்பாவாய். (14)

"எல்லே இளங்கிளியே இன்னம் உறங்குதியோ"
"சில்என்று அழையேன்மின் நங்கைமீர் போதருகின்றேன்!"
"வல்லைஉன் கட்டுரைகள் பண்டேஉன் வாய்அறிதும்;"
"வல்லீர்கள் நீங்களே நானேதான் ஆயிடுக;"
"ஒல்லைநீ போதாய் உனக்குஎன்ன வேறுஉடையை;"
"எல்லாரும் போந்தாரோ" "போந்தார்போந்து எண்ணிக்கொள்
வல்ஆனை கொன்றானை மாற்றாரை மாற்றுஅழிக்க
வல்லானை மாயனைப் பாடு" ஏல்ஓர் எம்பாவாய். (15)

குத்து விளக்கெரியக் கோட்டுக்கால் கட்டில்மேல்
மெத்தென்ற பஞ்ச சயனத்தின்மேல்ஏறிக்
கொத்துஅலர் பூங்குழல் நப்பின்னை கொங்கை
வைத்துக் கிடந்த மலர்மார்பா வாய்திறவாய்
மைத்தடங் கண்ணினாய் நீஉன் மணாளனை
எத்தனை யேனும் பிரிவுஆற்ற கில்லாயால்
எத்தனைப் போதும் துயில்எழ ஒட்டாய் காண்
தத்துவம் அன்று தகவுஏல்ஓர் எம்பாவாய். (19)

முப்பத்து மூவர் அமரர்க்கு முன்சென்று
கப்பம் தவிர்க்கும் கலியே துயில்எழாய்
செப்பம் உடையாய் திறல்உடையாய் செற்றார்க்கு
வெப்பம் கொடுக்கும் விமலா துயில்எழாய்
செப்புஅன்ன மென்முலைச் செவ்வாய்ச் சிறுமருங்குல்
நப்பினை நங்காய் திருவே துயில்எழாய்
உக்கமும் தட்டுஒளியும் தந்துஉன் மணாளனை
இப்போதே எம்மைநீர் ஆட்டுஏல்ஓர் எம்பாவாய். (20)

என்பன திருப்பாவைப் பாடல்கள்.

## திருப்பாவைக் குறிப்பும் வெளிப்படையும்

சயாமில் வழங்கும் நோன்பில் கன்னிப் பெண்கள் தமக்கு நல்ல கணவன் வேண்டுமென வேண்டிக் கொள்வது எப்படி இடம் பெற முடியும்? பெண்கள் தாம் அத்திருவிழாவில் இடம்பெற வில்லேயே. திருப்பாவையில் கண்ணனேயே பெண்கள் வழிபடப் போகின்றனர். கோபியர் கதையை மனத்தில் வைத்துக்கொண்டு "இப் பெண்களும் கோபியர்களாக நடிக்கின்ருர்கள்" என்று கதைகூறி "அப் பெண்கள் கண்ணனே வேண்டுதற்குப் பயன் அக்கண்ணனேடு காதலியர்களாக வாழ்வதன்றி வேறு என்ன இருக்க முடியும்?" என நம்மவர்கள் முடிவுகட்டுகிருர்கள். நீராடல் என்பதும் குமரியாடல் என்பது போல அந்தக் காதலின்பத்தையே குறிக்கும் என்றும் நம்மவர்கள் எடுத்துக்காட்டுவார்கள். சயாமில் இப்பாட்டைப் படித்தவர்கள் இக்குறிப்புப் பொருளேயெல்லாம் அறியமுடியாதன்ருே. இங்கிருந்து பல ஆண்டுகளுக்கு முன் சென்ற பார்ப்பனர்களும் அறிய முடியாதன்ருே!

"தாயைக் குடல் விளக்கஞ் செய்த தாமோதரனேத்
தூயோமாய் வந்து நாம் தூமலர் தூவித்தொழுது
வாயினல் பாடி மனத்தினல் சிந்திக்கப்
போயபிழையும் புகுதருவான் நின்றனவும்
தீயினில் தூசாகும் செப்புஏல் ஓர் எம்பாவாய்" (5)

என்ற பாட்டில் வழிபாடு ஒன்றையே அவர்கள் உணர்ந்தார்கள் போலும். இனி, இப்பாவை நோன்பு நோற்கும் பெண்கள் வேண்டுவதுதான் யாது?

"சிற்றஞ்சிறு காலே வந்துன்னேச் சேவித்துன்
பொற்ருமரையடியே போற்றும் பொருள்கேளாய்!

பெற்றம் மேய்த்துண்ணும் குலத்தில் பிறந்து நீ
குற்றேவல் எங்களைக் கொள்ளாமற் போகாது !
இற்றைப்பறை கொள்வான் அன்றுகாண் கோவிந்தா !
எற்றைக்கும் ஏழ்ஏழ் பிறவிக்கும் உன் றன்ஞேடு
உற்ருேமே ஆவோம் உனக்கேநாம் ஆள்செய்வோம்
மற்றைநம் காமங்கள் மாற்றுஏல்ஓர் எம்பாவாய்" (29)

இந்தப்பாட்டிலேயும் வழிபாடு தவிரப் பிற வற்றில் செல்லும் அவாவினை எல்லாம் அறுத்தெறிய வேண்டும் என்ற வேண்டுகோளே உண்டு. இத ஞலேயே நம் பெரியோர்களும் இவர்கள் வேண்டு வது பேரின்பம் என்று விளக்கினுர்கள்.

சயாமியர் அந்த ஆழத்தில் எல்லாம் குதிக்க வில்லை எனலாம். அவர்களுடைய பழைய மழைத் திருவிழாவில் அரசன் வருவான்; அவன் எதிரே நடக்கும் திருவிழாவில், அவனை வேண்டிக்கொள்வது தான் என்ன? அவனையன்றி வேறு ஒருவரையும் அரசன் என்று வணங்காத நிலையையே, எல்லாப் பிறப்பிலும் வேண்டிக்கொள்வதே ஆம். அந்த வகையில் திருப்பாவை அவர்களுடைய பழைய வழக் கத்தின் விளக்கமாய் அரசனை வேண்டிக்கொள்வதாகி அவர்களை வாழ்வித்தது.

இதனை உணர்ந்தால் திருவாசகத்தில் வரும் பாடல்களுக்கும் இவ்வாறன்ருே பொருள் கொண் டிருப்பர் !

முன்னைப்பழம் பொருட்கும் முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றியனே
உன்னைப் பிராஞகப் பெற்றஉன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம் ; ஆங்கவர்க்கே
பாங்காவோம்

அன்னவரே எம்கணவர் ஆவார்; அவர்உகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்;
இன்னவகையே எமக்கெங்கோன் நல்குதியேல்
என்னகுறையும் இலோமேல்ஓர் எம்பாவாய். (9)

பாதாளம் ஏழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள்முடிவே
பேதைஒருபால்; திருமேனி ஒன் றல்லன்;
வேதமுதல்; விண்ணோரும் மண்ணுந் துதித்தாலும்
ஓதஉலவா ஒருதோழன் தொண்டர்உளன்;
கோதில் குலத்தரன்றன் கோயிற்பிணாப் பிள்ளைகாள்
ஏதவன்ஊர்? ஏதவன்பேர்? ஆர்உற்றார்? ஆர்அயலார்?
ஏதவனைப் பாடும் பரிசேலோர் எம்பாவாய் (10)

மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா வழிஅடியோம் வாழ்ந்தோம்காண் ஆரழல்போற்
செய்யாவெண் ணீருடி செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயாநீ ஆட்கொண் டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்;
எய்யாமற் காப்பாய் எமையேலோர் எம்பாவாய். (11)

"உங்கையில் பிள்ளை உனக்கே அடைக்கலம்" என்று
அங்கப் பழஞ்சொற் புதுக்கும் எம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப்போம்கேள்
எங்கொங்கை நின் அன்பர் அல்லார்தோள் சேரற்க;
எங்கை உனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க;
கங்குல் பகல்எங்கண் மற்றொன் றுங் காணற்க;
இங்கிப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயிறு எமக்கு? ஏலோர் எம்பாவாய்(20)

போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமாம் செந்தளிர்கள்
போற்றி எல்லாவுயிர்க்குந் தோற்றமாம் பொற்பாதம்
போற்றிஎல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்

போற்றிஎல் லாவுயிர்க்கும் ஈறும் இணையடிகள்
போற்றிமால் நான்முகனுங் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்யஆட் கொண்டருளும் பொன் மலர்கள்
போற்றியாம் மார்கழிநீர் ஆடேலோர் எம்பாவாய். (20)

என்பன திருவெம்பாவை. இவற்றை அரசரைப் பாடும் பாடலாக அன்றோ சயாம் மக்கள் கொள்ளுவர்? அரசரே கடவுள் ஆதலின், அவ்வாறு பொருள் கொள்வதில்தடை ஒன்றும் இல்லை.

இவ்வாறு இந்தத் தெய்வ பக்திப் பாவைப் பாடல்கள் கடவுட்சுவை சொட்டச் சொட்டப் பாடப் பெற்றவை. இவையே சயாம் நாட்டில் அரசச்சுவை சொட்டச் சொட்டப்பாடும் இராசபக்திப் பாடல்களாகப் பொருள் கொள்ள வந்தமை வியப்பே ஆம்.

## அரசர்

பாவை நோன்பாம் இம் மழைத் திருவிழாவில் முற்காலத்தில் அரசனே சிவனாக வந்திருக்க வேண்டுமெனக் கண்டோம். அரசனும் கடவுளின் அவதாரமே என்பது அந்நாட்டு மக்களுடைய கொள்கை. அரசன் கைலை மலைபோல் உள்ள ஒரு விமானத்தில் அமருவதும், தன்னுடைய மகனுக்குத் தானே குடுமி களையும் சடங்கினைச் செய்யும்போது அரசனைச் சிவன் என்றே மக்கள் கருதுவதும், அந்த அரசனுக்குத் ‘ திவ்யதேவாவதாரம் ’, என்ற பட்டம் வழங்குவதும் இக்கருத்தை வற்புறுத்தும்.

கண்ணபிரான் தன் வீட்டிலிருந்து எழுந்து வந்து இப்பெண்களை நோக்கிச் சிங்காதனத்திலிருந்து குறைகளைக் கேட்டருள வேண்டுமெனத் திருப்பாவையும் பாடுகிறது.

*மாரி மலைமுழைஞ்சில் மன்னிக் கிடந்து*
*சீரிய சிங்கம் அறிவுற்றுத் தீ விழித்து*
வேரி மயிர் பொங்க எப்பாடும் பேர்ந்துதறி
மூரி நிமிர்ந்து முழங்கிப் புறப்பட்டுப்
போதருமா போலநீ பூவைப்பூ வண்ணாஉன்
கோயில்நின்று இங்ஙனே போந்தருளிக் கோப்புடைய
*சீரிய சிங்காதனத்து இருந்து யாம்வந்த*
*காரியம் ஆராய்ந்(து) அருள்ஏல் ஓர் எம்பாவாய்.* **(23)**

இவ்வாறு திருப்பாவையில் கண்ணனும், பல தேவரும், யசோதையும், நந்தகோபனும், நப்பின்னையும் உறங்குவதைக்கண்டு, அவர்களையும் எழுப்பும் திருப்பாவைப் பாடல்கள், *அரசர் அரண்மனையில் தம்முடைய உற்றாரோடும்,* உடன்பிறந்தாரோடும், தாயோடும், மனைவியோடும் உறங்குவதையே, அரசரையே கடவுளெனக் கொண்ட பழைய சயாம் மக்களுக்கு, நினைப்பூட்டியிருக்கும். கீழே வரும் பாடல்கள் தங்கள் அரசருக்கே பொருந்தியவை என்றன்றோ அவர்கள் கருதியிருப்பார்கள் ?

" நாயகனாய் நின்ற நந்தகோபனுடைய
*கோயில் காப்பானே ! கொடித் தோன்றும் தோரண*
*வாயில் காப்பானே மணிக்கதவம் தாள்திறவாய்"* **(16)**

*அம்பரமே தண்ணீரே சோறே அறம்செய்யும்*
எம்பெருமான் நந்த கோபாலா எழுந்திராய்
கொம்பனார்க் கெல்லாம் கொழுந்தே! குலவிளக்கே!
*எம்பெருமாட்டி யசோதாய் அறிவுறாய்*
*அம்பரம் ஊடு அறுத்து ஓங்கி உலகு அளந்த*
உம்பர் கோமானே ! உறங்காது எழுந்திராய்
செம்பொற் கழலடிச் செல்வா ! பல தேவா !
*உம்பியும் நீயும் உறங்கு ஏல் ஓர் எம்பாவாய்."* **(17)**

*" உந்து மதகளிற்றன் ஓடாத தோள்வலியன்*
*நந்த கோபாலன் மருமகளே ! நப்பின்ணய் !*
*கந்தம் கமழும் குழலீ ! கடைதிறவாய் "* (18)

*" மாற்ருர் உனக்கு வலி தொலேந்து உன்வாசற்கண்*
*ஆற்ருது வந்து உன் அடி பணியுமா போலே*
*போற்றியாம் வந்தோம் புகழ்ந்து ஏல்ஓர் எம்பாவாய். "*
(21)

*" அம் கண் மா ஞாலத்(து) அரசர் அபிமான*
*பங்கமாய் வந்து நின் பள்ளிக்கட்டில் கீழே*
*சங்கம் இருப்பார் போல் வந்து தலைப்பெய்தோம்*
*கிங்கிணி வாய்ச் செய்த தாமரைப் பூப்போலே*
*செங்கண் சிறுச்சிறிதே எம்மேல் விழியாவோ ? "* (22)

*" வென்று பகை கெடுக்கும் நின்கையில் வேல்போற்றி*
*என்றென்றுன் சேவகமே ஏத்திப் பறைகொள்வான்*
*இன்று யாம் வந்தோம் இரங்கு ஏல்ஓர் எம்பாவாய். "*
(24)

**சின்னங்கள்**

சயாம் அரசர் பட்டாபிடேகம் செய்துகொண்ட உடனே அரச சின்னங்கள், அரச ஆயுதங்கள் முதலியவற்றை அரச குருவாம் பார்ப்பனர் ஒவ்வொன்ருக எடுத்துக் கொடுப்பாராம். பின்னர், அரசர் வாங்கி வாங்கித்தரச் சேவகர்கள் அரசரது இரு புறத்திலும் உள்ள மேசைமேல் வரிசையாக அடுக்குவார்களாம். வெண் கொற்றக்குடை, கொற்ற வாள், செங்கோல், விசிறி, அடைப்பை, உதரபந்தம், தடி, செப்பு, சாமரை, வெற்றித்திருமுடி, பாதுகை, பொறி, ஆழி, சக்கரம், சூலம், வில், வேல், துப்பாக்கி முதலியன இவ்வாறு வழங்கப்படும் பொருள்களாம். இவையமைந்த வரிசை ஒழுங்கினே வேல்ஸ் அறிஞர் கீழ்க்கண்டபடி காட்டுகிருர். (p. 83)

அரச சின்னங்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. மாபெரு வெண்கொற்றக் குடை | பிரஹ்ம உதர பந்தம் | பொன் ஏடு | மாபெரு வெற்றித் திருமுடி |
| 2. செங்கோல் | ஒளிமிகு உதர பந்தம் | ந மாதன் உதர பந்தம் | கொற்ற வாள் |
| 3. விசிறி | கவரிமான் வால் குச்சம் | யானை வால் குச்சம் | பாதுகை |
| 4. தண்டு | வைர மோதிரம் | அறப் பொறி யாழி | அரசவாள் |
| 5. செப்பு | அடைப்பை | தண்ணீர்ச் செப்பு | அர்க்கிய பாத்திரம் |

அரசப் படைக் கருவிகள்

| | | | |
|---|---|---|---|
| 6. பிணவாள் | சக்கரம் | திரிசூலம் | வைர வேல் |
| 7. நீண்ட கைப்பிடி வாள் | வாள் | வில் | துப்பாக்கி |

துப்பாக்கி பிற்காலத்தில் எழுந்தது என்பது வெளிப்படை. திரிசூலம் முதலிய சில, சைவ வழிபாட்டால் எழுந்தன எனலாம்.

இந்தச் சடங்கை மனத்தில் வைத்துக்கொண்டு, கீழ் வரும் பாடலைச் சயாம் மக்கள் ஓதி இருந்தால், தம்முடைய அரசனது சடங்கினை அன்றோ நினைத்திருப்பார்கள்.

" மாலே! மணி வண்ணா! மார்கழி நீர் ஆடுவான்
மேலையார் செய்வனகள் வேண்டுவன கேட்டியேல்
ஞாலத்தை எல்லாம் நடுங்க முரல்வன
பால் அன்ன வண்ணத்து உன் பாஞ்சசன்னியமே

*போல்வன சங்கங்கள் போய்ப் பா(டு) உடையனவே*
*சாலப் பெரும் பறையே பல்லாண்(டு) இசைப்பாரே*
*கோல விளக்கே கொடியே விதானமே*
*ஆலின் இலையாய் ! அருள் ஏல் ஓர் எம்பாவாய்.''* **(26)**

## கடை திறப்பு

கடைதிறப்பு மந்திரம் என்ற ஒன்றினைச் சயாம் பார்ப்பனர் பாடுவது கண்டோம். கடை திறப்புப் பாடல் பாவைப் பாட்டிலும் வருகிறது. ஒருவரை ஒருவர் எழுப்பும்போது "கதவைத் திறந்து வா" என்று தானே கூறி அழைக்கவேண்டும்.

*"முத்தன்ன வெள்நகையாய்! முன்வந்(து) எதிர் எழுந்தென்*
*அத்தன் ஆனந்தன் அமுதன் என்றள்ளூறித்*
*தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்.''* (3)

என்பது ஒன்றே திருவெம்பாவையில் வருகிறது. திருப்பாவையிலோ பெண்களை அன்றி எல்லோரையும் எழுப்புவதனைக் காண்கிறோம். ஆதலின்

*"வாயில் காப்பானே மணிக்கதவம் தாள்திறவாய்''* (16)

*"பந்துஆர்விரலி ! உன்மைத் துனன் பேர்பாடச்*
*செந்தாமரைக் கையால் சீர்ஆர் வளை ஒலிப்ப*
*வந்து திறவாய் மகிழ்ந்து ஏல் ஓர் எம்பாவாய்.''* (18)

*"வாயால் முன்னம் முன்னம் மாற்றாதே அம்மா நீ*
*நேய நிலைக்கதவம் நீக்கு ஏல்ஓர் எம்பாவாய்.''* (16)

எனப் பலமுறை கடைதிறப்பு வருகிறது.

அதுமட்டுமன்றி மார்கழி மாதத்து ஏகாதசி அன்று பெருமாள் கோயில்களில் சொர்க்கவாசல் திறப்பது என்ற சடங்கு ஒன்று காலையில் நடைபெறும்.

எனவே, கடைதிறப்பு மார்கழி நோன்புகளோடு தொடர்புடையது என்பது நன்கு விளங்குகிறது.

ஆனல், சயாமில் கூறும் பாடலைச் சிவாலயத் திறப்பு என்றும், கயிலைத்திறப்பு என்றுமே அங்கு வழங்குகிருர்கள்.

அப்படியானல் அந்தத் தமிழ்ப்பாட்டு எது என்று சுட்டிக்காட்டுவதற்கு வழி இல்லை. அப்பர் அடிகள் “திண்ண மாக் கதவம் திறப்பிம்மினே” என்று கடை திறக்க வேண்டும் பாடல்கள் பத்து அருளிச் செய்துள்ளார். ஆனல், அதனைக் கடை திறப்பாகக் கொள்வது இல்லை. திருப்பள்ளி எழுச்சியிலும், ‘பள்ளி எழுந்தருளாயே’ என்று பாடுவது ஆண்டவன் கீழே இறங்கி இவர்களுக்குக் காட்சி அளிக்க வேண்டும் என்று வேண்டுகின்ற வகையில் கடை திறப்பாக அமையலாம். ஆனல், முடிவு ஒன்றும் கூறுவதற்கில்லை.

வேல்ஸ் அறிஞர் இந்தக் கடை திறப்பு மந்திரம் தமிழில் எழுதப்பட்டுள்ளது என்றும், அந்த நூல் பாங்காக் (Bangkok) தேசிய நூல் நிலையத்தில் உள்ளது என்றும் சொல்வதால் அந்த நூல் நிலையத்திற்குச் சென்று அந்த நூலை வாங்கித் தமிழ் அறிந்தார் யாரேனும் படித்துப் பார்த்தால், அது எந்தப் பாடல் என நமக்கு விளங்குதல் கூடும். அங்கே மந்திரங்கள் எழுதிய ஏழு கையெழுத்துக் கட்டுகளில் முதற் பகுதியில் (வால்யூம் A.) இது கடைசி மந்திரம் என்று அவர் குறித்துள்ளார் (Wales p. 63). இதனைக் கண்டறிவது தமிழ் ஆராய்ச்சியாளரின் கடமையாகும்.

**வைகறை**

வேறு சில குறிப்புக்களும் திருவெம்பாவைப் பாடலிலிருந்தே வளர்ந்தனவென்று கூறுதல் வேண்டும். சங்க முழக்கம் சயாம் நாட்டு வழிபாட்டில் நிறைந்திருக்கக் காண்கிறோம். ' இயம்பும் **வெண் சங்கெங்கும்** ' என்று திருவெம்பாவை பாடுவது காண்க. திருப்பாவையிலும்,

> " செங்கல் பொடிக்கூறை வெண்பல் தவத்தவர்
> தங்கள் திருக்கோயில் **சங்கிடுவான் போதந்தார்**" (*14*)

என வருகின்றது.

இந்தச் சங்க முழக்கம் விடியற் காலத்தெழும் சங்க முழக்கம். பாவை நோன்பு கதிரவன் எழுவதன் முன்னம் எழுந்து போய்க் குளிக்கும் நோன்பு. எனவே, வைகறை யாமத்தின் அழகிய புனைந்துரைகள் பாவைப் பாட்டில் நிறைந்திருக்கக் காண்கிறோம்.

6. புள்ளும் சிலம்பினகாண் புள் அரையன் கோயில்
வெள்ளை விளிசங்கின் பேர் அரவம் கேட்டிலையோ

7. கீசுகீசு என்(று) எங்கும் ஆனைச்சாத் தன்கலந்து
பேசினபேச்சு அரவம் கேட்டிலையோ பேய்ப்பெண்ணே
காசும் பிறப்பும் கலகலப்பக் கைபேர்த்து
வாச நறுங்குழல் ஆய்ச்சியர் மத்தினால்
ஓசைபடுத்த தயிர் அரவம் கேட்டிலையோ

9. தூமணி மாடத்துச் சுற்றும் விளக்கு எரியத்
தூபம் கமழத் துயில்அணைமேல் கண்வளரும்
மாமன் மகளே மணிக்கதவம் தாள்திறவாய்

12. கனைத்துஇளங் கற்றுஎருமை கன்றுக்(கு) இரங்கி
நினைத்து முலைவழியே நின்று பால்சோர
நனைத்துஇல்லம் சேறுஆக்கும் நற்செல்வன் தங்காய்
பனித்தலை வீழநின் வாசல் கடைபற்றிச்
சினத்தினால் தென் இலங்கைக் கோமானைச் செற்ற
மனத்துக்(கு) இனியானைப் பாடவும்நீ வாய்திறவாய்

13. புள்ளின்வாய் கீண்டானைப் பொல்லா அரக்கனைக்
கிள்ளிக் களைந்தானைக் கீர்த்திமை பாடிப்போய்ப்
பிள்ளைகள் எல்லோரும் பாவைக் களம்புக்கார்
வெள்ளி எழுந்து வியாழம் உறங்கிற்று
புள்ளும் சிலம்பினகாண் போதுஅரிக் கண்ணினாய்
குள்ளக் குளிரக் குடைந்துநீர் ஆடாதே
பள்ளிக் கிடத்தியோ ? பாவாய்நீ நல்நாளால்
கள்ளம் தவிர்ந்து கலந்துஏல்ஓர் எம்பாவாய்.

14. உங்கள் புழக்கடைத் தோட்டத்து வாவியுள்
செங்கழுநீர் வாய்நெகிழ்ந்து ஆம்பல்வாய் கூம்பின
செங்கல் பொடிக்கூறை வெண்பல் தவத்தவர் [காண்
தங்கள் திருக்கோயில் சங்கிடுவான் போதந்தார்
எங்களை முன்னம் எழுப்புவான் வாய்பேசும்
நங்காய் எழுந்திராய் நாணாதாய் நாஉடையாய்
சங்கொடு சக்கரம் ஏந்தும் தடக்கையான்
பங்கயக் கண்ணானைப் பாடுஏல்ஓர் எம்பாவாய்.

18. வந்தெங்கும் கோழி அழைத்தனகாண் மாதவிப்
பந்தல்மேல் பலகால் குயில்இனங்கள் கூவினகாண்

என்பன திருப்பாவையில் வருவன.

8. கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கும் ;
ஏழில் இயம்ப இயம்பும்வெண் சங்கெங்கும் ;

18. அண்ணாமலையான் அடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீ றற்றாற்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத் [போல்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரைகள் தாமகலப்

பெண்ணுகி ஆணுய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணுகி மண்ணுகி இத்தனையும் வேருகிக்
கண்ணுர் அமுதமுமாய் நின்ருன் கழல்பாடிப்
பெண்ணே இப் பூம்புனல்பாய்ந்து ஆடேலோர்
எம்பாவாய்.

என்பன திருவெம்பாவையில் வருவன.

## உலகிற்கு எழுந்தருளல்

ஆண்டவன் உலகிலே கீழிறங்கி வந்து அடியவர்கள் குடிலில் புக்கு அருள்புரிகின்ருர் என்ற கருத்தொன்றுண்டு. சயாம் கோயில் வழிபாட்டிலும் ஊர்வலத்திலும் இதனைக் காணலாம். நோன்பின் போது கண்ணனே பறை தருவானுய் நிற்பதைத் திருப்பாவை பாடும். ஆண்டவன் கீழிறங்கி அருள் செய்வதையும் திருவெம்பாவையினின்றே அறிந்து அதனை மக்களெல்லாம் உணரும் வகையில் சயாம் திருவிழாச் சடங்குகள் அமைந்திருக்கின்றன எனல் வேண்டும்.

" செங்கணவன் பால் திசைமுகன் பால் தேவர்கள் பால்
எங்கும் இலாததோர் இன்பம் நம்பால தாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
**இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்**
**செங்கமலப் பொற்பாதம் தந்தருளும் சேவகனை "** (17)

என்பதைக் காண்க.

" வான் பழித்திம் மண் புகுந்து மனிதரை ஆட்கொண்ட வள்ளல் " என்றும், " பந்தணை விரலியும் நீயும் நின்னடியார் பழங்குடில் தொறும் எழுந்தருளிய பரனே " என்றும், மாணிக்க வாசகர் பாடுவது ஆண்டவன் குருபரனுய் வந்து தம்மையும் அடியாரையும் ஆட்கொண்டமையைக் குறிப்பதாக நாம் கொள்கின்ருேம். ஆனுல், இவற்றை யெல்லாம் பொதுமக்

கள் நேரே காணும் வகையில், ஆண்டவன் வருகின்ருன் என்பதைக் குறிப்பதாகக் கொண்டு சயாமில் சடங்குகள் எழுந்தன எனலாம். பிற தெய்வங்கள் அங்கே வருவதையும் குறித்தோம். பலகைகளைக் குழியில் வைப்பதனைப் பற்றியும், பின் திருமால் உலகில் வருவதாகப் பாராட்டும் சடங்கினையும், மலரவனைக் குறிப்பது போல அன்னம் ஒன்று வைத்து வழிபடுவதனையும் கண்டோம். பிராணப் பிரதிட்டையில் அம்ச மந்திரத்தையே அன்னமாகப் பொருள் செய்து கொண்டார்கள் என்று கூறினேம். ஆனல் அதிலே மலரவன் குறிப்பினையும் காண்பது தவறன்று. இவற்றை யெல்லாம் அத் திருவிழாவை அமைத்தவர்கள் – சிறப்பாக அதனை நடத்திய பழங் காலப் பார்ப்பனர்கள் – திருப்பள்ளி யெழுச்சியில் வரும் ஒரு பாட்டினை மனத்தில் வைத்திருந்தார்கள் என்று தோன்றுகிறது.

*"புவனியிற் போய்ப் பிறவாமையில் நாள்நாம்*
*போக்குகின்ருேம் அவமே; இந்தப் பூமி*
*சிவன் உய்யக் கொள்கின்ற வாறென்று நோக்கித்*
*திருப்பெருந்துறை உறைவாய் திருமாலாம்*
*அவன் விருப்பெய்தவும் மலரவன் ஆசைப்*
*படவும் நின் அலர்ந்த மெய்க்கருணையும் நீயும்*
*அவனியிற் புகுந்தெமை ஆட்கொள்ள வல்லாய்*
*ஆரமுதே பள்ளி எழுந்தருளாயே."* (10)

என்பதே அப்பாடல்.

# 6. ஊஞ்சலும் தமிழ்நாடும்

## அன்னம்

இதுவரையிலும் 'ஊஞ்சல்' திருவிழாவினைப் பற்றி ஒன்றும் தமிழ் நாட்டிலிருந்து எடுத்துக்காட்டவில்லை. "திருப்பொன்னூசல்" என்ற பகுதி திருவாசகத்தில் வருகிறது. அதற்கும் மார்கழி நோன்பிற்கும் தொடர்புள்ளதாக இதுவரையும் கூறியவர்களில்லை. அன்னத்தை வைத்து ஊசலாடுவதனைச் சயாமில் கண்டோம். திருப்பொன்னூசலில், "அன்னத்தின் மேலேறிஆடும் மணிமயில் போல்" என்று ஊசலை அன்னமெனக் கூறியிருப்பதுதான் அங்குள்ள பார்ப்பனர் உள்ளத்தே, ஊஞ்சலை அன்ன ஊஞ்சலாக அமைக்கத் தூண்டியதோ என்ற ஐயம் எழுகின்றது. அன்னத்துக்குப் பலவேறு குறிப்புக்கள் தருகின்றேமேயென்று வியப்படைய வேண்டியதில்லை. இவ்வாறு பல்வேறு குறிப்புக்களும் ஒன்று சேருவது பழையகாலச் சடங்குகளிலும் புராணக் கதைகளிலும் காண்பதுவே. மகாபாரதத்தில் எத்தனை வகையான சடங்குகளும் கதைகளும் கலந்துள்ளன? கந்த புராணத்தையும் அவ்வாறு கூறலாம். முரண்பட்ட பல்வேறு கதைகளையும் கருத்துக்களையும் இவ்வாறு ஒன்றுபடுத்துவதே இந்தியப் பண்பாட்டின் பெருமையாகும்.

## உலகில் வரல்

திருப்பொன்னூசலிலோ ஆண்டவன் உலகில் வந்து அருள் செய்வதனை மணிவாசகர் குறிக்கின்றார்.

"தங்குலவு சோதி தனியுருவம் வந்தருளி, எங்கள் பிறப்பறுத்திட்டு எந்தரமும் ஆட்கொள்வான்." இக் கருத்தே அவர்களது மார்கழித் திருவிழாவின் அடிப் படை என்பதை முன்னரே கண்டோம்.

## திருஆதிரைக்களி

மார்கழி நோன்பிற்கும் ஊஞ்சலுக்கும் நெருங்கிய தொடர்புண்டு. இதனை மலையாள நாட்டில் இன்றும் காணலாம். 'திருவாதிரைக்களி' என்று தமிழ்நாட்டில் கூறினால், உண்ணச் சமைத்து ஆண்டவனுக்குப் படைக்கும் களி உணவே நினைவுக்கு வருகிறது. ஆனால், இச் சொற்றொடர் மலையாள நாட்டிலே நோன்பு நோற்ற கன்னிப் பெண்கள் நோன்பின் முடிவில், திருவாதிரையன்று ஊசலாடும் விளையாட் டையே பன்னெடுங் காலமாகக் குறித்து வருகின்றது. 'திருவாதிரை ஒருவாக்களி' என்ற பழமொழி திருவா திரைத் திருநாளை எப்போதும் விட்டு நீங்காதது களி யாட்டமாம் ஊஞ்சல்' என்ற பொருளில்தான் வழங்கி இருத்தல் வேண்டும். பின்னர், தமிழ் நாட்டில் 'களி' என்பதற்கு 'விளையாட்டு' என்ற பொருள் மறைந்து, 'களியுணவு' என்ற பொருள் பரவியபோது 'திருவாதிரை - ஒருவாய்க் களி' என்று அந்தப் பழமொழியைத் தங்களுக்கு விளங்கும் வகையில் மாற்றியமைத்துக் கொண்டார்கள் எனல்வேண்டும்.

## இராட்டினம்

திருக்கோயில்களில் நடைபெறும் திருவிழாக்களை நோக்கும்போது ஒருண்மை விளங்குகிறது. ஊஞ்ச லாட்டுதல் பல சமயங்களில் நிகழ்வது வழக்கமாகி

விட்டது. ஆனுல், அது சிறப்பாக நடைபெறுவது திருவாதிரையில்தான் என்று கூறலாம். திருப்பனந் தாள் முதலிய இடங்களில் இராட்டினம்போலமைத்து அதிலே தேவ அடியார்கள் அமர்ந்து அதனைச் சுற்றும்படியாகச் செய்து விளையாடுவது வழக்கமா யிருந்தது. அதிலிருப்பவர்கள் சுற்றும்போது தலை கீழாகச் சுற்றி வருவதுபோல் தோன்றுவார்கள். 'கோயிற் பிணைப் பிள்ளைகள்' என்று திருவெம்பாவை கூறுவதை இங்கு நாம் மறக்க முடியாது. இப்பிணைப் பிள்ளைகளே பின்னர்த் தேவர் அடியாராக வளர்ந்து இழிந்தார்கள் என்று கூறலாம்.

## ஆகமமும் சம்பந்தரும்

ஆகமங்களும் 'டோலோத்சவம்' என்பதனை இன்றியமையாத திருவிழாக்களில் ஒன்ருகக் கூறு கின்றன. இந்த 'டோலோத்சவம்' இளவேனிற் காலத்துச் சித்திரையிலும், முன் பனிக் காலத்து மார்கழியிலும் நிகழுமென்று ஆகமங்கள் குறிப்பிடு கின்றன. பல திருவிழாக்களையும் பாவையொருத்தி காணுது மறைந்ததற்கு வருந்தி, திருப்பூம்பாவைப் பதிகமொன்று திருஞான சம்பந்தர் பாடுகின்ருர். அதிலே கார்த்திகை விளக்கீடு, மார்கழி ஆதிரை நாள், தைப்பூசம், மாசிக் கடலாட்டு, பங்குனி உத் தரம், என்பவற்றைக் கூறியபின் "பொற்ருப்புக் காணுதே போதியோ பூம் பாவாய்" என்று பாடுவத னுல் 'பொற்ருப்பு' என்பது சித்திரை மாதத் திருவிழா எனலாம். தாப்பிசைப் பொருள்கோள் என்பதற்கு ஊஞ்சல்போல் முன்னும் பின்னும் சென்று கூடும் பொருள்கோள் என்று கூறுவதால் இங்கும் 'தாப்பு'

என்பதற்கு ஊஞ்சற்கயிறு என்று பொருள் கொண்டு "பொற்றுப்பு" என்பதனைப் 'பொன்னூசல்' என்றே அறுதியிட்டுக் கூறலாம். ஆதிரைத் திருவிழா உலக மறிந்த தொன்ருகலான் அதனை ஆதிரை என்றே கூறி முடித்தார் சம்பந்தர். இதனால் அவர் காலத்தில், திருவாதிரையில் 'ஊஞ்சல்' இல்லை என்பதற் கில்லை.

### வானவூசல்

திருவாதிரை சிவனுடைய திருநாளெனப் போற் றப் பெறும். இதனால் சிவபெருமானுக்கு 'ஆதிரை யான்' என்ற பெயருண்டு. சிவபெருமானைச் சிவ சூரியனாக வழிபடுவது சைவரின் வழக்கம். இருக்கு வேதம் சூரியனை 'வானப் பொன்னூசல்' என்று பாடு கிறது (Golden Bough IV p. 279). வேதத்தில் சூரியன் என்று வருவதெல்லாம் கடவுளையே குறிப்ப தாகக் கொள்ளலாம். கம்பனும் கதிரவன் எழுவதனைக் கூத்தன் திருநடமாகக்கண்டு பாடுகிருன். எனவே ஊஞ்சல் திருவிழாவே திருவாதிரைத் திருவிழாவாக விளங்குவதற்கு எல்லாப் பொருத்தமும் உண்டென லாம். ஊஞ்சலாட்டு மழைத்திருவிழாவோடு தொடர் புடைய தென்ருல், அதிலே இதற்கென்ன பொருள் என்று ஆராய்தல் வேண்டும். சயாமில் மழைத் திரு விழா ஊஞ்சலாட்டு முடிந்ததும் நடைபெறுகின்றது. மழை வீழ்வதற்கு முன் நிகழ்வதனையே ஊஞ்சலாட்டு ஆனது குறித்திடல் வேண்டும். அவ்வாருனால் அது சூரியன் கடல் நீரை மேகமாக்குகின்ற நிகழ்ச்சியைக் குறிப்பதென்று கொள்வதே இங்குப் பொருத்த மாகும்.

வேல்ஸ் அறிஞர் இந்தக் கருத்தை வற்புறுத்தியுள்ளார். அவருக்கு முன்னர்க் 'கெரினி' என்பாரும் காரணம் காட்டாமல் இந்த முடிவுக்கே வந்துள்ளார். (Hastings Encyclopaedea of Religion and Ethics - Festivalas and Fasts - Siamese ) உலக மக்களின் பழக்கவழக்கங்களை ஆராய்ந்த 'பிரேசர்' (Frazer) பல பொருள்களை ஊசலில் இட்டு ஆடுவதனையெல்லாம் திரட்டி வைத்துள்ளார் (Golden Bough IV 277). அவர் ஊஞ்சல் உயரப்போவதுபோலப் பயிர்களும் உயர்ந்து வளர வேண்டுமென்பது இந்த ஊஞ்சல் திருவிழாவின் நோக்கமென்பர்.

ஆனல், மழைத் திருவிழாவோடு இந்த ஊஞ்சலை ஒன்றுசேர்த்துக்கொண்டு சயாம் மக்கள் கொண்டாடுகின்றனர். ஊஞ்சலைக் கதிரவன் போக்காகக் கொள்வதற்கு இந்த விழா நடக்கும் காலமும் துணை செய்கிறது. இக்காலம் சூரியன் திரும்பும் உத்தராயணத்தோடு தொடர்புடையது. கோடை காலத்தில் இரவும் பகலும் ஒத்துநிற்கும் நாளும் உண்டு. அதற்கு ஆறும் திங்களில், குளிர் காலத்தில் இவ்வாறு இரவும் பகலும் ஒத்துநிற்கும் நாளுமுண்டு. இதனை 'மழை நடு நாள்' என்பர். இந்த நாளை அடுத்தே இந்தத் திருவிழா நிகழ்கின்றது என்று வேல்ஸ் அறிஞர் சுட்டிக் காட்டுகிறுர். வடதுருவத்தில் ஆறு மாதம் மறைந்திருந்த சூரியன் மறுபடியும் பையத்தோன்றும் நாளாகுமிது. நீர்வட்டிலைச் சுற்றிச் சயாம் மக்கள் வட்டக் கூத்தாடுவதும், உத்தராயணத்தின்போது சூரிய வட்டம் மறுபடியும் சுழன்றுஏகுவதைக் குறிக்குமென்று அந்த அறிஞர் கருதுகிறுர். ஊஞ்சல் ஒரு சிறிதும் கோணுது கிழக்குமேற்காகவே போகும்படி

ஊஞ்சற் கம்புகள் அமைந்துள்ளன என்பதையும் அவர் காட்டுகிருர். தரையிலிருந்து காணும்போது, சூரியன் போக்குக் கிழக்கு மேற்காகத்தான் தோன்று கிறது. எனவே, இந்தச் சடங்குகள் மழைவளர்க்கும் சூரியனேடு தொடர்புடையனவேயன்றிப் பயிர்களின் உயரத்தைக் காட்டுவனவல்ல என்பது அந்த அறிஞர் கருத்து (Wales p. 245).

இரவும் பகலும் ஒத்துநிற்கும் நடுநாள்கள் ஆண் டில் இரண்டாஞல், சூரியனுடைய உத்தராயண தட்சிணுயனப் போக்கைக் குறிக்கும் ஊஞ்சல் ஆட்ட மும் இரண்டாதல் வேண்டும். அதற்கேற்பவே ஆக மங்கள், இரண்டு ஊஞ்சல் திருவிழாவைக் கூறுதலும் இவர் கருத்துக்கு அரண் செய்வதுபோலுள்ளது.

மற்றைய நடுநாள்திருவிழாவே வடநாட்டில்கண் ணன் ஊஞ்சலாக வழங்குகிறது. திருமால் மூன்றடி யால் உலகளந்த கதையைச் சூரியனது எழுச்சி நிலே யும், உச்ச நிலேயும், வீழும்நிலேயுமெனப் பொருள் செய்வதற் கேற்பத் திருமாலாம் கண்ணனேடு தொடர்பு கொண்ட அந்த ஊஞ்சலாட்டும் உயர்வும், தாழ்வும், உயர்வுமாக மூன்றிடங்களில் போய்வரு வதைக் காண்கிறேம். சிவன் கோயிலிற்போலப் பெருமாள் கோயிலிலும் ஊஞ்சல் இருப்பதைக் கண் டோம். ஆனுல், சயாமில் இரண்டு ஊஞ்சல் திருவிழா வும் ஒரேகாலத்தில் நடைபெறுகின்றன.

## சூரியனு ?

வேதகாலத்தில் சூரியனே வானப் பொன்னுஞ்சல் என வழங்கியதைக் கண்டோம். இந்த ஊஞ்சல் வேத

காலத்தில் நடந்ததனைப் பிரேசர் (Frazer) குறிப்பிடு கின்றார். ஒரு புரோகிதர் ஊஞ்சலில் அமர்ந்தாராம். ஊஞ்சல் ஆடும்போது தம் வலது கையால் ஊஞ்சல் பலகையும் நிலத்தையும் ஒரு சாண் அளவு இடையீடு வைத்துத் தொடுவாராம்; " கடவுள், கடவுள்தேவி யோடு ஒன்றாகி விட்டார்." என்று பாடுவாராம். சூரியனாகிய ஊஞ்சல் தரை மகளைத் தொடுவதனை இவ்வாறு அப்பாட்டு விளக்குகிறது என்பது பிரே சரின் கருத்து.

மார்கழி நோன்பு போல, ஊஞ்சல் திருவிழாவும் முதல் நாளன்று விடியற் காலத்திலே நடைபெறு கிறது. சூரியன் புறப்பாடே ஊஞ்சல் எனலாம். ஆதலின், இங்கே சூரியன் அமர்ந்து இருப்ப தாகப் பாவித்துக்கொண்டு அவருக்குப் பதிலாக ஒரு பார்ப்பனர் அமர்ந்து இருந்தார் என்று கொள்ளுதல் வேண்டும். சயாமில் ஒரு காலத்தில் ஊஞ்சலில் அரசனே ஆடியிருத்தல் வேண்டும் எனக் கருத இடம் உண்டு என்பது அறிஞர் வேல்ஸின் கருத்து (p.247). அரசருக்குப் பதிலாக அரசர் வேறு ஒருவரை ஏற் படுத்துவதும் உண்டு. அதனையே சயாமில் காண் கிறோம். அரசர் ஏற்படுத்திய சிவனார் ஆடாமல் வேறு சிலர் ஆடுவது பின் எழுந்த விளைவாகும். ஆனால், சயாம் கோயிலில் ஊஞ்சல் ஆடுவது கடவுளே தான். எனவே ஊஞ்சல் திருவிழா, கடவுளே வந்து ஆடும் திருவிழாவாகும். அரசரே கடவுள் என்று கண்டபோது அரசர் ஆடினார். தெய்வத் தன்மை பாராட்டிய பார்ப்பனர்களும் சிலபோது ஆடியது உண்டு. அரசர் தமிழ்நாட்டில் ஊஞ்ச

லில் ஆடியதாக நமக்கு ஒரு குறிப்பும் கிடைக்கவில்லே. தேவ அடியாரை வைத்து ஊஞ்சல் ஆடுவதனே முன்னரே குறிப்பிட்டோம். கோயிலில் தேவ அடியார்கள் சிலபோது புராணக் கதைகளே நடிப்பதும் உண்டு. அந்த நடிப்பில் அவர்கள் கடவுளாகவே வருவார்கள். அந்தக் கருத்தை மனத்தில் கொண்டால், இவர்கள் ஊசல் ஆடுவது கடவுள் ஊஞ்சல் ஆடுவதை நடிப்பதே எனலாம்.

## மாற்று ஆரசர்

அரசனுக்குப் பதிலாக வேறு ஒருவரை அமைப்பது என்பது உலகம் முழுவதும் வழக்கத்தில் நாம் காணும் ஒன்ருகும். "மூன்று நாள் அரசர்" என்பது போன்ற வழக்கம் எங்கும் உண்டு. சயாமிலும் ஊஞ்சல் திருவிழாவின்போது வேறு ஒருவரைச் சிவனுராக அரசர் அனுப்பியதைக் கண்டோம். பொன்னேர் பூட்டும் போதும், " தானிய தகா " என்ற விழாவின் போதும், அரசர்குழந்தைக்கு முடி களேயும் திருவிழாவின் போதும், அரசர் இவ்வாறு வேறு ஒருவரைக் குறிப்பிட்ட காலத்துக்கு அரசராக அமைப்பது அங்கே வழக்கம். இங்கேயெல்லாம் தம்முடைய மாந்திரிக சக்தியையோ தெய்வத் தன்மையையோ தான் மாற்று அரசர் இடத்தே மாற்றி வைக்கின்ருர் அரசர் எனலாம். பிற நாடுகளிலே இத்தகைய சக்திகளினுல் அரசனுக்குக் கேடு வரலாம் என்று மக்கள் பழங்காலத்தில் அஞ்சினுர்களாம். இத்தகைய சக்தி தவருக முடிந்தால் அரசனுக்குத் தீமை விளேவிக்கும் என்று அஞ்சினுர்கள் போலும். ஆகையினுலே வேறு ஒருவன் அச்சக்திகளேப் பயன்படுத்த ஏற்படுத்

திஞல் அந்தத் தீமை எல்லாம் அரசரைச் சாராது அவனையே சாருமென்று நம்பினர். அப்படித் தெய்வச் சக்திகள் வழங்கப் பெற்றவன் சிறப்புரிமைகள் பெற்று இருந்தான். ஊஞ்சல் திருவிழாவின்போது, நாட்டுப் பொற்களஞ்சியம் அவன் கையிலேயே இருந்தது என்பதைக் கண்டோம். இப்படி வந்த மாற்று ஆள்களைப் பிற நாடுகளில் தலை வெட்டி விடுவதும் உண்டு. ஆஞல், சயாமில் இந்தக் கொடுமை நடைபெறவில்லை. பௌத்தமத அன்பு நோன்பின் காரணமாகவோ, மூன்று நாள் அரசராய் இருந்தாலும் எப்போதும் தெய்வமாகக் கொண்டாடும் கருத்திஞலோ, இந்தக் கொடுமை அங்கே நிகழவில்லை எனலாம். இவ்வாறு அரசராக அமர்த்தப் பெறுவோர் கடவுளாகவும் கருதப் பெறுவர் என்பதும் விளங்குகிறது. ஊஞ்சல் திருவிழாவில் சிவஞராகவே, அந்த மூன்று நாள் அரசர் கருதப் பெற்ருர். ஒழுங்காகக் கடமையைச் செய்தால் தீமை வாராது என்கின்ற உறுதியாலும், அளவற்ற உரிமை கிடைப்பதாலும், இவ்வாறு அமைக்கப்பெறுவோர் அரசியலில் உயர்ந்த அதிகாரிகளாக இருக்கக் காண்கிருேம். இதஞலே, இந்த மாற்று அரசர் நிலையை எல்லோரும் விரும்பத் தொடங்கினர். எனவே, பழைய எண்ணம் மறைந்தது. அதஞல் அரசரே ஊஞ்சல் திருவிழாவிலும், முடிகளையும் திருவிழாவிலும் நேரே வரத் தொடங்கிஞர். சிவஞர் ஆகவும் இருந்து முடி களைந்தார் (Wales-p. 265); இதஞல் ஊஞ்சல் திருவிழாவில் சிவஞர் அரசரை வணங்கி அரசருக்கு ஒரு பெரும் சிறப்பினைத் தரும் வாய்ப்பு ஏற்பட்டது.

அறிஞர் வேல்ஸ் என்பவர், மாற்று அரசர் நிலையில் ஐந்து வேறு வளர்ச்சி, படிப்படியாக ஓங்கக் கண்டார். முதலில் அரசரே திருவிழாச் சடங்கில் பங்கு கொண்டார். இரண்டாம் நிலையில் அரசர் வேறு ஒருவனைச் சடங்கு செய்ய ஏற்படுத்திவிட்டுத் தாம் கண்டு களிப்பவராக மட்டும் இருந்தார். மூன்றும் நிலையில் மாற்று அரசன், அரசரின் சக்திகளையும் உரிமைகளையும் கைப்பற்றினன். அரசர் அந்தத் திருவிழாவின் போது எல்லா உரிமைகளையும் இழந்து விடுவார். நான்காம் நிலையில் மாற்று அரசனிடம் ஆற்றலோ உரிமைகளோ இல்லாது ஒழிந்தன. அரசர் மறுபடியும் சடங்கைக் காண வருகின்றார். இது இரண்டாம் நிலையைப் போன்றது. ஐந்தாம் நிலையில் மாற்று அரசன் என்று ஒருவனில்லை. அரசரே சிவனாராக வருவதைக் கூடப் பாவைத் திருவிழாவில் பார்க்கிறோம்.

## தமிழ் நாட்டில் இல்லை

இந்த விளக்கம் எல்லாம் சயாமில் நடந்த திருவிழாவிற்கே பொருத்தமாகும். அத்தகைய நிலைகள் தமிழ் நாட்டில் எழுந்தன என்று சொல்வதற்கு இல்லை. பாவை நோன்பில் கன்னிப் பெண்கள் கோயிலில் கடவுளையே கண்டு பாடுகின்றார்கள். ஊஞ்சலில் கடவுள் ஆடுவதை இன்றும் காண்கிறோம். ஒரு சில போது கடவுளுக்குப் பதிலாகக் கடவுள் வேடம் கொண்டவர்கள் என்று கருதத்தக்க தேவ அடியார்கள் ஆடவும் காண்கிறோம். இருந்தாலும் இவை அத்தனையும் வேதம் கூறிய வான ஊஞ்சலையே நமக்கு நினைப்பு ஊட்டுவதில் தடை ஒன்றுமில்லை.

மாற்று அரசன், ஊஞ்சல் திருவிழாவின் பின், பலருக்கும் நன்கொடை அளிப்பதைக் கண்டோம். இது அவனுடைய அரசுரிமையின் விளக்கம். பாவை நோன்பில் மக்கள் நோன்பின் பயனுகச் சிலவற்றை எதிர் பார்க்கின்ருர்கள் என்று பாவைப் பாடல்கள் நமக்கு விளக்குகின்றன.

27. பாடிப் பறைகொண்டு யாம்பெறு சம்மானம்
நாடுபுகழும் பரிசிஞல் நன்ருக............
என்றனைய பல்கலனும் யாம் அணிவோம்
ஆடை உடுப்போம்

ஆண்டவன் இவற்றைத் தருவதுபோல் மாற்று அரசர் வேடம் பூண்டு சிவனுர் என வருபவரே நன்கொடைகளை வேறு வகையில் சயாமில் தருகிருர் என்று கூறலாம்.

# 7. பாவைப்பாட்டுப் பண்பாடு

## சமரசம்

இவ்வாறு திருப்பாவையோடு ஒப்புநோக்கிய இப்பகுதியை முடிக்குமுன் மற்ருெரு குறிப்பையும் விளக்கவேண்டும். சயாமில் வளர்பிறையின் முடிவு நாளான பௌர்ணமியன்று சிவனுரது வழிபாடு முடிகின்றது ; அடுத்து, திருமால் வழிபாடு தொடங்குகிறது என்று கண்டோம். தமிழ் நாட்டிலே திருவெம்பாவை ஓதுவது நிறைதிங்களான திருவாதிரையோடு முடிகின்றது. இந்த அளவுக்குச் சயாமில் நடப்பது தமிழ் நாட்டு வழக்கோடு பெரிதும் ஒத்துள்ளதெனலாம். ஆனுல், தமிழ் நாட்டில் திருப்பாவையை மார்கழித் திங்கள் முப்பதுநாளும் ஓதிவருகின்ற வழக்கமே உண்டு. பின், இதனைத் தேய்பிறை முதலிலிருந்து சயாமில் தொடங்குவது எதனுலே என்ற கேள்வி பிறக்கிறது.

இதுவரை காட்டி வந்ததுபோல் இங்கிருந்து வெளிநாட்டிற்குச் சென்றவர்கள் தாய்நாட்டோடு தொடர்பு அற்றபின், தம் சூழ்நிலைக்கு ஏற்றவாறு பாட்டுக்குப் பொருள் கொண்டார்கள் என்று கூற இடமுண்டு. அங்கே, சைவர்களும் வைணவர்களும், தனித்தனியே பெருமையாக வாழ்ந்தநாளும் இருந்திருக்க வேண்டும். தனித்தனியே, சிவன் கோயிலும் பெருமாள் கோயிலும் இருக்கக் காண்கிருேம். பார்ப்பனரும் வெவ்வேருக உள்ளனர். சைவக் கூட்டத்தினர் ஒரு பெயராலும் (Brahmana Bidhi) வைணவப்

பார்ப்பனர்கள் வேருெரு பெயராலும் (Brahmana Bhidispasa) அழைக்கப்பெறக் காண்கிருேம். இவ்விரு திறத்தாரின் சிறப்பும் பட்டாபிடேகத்தின் போது நன்கு விளங்குகிறது. சைவகுரு திருமுடியை எடுத்துக்கொண்டு அரசரை வாழ்த்தியபின், அடுத்து அவரைப்போலவே வைணவகுருவும் வாழ்த்துவார். அரச சின்னங்களும் சக்கரம்போன்ற வைணவச் சின்னங்களாகவும் திரிசூலம் போன்ற சைவச் சின்னங்களாவும் இருக்கக் காண்கிருேம். பாதுகை இராமாயணத்தில் வரும் பாதுகாபட்டாபிடேகத்தை நினைப்பூட்டி வைணவச் சின்னமாகிறது.

இவர்கள், தமிழ் மந்திரம் ஓதியதால், தமிழ் நாட்டுப் பார்ப்பனர் என்பதும் விளங்குகிறது. பின்னர், சைவர்களின் கை ஓங்கியது போலும். அதனுலேயே, சைவகுரு பட்டாபிடேகத்திலும், ஊஞ்சல் திருவிழாவிலும் முதலிடம் பெற்றனர் போலும். பின்னர் இந்துமதம் கீழடங்கப் பௌத்தமதம் மேலோங்கியது. இந்துப்பார்ப்பனர் அந்த நிகழ்ச்சிக் கேற்பப் பௌத்த அரசர்களுக்கும் கீழ் அடங்கியே வாழவேண்டியதாயிற்று. தங்களுக்குள் போராட அப்போது வாய்ப்பு ஏது? அதனுல், ஏதோ ஒரு வகையாகச் சைவரும், வைணவரும் ஒத்துப் போயினர். அந்த நிலையில் தான் முதலில் பத்து நாட்கள் சைவர்களும், பின் ஐந்து நாட்கள் வைணவர்களும் இந்தத் திருவிழாவைக் கொண்டாடுவதாக ஒரு முடிவுக்கு வந்தனர் போலும். இதனுல் ஒரு நன்மையும் ஏற்பட்டது. இந்து மதத்தின் சமரச சன்மார்க்கக் கோட்பாடு அங்கே வாழ இடம் ஏற்பட்டது. அது தானே திருவெம்பாவை—திருப்பாவை என்றபெயரின் சிறப்பு.

திருப்பாவை முதற் பாடல் "மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால்" என்று பாடுகிறது. ஆகையால், பௌர்ணமிக்குப் பின்னரே, இத்திரு விழாவைக் கொண்டாடுதல் பொருத்தம் என்று சயாம் வைணவர்கள் கருதி, மேற்கண்ட முடிவை ஒப்புக் கொண்டார்கள் போலும். "மார்கழி நீராட் .... .... .... ...." என்று பின்னெல்லாம் பொதுவாக வருவதனை வற்புறுத்திக்கூற அவர்களுக்கு வன்மை யில்லைபோலும். திருப்பாவையில் மழை பெய்ய வேண்டும் என்ற வேண்டுகோளும் உண்டு. ஆனால், நீராடுவதனைத் திருவெம்பாவை 7, 12, 13, 14, 15, 16, 17-ஆம் பாடல்களில் நீள விளக்கிப்பாடுகிறது. எனவே, நீராடுதலால் மழைத்திருவிழா சைவருக்கே உரியதெனக் கருதிச் சைவர்களுடைய திருவிழாவின் போதே அதை நடத்திவந்தார்கள் எனலாம்.

## பௌத்த ஆட்சி

பௌத்தர்கள் மேலோங்கியபோது சைவ வைண வர்கள் ஏன் அரசியலில் தொடர்பு கொண்டார்கள் என்ற கேள்வி எழலாம். பார்ப்பனர்கள் இராசசூயம், பட்டாபிடேகம் முதலியவற்றைச் செய்து, மக்கள் உள் ளத்தே அரசரின் பெருமையை வற்புறுத்தி, அரசர் களைக் கடவுளாகவே மக்கள் நினைக்குமாறு செய்தார் கள். இந்தச்சடங்கு செய்வதனைத் தமது பிறப் புரிமையாகக் கொண்டவர் இந்துமதப் பார்ப்பனரே யாவர். அரசர்கள் மதம் மாறினாலும் இந்த ஆரவாரச் சடங்குகளை விட்டுவிடுவதற்கில்லை. இந்தச் சடங்கு களின் பழக்கத்திலேயே வளர்ந்த குடிமக்கள் இந்த ஆரவாரங்களின்றி அரசனை அரசனாகக்கொள்வது

அருமையாகும். அதனாலேயே, அப்பார்ப்பனர்களே அரசியல் அலுவலர்களாக அரசர்கள் வைத்துக் கொள்ள நேர்ந்தது. அப்பார்ப்பனர்களும் தங்கள் பழக்கவழக்கத்தைச் சூழ்நிலைக்கேற்றவாறு மாறுதல் களோடு செய்து வந்தனர். அப்படிச் செய்து வந்த-மையாலேயே சயாமில், குடியரசு அண்மையில் வரும் வரை, இத்திருவிழாக்கள் தமிழ் மந்திரத்தோடு தமிழ்த் தொடர்பை நிலைநாட்டி வழங்கிவந்தன.

ஐயம்

இதுவரையும் கூறியனவற்றைப் படிக்கும்போது, தமிழ் நாட்டுச் சடங்குகளுக்கும் சயாம் நாட்டுச் சடங்குகளுக்கும் இடையே உள்ளனவாக நாம் காட்டிவந்த ஒற்றுமை மொட்டைத்தலைக்கும் முழங் காலுக்கும் முடிபோடுவதுபோலத் தோன்றும். இவ் வாறு வலிந்தும், நலிந்தும் பொருள் கொண்டால் உல கச் சடங்கை எல்லாம் தமிழ்ச்சடங்கோடு ஒற்றுமை காட்டலாம் என்றும் படிப்பவர் கருதலாம். உலகம் முழுவதிலும், பழங்கால மக்கள் எல்லோரும், அடிப் படையில் ஒன்றுபோலவே எண்ணி ஒழுகி வந்தனர் என்பதனைச் சடங்குகள் தெள்ளத்தெளிய விளக்கு கின்றன. இதனையே பிரேசர் முதலிய அறிஞர்கள் வற்புறுத்துகின்றனர். ஆனால், நாம் இத்தகைய ஒற்றுமையைமட்டும் வற்புறுத்தவா இந்த ஆராய்ச்சி செய்கின்றோம்? இந்தியப் பண்பாடே அன்றிச் சிறப்பாகத் தமிழ்நாட்டுப் பண்பாடு, எப்படிக் கீழைக் கடல் தீவுகளிலும் நாடுகளிலும் பரவியது என்பதனை ஆராய்வதே நமது நோக்கம் ஆகும். அந்தப் பாவைப்பாட்டுப் பண்பாடு எவ்வாறு அங்கெல்லாம்

பரவியது? சிறப்பாக மிகத் தொலைவில் உள்ள சயாமில் பரவியது? இதனை விளக்குவதே நம் நோக்கம். இதனை, எப்படி நாம் கூறியன விளக்கமுடியும் என்பதே ஐயம்.

ஊஞ்சல் திருவிழாவை வங்காள நாட்டில் நடைபெறும் டோலா யாத்திரையோடு வங்காள அறிஞர்கள் தொடர்பு படுத்தியதனைக் கண்டோம். அவ்வாறிருக்கத் தமிழ்நாட்டு மார்கழி நோன்போடு எவ்வாறு அதனைத் தொடர்புபடுத்த முடியும்? இது வரையிலும் காட்டிய குறிப்புக்களில், மற்றையோர் காட்டிய குறிப்புக்களை வரையறுத்து மறுப்பதற்கு என்ன மறுக்கமுடியாத சான்றுகள் உள்ளன? தமிழனை உயர்த்துவதோ, தமிழ்ப்பண்பாட்டை உயர்த்துவதோ அறிவாராய்ச்சியின் நோக்கமாகாது. உண்மைகாண்பது அறிவாராய்ச்சியின் நோக்கமாதல் வேண்டும். "தமிழ்நாட்டுத் தொடர்பு கீழைக்கடல் நாடுகளோடு உண்டு" என்பது புதிய கொள்கை அன்று. மூன்றுவது நந்திவர்மபல்லவனை அவனி நாராயணன் எனக் குறிப்பதால், அவன் காலத்தது என்று கருதப்படும் தமிழ்க்கல்வெட்டு ஒன்று தகோபாவில் இருப்பது ஒன்றே இதனை ஐயத்திற்கு இடமின்றி நிலைநாட்டுகிறது. (Bulletin de 'Ecole Francaise' – Extreme Orient 1909 p. 234 etc) அவ்வாறிருக்க இந்தக் கட்டுரை இவ்வாறு வலிந்து முயன்று, இடித்த அவலை இடிப்பானேன்?

**சான்றுகள்**

இந்த ஆராய்ச்சியின் முடிபு தமிழ்ப்பாவைப் பாட்டுப் பண்பாடு சயாம்வரை பரவி இருந்ததை

நிலைநாட்டுவதே ஆம். தமிழ்த்தொடர்பு அங்கும் உண்டு என்பதே இவ்வாராய்ச்சியின் முடிபுக்கு முதலாம் அடிப்படை. தமிழை அங்கே படிப்பவர் சிலராவது இருந்திருக்கவேண்டும் என்பது இரண் டாவது அடிப்படை. இதனைத் தக்கோபா கல் வெட்டு ஓரளவு நிலைநாட்டுகிறது. தமிழகப் பார்ப் பனர் சயாம் வரை பரவி இருந்தனர் என்பது மூன்ருவது அடிப்படை. இதனை நம் ஆராய்ச்சி உறுதிசெய்துள்ளது எனலாம். இதுவும் நாம் புதிய தாகக் காட்டியதன்று. திரு-நீலகண்ட சாத்திரியார் போன்ற அறிஞர்களும் அறிஞர் வேல்சும் கண்ட முடிபே ஆம். இந்தத் தமிழ்ப் பார்ப்பனர் அரசியற் சடங்குகளின் சிறப்பிடம் பெற்றிருந்தனர் என்பது ஐந்தாவது முடிபு. இதுவும் அந்த அறிஞர்கள் கண்டதே ஆம்.

தமிழ் மந்திரம் அங்கு ஓதப்பெற்றது ஆருவது அடிப்படை. அறிஞர் வேல்ஸ் இதனை வற்புறுத்தி யுள்ளார். ஆனுல், அதன் சிறப்பின் நுட்பத்தைத் தமிழ்ப் பண்பாட்டு வளர்ச்சி என்ற கண்கொண்டு பார்ப்பதே நம் ஆராய்ச்சியின் புதுப்போக்காகும். அங்கும், அறிஞர் வேல்ஸ் வழிகாட்டியுள்ளார் என்றே கூறவேண்டும். பட்டாபிஷேகத்தை விளக்கிக் கூறும் போது, தமிழ் மந்திரமும் பாலியும் சயாம் மொழியும் கையாளப் பெறுவதனை விளக்கி, அதன் ஆழ்ந்த பொருளையும் விளக்குகிருர் அறிஞர் வேல்ஸ். இந்த மூன்று மொழியும் இங்கே கூறியமுறையில் ஒன்றின் பின் ஒன்ருக மக்களிடையே சிறப்பும் பெற்றிருந்தன என்பதே அவர் ஆராய்ச்சியின் உட்கோள் எனலாம். வடமொழி மந்திரங்களும் உள்ளன. அவற்றைப்

பயன்படுத்தியவர்கள் தமிழ் பேசியவர்களே ஆம். தமிழ் மந்திரம் அதனை வற்புறுத்துகிறது. புத்தமதம் பரவியபோது புத்த மதத் தொன்மை மொழியாம் பாலி புகுந்தது. பொதுமக்கள் அதனை அறிய முடியாமையால் சயாம் மொழியையும் பயன்படுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

" தமிழ் மந்திரம்'' என்பது தமிழ்நாட்டு மக்களில் பலர் அறியாத ஒன்று. " தமிழிலும் மந்திரமா ? '' என்று தமிழ்நாட்டில் பலர் வியப்படைவர் என்பதில் ஒருசிறிதும் ஐயப்பாடில்லை. ஆனால், வைணவர்கள் தமிழ்நாட்டில் தங்கள் சடங்குகளில் நாலாயிரப் பிரபந்தப் பாடல்கள் பலவற்றை மந்திரமாகப் பயன் படுத்தித்தான் வருகின்றனர். இத்தகைய நிலையே சயாம் நாட்டிலும் பரவி இருந்தது என்று நாம் முடிவு கூறலாம். தமிழ்நாட்டுப் பார்ப்பனர் தமிழைப் பாராட்டுவது இல்லை என்றும், தமிழுக்குப் பகைவர் என்றும் ஒருசிலர் கருதும் கருத்து, சயாம் நாட்டுப் பார்ப்பனர் சடங்குகளைப் பொறுத்தவரையில், உண்மையன்று என்றே கூறவேண்டும். தமிழ் வளர்த்த சம்பந்தரும், மணிவாசகரும், பெரியாழ் வாரும், ஆண்டாளும் கருவூர்த்தேவரும், காளமேக மும், வில்லிபுத்தூராரும் போன்றவர்களே சயாம் நாட்டில் சென்ற பார்ப்பனர்கள் என்பது தெளிவு.

## தமிழ் மந்திரம்

தமிழ் மந்திரமாகக் கடைதிறப்பு மந்திரம் என் பது ஒன்றே அறிஞர் வேல்ஸ் கூறுவது. இது எந்தப் பாடல் என்பது விளங்கவில்லை. ஆனால், அவர் தமிழ்

என்று குறிப்பிடாத தமிழ்ப்பாடல் ஒன்று உண்டு என்பதனை அவர் கூறும் குறிப்பிலிருந்தே நாம் உய்த்துணர முடிகிறது. சிவன்கோயிலில் நடைபெறும் வழிபாட்டில், நான்கு பார்ப்பனர் வெவ்வேறு மந்திரத்தைத் தனித்தனி ஓதியபின், நால்வரும் ஒருங்கு சேர்ந்து ஒரு மந்திரம் ஓதுவார்கள் என்று கண்டோம். அந்த மந்திரத்தின் பெயர் 'லொரிபாவாய்'. என்பதாகும். இது முடித்ததும் சங்கு முழங்குமாம் இந்த லொரிபாவாய் என்பது பாவைப் பாடல்களின் முடிவாக வரும் "ஏலோர் எம்பாவாய்" என்பதாகும் என்றேம். இங்கே முதல் உள்ள 'ஏ' என்பதனைக் காணேம். லோரெம் என்பது லொரி என்ருயிருக்கக் காண்கிறேம். லொ என்பதனை எடுத்துக் கூறினர் போலும். ஆதலின், அடுத்த எழுத்து மாற வழியுண்டு. எம் என்பது ஈற்று மெல்லெழுத்தை (ம் என்பதனை) இழந்தபோது எ என்பது மூக்கு ஒலியாக ஒலிக்கப் பெற்றது போலும், இதனைக் கண்டறிவது அருமையாதலின் இ என்றே அது கேட்டதுபோலும். 'பாவாய்' என்பது ஒரு சிறிது மாற்றமும் இன்றி விளங்கியது. இவ்வளவும் கூறியமையால் கடைதிறப்பே அன்றிப் பாவைப்பாட்டு ஒன்றையும் முடிமணி மந்திரமாக அங்கே ஓதினர் என்பது தெளிவாகிறது. அதுவே ஏழாவது அடிப்படை.

"இதுவும் ஊகந்தானே? அறிஞர் வேல்ஸ் அதனைத்தமிழ் மந்திரமாகக் கூறவில்லையே?" என்று ஓர் ஐயம் எழலாம். எனவே, பாவைப் பாட்டுக்கும் அந்தத் திருவிழாவுக்கும் பெருந்தொடர்பு உண்டு என்று கூறுவதே இந்த ஆராய்ச்சியின் பெருமுடிபு. இதனை விளக்கும்போதுதான், நாம் சயாம் சடங்குகளைத்

தமிழ்நாட்டுச் சடங்குகளோடு தொடர்பு படுத்திய்து உறுதிப்படும். இந்த உண்மை வெளியான பின், அந்தச் சடங்கினை இவ்வாறுதான் விளக்கவேண்டும் என்று எல்லோரும் ஒப்புக்கொள்வர். இந்த உண்மையை எடுத்துக் காட்டுவதே இந்த ஆராய்ச்சியின் சிறப்பாகும்.

## திருவெம்பாவை – திருப்பாவை

எத்தனையோ காலமாக மக்கள் இந்தச் சடங்கினை அறிந்திருக்க, இந்த எளிய உண்மையை எவ்வாறு அறிஞர்கள் அறியாது போயினர் என்ற கேள்வி எழலாம். இதனுடைய சயாம் பெயரையே கொண்டு, அறிஞர்கள் ஆராய்ந்து வந்துள்ளனர். ஊஞ்சல் திருவிழா என்பதே அந்தச் சயாம் பெயரின் மொழிபெயர்ப்பு.

ஆகவே, எந்த ஊஞ்சற்றிருவிழாவினோடு இதனை ஒற்றுமைப்படுத்துவது என்றே ஆராய்ந்தார்கள். ஊஞ்சலுக்கே இதுவரை முதலிடம் கொடுத்தார்கள். ஆனால், சயாம் மக்களுக்கே பொருள் விளங்காத பெயரே அதனுடைய சிறப்புப் பெயர். அதனைப் பலரும் குறித்தே உள்ளனர். ஆனாலும், அது விளங்காத பெயர் என விட்டுவிட்டனர் போலும். தமிழன் எவனும் அதனை இன்னது என்று கண்டுபிடித்து விட முடியும். அந்தப் பெயரே " த்ரீயம்ப (b) வாய் திரிப (p) வாய் " என்பதாம். லொரிபாவாய் என்பதில் பாவாய் என்பது தமிழில் உள்ளவாறு விளங்க, இங்கே அதுவும் பவாய் என மாறியுள்ளது. "திரு" " த்ரி " என்று மாறுவது இயல்பே. " திருச்சிற்றம்பலம் " " த்ரிச்சிற்றம்பலம் " என ஒலிக்கப்பெறு

வதனைக் கேட்கவில்லையா? இது ஒருதமிழ் ஒலிப் போக்கு என 18-ம் நூற்றுண்டிலேயே வீரமாமுனிவர் குறிப்பிட்டுள்ளார். எம்பாவாய் என்பது அம் பாவாய் என்ருகியுள்ளது. எம்பி என்பதனை அம்பி என வழங்குவதனைத் தமிழ் நாட்டில் இன்னும் நாம் கேட்கவில்லையா? மற்ருெரு குறிப்பும் உண்டு; மெல்லெழுத்தின் பின்வரும் வல்லெழுத்து (Plosive) உயிர்ப்புடைய வல்லெழுத்தாகாமல் (Voiceless) ஒலியுடைய வல்லெழுத்தாகும் (Voiced plosive) என்று கால்ட்வெல் கூறுகிருர். "எம்பாவை" என்பதில் உள்ள பகரம் b என்றே ஒலிக்கப் பெறுகிறது. ஆனல், திருப்பாவை என்பதில் உள்ள பகரம் அவ்வாறு ஒலிக்கப் பெறவில்லை. ப்ப என்பது பகரம் என்றே ஒலிக்கப் பெறும். இந்தக் குறிப்புகள் அத்தனையும் அப்பெயர் தமிழ்ப் பெயரே என்பதனை நிலை நாட்டுகின்றன.

எனவே, "திருவெம்பாவை திருப்பாவை" என்பதே இந்தப் பெயர் என்பதில் ஐயம் இல்லை. (Wales p. 238) எனவே "இது பொதுமக்கள் வழங்கிய பெயர் அன்று; இது பழைய மந்திரப் பெயர்" எனலாம். இதனை "த்ரீயம் பாவாய்" என்று கடைக்குறையாக வழங்கினர். ஐந்தாம் இராம அரசர் எழுதிய நூலிலிருந்து எடுத்து அறிஞர் வேல்ஸ் தரும் பகுதியில் இந்தக்கடைக் குறைப் பெயரே உள்ளது. (p 251).

### முடிவு

எனவே, திருவெம்பாவை அங்கு வழங்கியதில் ஐயம் இல்லை. சைவத்தின் ஆக்கநிலையே இந்தத் தொடரில் அதற்கு முதலிடம் தந்துள்ளது. சைவத்

திருவிழா அன்றே முதல் நிகழ்ந்தது, திருப்பாவையும் அங்கு வழங்கியதில் ஐயமில்லை. வைணவர் கோயில் விழா ஆனது பின்னர் நிகழ்ந்ததற்கேற்ப இத்தொடரில் திருப்பாவை இரண்டாம் இடம் பெறுகிறது.

இந்தப் பெயரே இத்திருவிழாவைப் பாவைப் பாட்டின் கண் கொண்டு பார்க்க வேண்டும் என்று வற்புறுத்தவில்லையா ? ஆகையால், நாம் இக்கட்டுரையில் குறித்துவந்த குறிப்புக்கள் வலிந்து பொருள் கொள்வன அல்ல என்பது தெளிவு. அவ்வாறுதான் இந்த அடிப்படையில் ஆராய வேண்டும் என்பது இவ்வளவும் கூறியாமையால் விளங்கும்.

இந்தத்திருவிழா பாங்காக்கில் (Bangkok) நடப்பதற்கு முன், சயாமில் முன்னைய தலைநகரங்களாகிய அயுதத்திலும், சுயோதத்திலும் நடந்தன என்பதனைக் காட்ட அங்கும் ஊஞ்சற்கம்புகள் இன்றும் நின்று நிலவுகின்றன. மற்றைய நகரங்களில் எல்லாமும் இந்தத் திருவிழா நடைபெற்றதாம். நகர ஸ்ரீ தர்மராஜா என்ற இடத்தும் ஊசல் இன்றும் நின்று கொண்டிருக்கிறதாம். எனவே, தமிழ்ப்பண்பாடு பரவிய உண்மை இதனால் நன்கு விளங்குகிறது எனலாம்.

### பண்பாடு பரவிய முறை

இது வரையில் கூறிய விளக்கங்கள், தமிழ்ப் பண்பாடு பிற நாடுகளில் எவ்வாறு பரவியது, என்பதை நன்கு விளக்குகின்றன எனலாம். தமிழர்கள் சில போது பிற நாடுகளில் அரசர்களாக முடி சூடிக்

கொண்டதும் உண்டு ; வணிகர்களாகச் சென்று வந்ததும் உண்டு. ஆனல், பார்ப்பனர்களும் இந்தப் பண்பாட்டை வளர்த்தார்கள் என்பதே நாம் அறிந்து வந்த ஊஞ்சல் விழாவின் முடிவு ஆகும். அரசர் சடங்குகளை, மக்கள் உள்ளத்தைக் கவரும் வழியில், செய்து காட்டி; அரசரையே கடவுள் ஆக்கிய சிறப்பு இப் பார்ப்பனர்க்கே உரியது எனலாம். அதனுலே, மக்களும் அரசரும் அவர்களைப் பாராட்டினுர்கள்.

எனவே, இந்தப் பண்பாடு பரவியது போரினுல் அன்று. இவர்கள் நிலை நாட்டியது தமிழ் அரசும் அன்று. தமிழ்ப் பண்பாட்டு அரசினையே இவர்கள் எங்கும் பரப்பினர். இவ்வாறு பரப்பி வந்தபோது அவர்கள் தங்களுடைய தமிழ்ப் பாடல்களையும் தமிழ்ப் பாட்டின் பண்பாட்டினையும் அங்கேயும் சென்று வளர்த்தார்கள். ஊஞ்சல் திருவிழா, பாவைப் பாட்டின் பண்பாட்டு விளக்கமாக, இருப்பது கொண்டு இதனை நாம் நன்கு அறிகிருேம்.

இவர்கள் பண்பாட்டினை வளர்த்த பொழுது தாங்கள் சென்ற நாட்டின் பண்பாட்டினை அறவே ஒழிக்க முயலவில்லை. அவரவர்கள் பண்பாட்டில், அந்த அந்த நாட்டு மக்களுக்கு ஈடுபாடு பெரிது என்பதை இவர்கள் அறிந்திருந்தார்கள். அந்தப் பண்பாட்டையே அழகிய மரமாக வளர்த்து, அதற்கு மேலும் அழகுக்கு அழகு செய்வது போல், தங்களுடைய பண்பாட்டை அதன் மேலே அழகிய பொற்கொடிபோல் முழுவதும் பரவ விட்டு வளர்த்தார்கள். இதனுலே, பண்பாட்டுப் போராட்டம் என்பது எழாமலே போய் விட்டது. இரு வேறு பண்பாடுகள்

ஒருங்கியைந்து இங்கு வளர்கிற காட்சியைக் கீழைக் கடல் நாடுகளில் நாம் நன்ருகப் பார்க்கிருேம். நம் நாட்டில் இருந்து இராமாயணக் கதை சென்ருலும், அங்கு வழங்கும் கதைகளோடு ஒன்ருக இயைந்து வேறு ஒரு சிறந்த அழகிய கதையாக அது மாறு கிறது. பாரதக் கதைகளும் அப்படியேயாம். இவ் வாறு, இந்தியக் கதை அந்நாட்டுக் கதையாக மாறிய போது, அம் மக்கள் உள்ளம், தம் கதையே என நம்பி அதிலே அளவு கடந்து ஈடுபட்டது. இன்றும் ஜாவா வில் நடைபெறும் பாவைக் கூத்துகள் எல்லாம் பாரத ராமாயணக் கூத்துகளேயாம். அவ்வாறே மகாபலி புரத்துச் சிற்பம் அந்த நாடுகளுக்குச் சென்றபோது அந்த நாட்டின் பண்பாட்டோடு ஒன்ருகி, மிக அழகிய உயிர் உள்ள ஆற்றல் பெற்றுத் தனிநிலைச் சிற்பங்க ளாக வளர்ந்ததனையும் காண்கிருேம்.

அதுவே போல், இப் பாவை நோன்பும் அங்குச் சென்று, நாட்டிற்கு ஏற்ப, மாறுதல் அடைந்து விளங்கியதைக் காண்கிருேம். பெண்களே வாராத ஒரு பாவை நோன்பினைத் தமிழ் நாட்டில் எண்ணிப் பார்க்கவே முடியாது. ஆனல், சயாமில் அத்தகைய சூழ்நிலை ஏற்பட்டதினல் அதற்கு ஏற்ப, ஊஞ்சல் திரு விழாவில் பெண்களே வாராத ஒரு நிலையைக் காண் கிருேம். அந்நாட்டு வழக்கங்களையும் தங்களுடைய சடங்குகளிலே உட்புகுத்தி, அந்நாட்டு மக்கள், இச் சடங்குகளை வேற்று நாட்டன என்று நினையாதபடி, தமிழர்கள், அங்கே ஒரு புதிய பண்பாட்டை உருவாக் கினர்கள். மழைத் திருவிழா எங்கும் நடைபெறு கிறது. அது போலவே சயாமிலும் பழங்காலத்திலும் நடந்திருக்கலாம். ஆனல், அதனைப் பாவைத் திரு

விழாவோடு ஒன்ருக்கி விட்டார்கள், அங்குச் சென்ற தமிழர்கள். இங்கு நடந்த ஊசல் திருவிழாவையும் அம் 'மக்கள் தம்முடையன என எண்ணும்படி மாற்றி அமைத்தார்கள் அத் தமிழர்கள். தமிழ் நாட்டில் நடக்கும் பாவை நோன்பிற்கும் சயாமில் நடப்பதற் கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளை மறுபடியும் சொல்ல வேண்டுவது இல்லை. அவற்றை முன்னரே நாம் கூறியிருப்பதினின்றும், நாம் இங்கே வற் புறுத்துகின்ற உண்மை, இதுவரையிலுமே எல்லோ ருக்கும் விளங்கியிருத்தல் வேண்டும். இந்த மாற்றங் களே தமிழ்ப் பண்பாட்டின் பெருமையை விளக்குகின் றன எனலாம்.

## அன்பு நெறி

எனவே, தமிழர்கள் அன்பு நெறியிலே தங்களு டைய கடவுள் அருள் நெறியை வளர்த்தார்கள். அந்த அருள் நெறியை, மற்றவர்கள் அன்போடு முழு உள்ளத்தோடும் பின் பற்றும்படி செய்தார்கள். இதன் மற்றைய அருள் விளைவு எல்லாம் எளிதில் விளைவதால் அந்நாட்டவர்க்கு நன்மையே பெருகும் என்று இவர்கள் கருதினர்கள். குறுகிய நோக்கம் கொண்டு தங்கள் கருத்து முழுவதனையும் பிற நாட் டார் இடையே, மற்றவர்கள் போலப் புகுத்த முயன்று, முடிவிலே அந்நாட்டுப் பகைஞர்களாக மாறியது போல இவர்கள் முயலவும் இல்லை; பகை ஞராக வெறுக்கப் பெற்றதும் இல்லை.

தமிழ்ப் பண்பாட்டை எண்ணும்போது, இவர் களுக்குப் பாவைப் பாட்டு, அந்த வேற்று நாட்டுச் சூழலிலும் நினைவிற்கு வந்ததே ஒரு பெரும் சிறப்பு

ஆகும். அந்தப் பாவைப் பாட்டு, அங்குச் சென்ற இந்தத் தமிழர்கள் மனத்தில் எவ்வளவு வேர் ஊன்றி இருந்தது என்பது இதனுலேயே விளங்குகிறது. அப்படியானல் இந்த நாட்டிலும் திருப்பாவையும், திருவெம்பாவையும் மக்கள் உள்ளத்தைப் பெரிதும் கொள்ளே கொண்டு இருந்தன என்று உறுதியாகக் கூறலாம். இதனே வேற்று நாட்டாரும் விரும்பி வர வேற்பார்கள் என்று அந்தக் காலத் தமிழர்கள் எண்ணியதே இப்பாடல்களின் பெருமையாகும்.

எனவே, தமிழ்ப் பண்பாட்டின் வளர்ச்சியை ஆராயும்போது, இவ்வாறு வேற்று நாட்டுப் பண்பாடுகளோடு ஒருங்கே விளங்கும் அதன் ஆற்றலே உணர்ந்து ஆராய்தல் வேண்டும். அங்கெல்லாம், தமிழ் நாட்டில் இருப்பது போலவே அது விளங்கும் என்று எதிர் பார்த்தல் கூடாது. இடத்திற்கு ஏற்ப, எத்தனேயோ மாறுதல்களேப் பெற்று, அப் பண்பாடு விளங்கும் என்றே எதிர் பார்க்க வேண்டும்.

## தமிழன்

குண்டு சட்டியில் குதிரை ஓட்டியவனல்லன் தமிழன். உலகம் முழுவதும் உலவி உழன்று வாழ்ந்து வந்தவன் அவன். " திரைகடலோடியும் திரவியம் தேடு " என்று இன்னமும் நம் தமிழ்க் குழவி, அந்த பண்பாட்டின் பயனே நெட்டுருப் போடுகிறது. இன்றும், இலங்கையிலும் மலேயாவிலும் ஆப்பிரிக்காவிலும் பிஜியிலும் அவனேக் காணலாம். ஆனல், இன்ரே, பட்டினிக்கு அஞ்சித் தாய்நாட்டை விட்டோடி வயிறு வளர்க்கவரும் இவனே அந்த நாட்டினர்களெல்லாம் பயன்படுத்திக் கொண்டு ' கூலி ,

யென வெருட்டி ஓட்டுகின்றனர். இந்தக் கொடுமை யைக் கண்டு மனம் புழுங்குகின்ருேம். அன்ருே, பண்பாட்டின் முன்னணியாய்க் கப்பல் ஓட்டி உலவிக் கொடுத்தும் கொண்டும் உலகினைச் சீர்திருத்தி, இன்றும் நம்மனமெல்லாம் மகிழ அன்று எல்லோரும் வரவேற்க வாழ்ந்தான். எகிப்து நாட்டுப் பட்டைக் கோபுரங்களின் முதுகெலும்பாய் நின்ற தேக்கு மரம், தமிழ் நாட்டு மேலைக் கடற்கரையிலிருந்தே சென் றிருத்தல் வேண்டும். கிழக்கில் பசிபிக் கடலிலும், அதுவரையுள்ள தீவுகளிலும், இவன் வழிபட்ட திரு மேனிகளை இன்று அகழ்ந்தெடுக்கின்றனர். 'காழகத் தீட்டமும்' எனக்கீழைத் தீவுகளினின்றும் பொருள் கள், காவிரிப்பூம் பட்டினத்துக்கு வந்ததைப் பட்டினப் பாலை பாடுகிறது, இராசேந்திரன், கடாரம் வரை கப்பற்படை கொண்டு சென்று வென்றது கல்லும் பேசும் ஓர் அரிய கதை. 'கடாரம் கொண்டான்' என்ற ஊரும் அவ்வாறு அவன்கொண்ட வெற்றியை இன்றும் பாடி நிற்கவில்லையா?

ஆனல், இவை பழங்கதையாய், கனவாய்ப் போயுள்ளன. கீழைத்தீவு வரலாற்றினை நம்மை விட மேல்நாட்டாரே நன்காராய்ந்து வருகின்றனர், அவ்வரலாற்றைத் தமிழல்லாத இந்தியப்பகுதியினர் பின்னே ஆராயத் தொடங்கியுள்ளனர். ஓரிருவரை விட்டால் இதனை ஆராய்கின்ற தமிழன் இல்லை யென்றே கூறும் நிலைமைக்கு வந்துள்ளோம். இந்திய நாட்டின் பலபகுதிகளிலிருந்தும் இந்த ஆராய்ச்சியில் புகுவோர், தங்கள் தங்கள் பிறப்பிடமே கிழக்கிந்தியப் பண்பாட்டின் பிறப்பிடமென முடிவு செய்யும் வியப்பினைக் காண்கிருேம். இந்திய நாட்டின்

பலபகுதிகளும் இந்தப் பண்பாட்டுக் குடியேற்றத்தில் ஈடுபட்டன என்ற உண்மை இதனுல் நன்கு விளங்கும். ஒரு நாட்டின் அடையாளங்களை மற்ெருரு நாட்டார் தமக்கே உரிய சிறப்படையாளங்கள் என்று கூறவரும்போதே சிக்கல்கள் எழுகின்றன. ஆனுல், அவர்கள் வேண்டுமென்றே இப்படிக் கூறுகின்ருர் கள் என்பதற்கில்லை. ஒருவன் தானறிந்த நாட்டின் வழியேயன்ருே? எல்லாவற்றையும் காண முயல்வான், இங்கே ஐயந்திரிபுக்கு இடமின்றித் தமிழ் நாட்டு அறிகுறிகளெனச் சுட்டிக்காட்டக் கூடியவற்றைத் தமிழன் நடுவு நிலைமையாக இருந்து ஆராய்தல் வேண்டும். அத்தகைய அடையாள மொன்றினை விளக்குவதே இந்தக் கட்டுரையின் நோக்கம்.

## உண்மையே கடவுள்

அங்கே, மேலும் பல குறிப்புக்களைக் காணலாம் என்று இந்த ஆராய்ச்சி தமிழன் உள்ளத்தே ஒரு புதிய ஊக்கத்தை விளைவிக்கும் என்று நாம் எதிர் பார்ப்பது இயல்பே. ஆம்; தமிழ் நாட்டினுள்ளேயே தமிழ்ப் பெருமை பாடுவது, நம் காலிலேயே நாம் விழுந்து கும்பிடுவதுபோலாம். பிறநாடு அறியத் தன் பெருமையை விளக்குதலே தமிழன் கடமை. தமிழ்ப் பண்பாடு பரவியதன் வரலாற்றினை அறிந்து உல கினுக்குப் பறைசாற்றுவதும் தமிழன் கடமையாகும். இங்கே, இனவெறியால் இந்தக் கடமையை மேற் கொள்ள வேண்டும் என்று கொள்ளுதலாகாது. உண்மையைக் கடவுள் எனக்கொண்டு அறிவுமலர் தூவி வழிபடுவது ஒன்றே ஆராய்ச்சியாகும். குறை ஏன்று கண்டால் மறைத்துவிடும் வழக்கம் அரசியல்

சூழ்ச்சியாகலாம்; அறிஞன் ஆராய்ச்சியாகாது. "தன் நெஞ்சறிவது பொய்யற்க" என்று வள்ளுவர் கூற வில்லையா? இப்போது முடிந்த முடிபெனக்காண்பது பின்னர்ப் பொய்யாய்ப் போகலாம். இன்று குறை என்று தோன்றுவது மேலும் பல விளக்கங்கள் தோன்றும் போது குறைவிலா நிறைவாகலாம். அவ்வாறு பின் விளக்கம் வேண்டுமானால், இன்று நாம் உணர்ந்ததனை உணர்ந்தபடி கூறிமுடிக்கும் உண்மைத்துணிவு வேண்டும். ஆராய்ச்சி என்பது முடிவிலாது கடவுள்போல வளர்ந்து ஒளிர்வது ஒன்று.

## மொழிகளை அறிதல்

உண்மைக்கு என்று அனைத்தையும் பலிதரும் இந்த அறிவுப் பண்பாட்டைப் பெறுவதோடு, நாம் நம்மை வேறுவகையிலும் பண்படுத்திக் கொள்ளவும் வேண்டும். கீழைக் கடல் தீவுகளில் வழங்கும் மலேயோ முதலிய மொழிகளைக் கற்கும் ஊக்கம் எழுதல் வேண்டும். அப்போது தானே அங்குள்ள வற்றை ஆராயமுடியும். அம்மொழிகளில் தமிழ் புகுந்துள்ள புதுமையையும் அப்போது மட்டுமே காணலாம். இவ்வாறு கூறும்போது தமிழர் அனை வரும் அவற்றைக் கற்கவேண்டும் என்பது இல்லை. தமிழில் எழுதவும் அறியாதார் பலருள்ள நிலையில் எந்த வெறியனும் அவ்வாறு கூறத் துணியான். இத் தகைய ஆராய்ச்சியில் புகுகின்றவர்கள் மட்டுமே, தம் ஆராய்ச்சிக்கு வேண்டிய மொழிகளைக் கற்கவேண்டும் என்பதனையே வற்புறுத்தல் வேண்டும்.

தமிழன்றி வேறு ஒரு மொழியும் படிக்கமுடியாது என்ற எண்ணம் பரவி வருவதனைப் பல்கலைக் கழகங்

க்ள் தடுத்திடவேண்டும். இதற்கு நேரேபோய்த் தட்டிப் பேசிப் பயன் இல்லை. மேனுடுகளில் சில இடங்களில் பிரஞ்சு செர்மன் தெரியாதவரை ஆராய்ச் சிக்கு எடுத்துக்கொள்வதில்லை. ஆராய்ச்சிக்கு அடிப் படையான மொழிகளை அறியாமல், மொழி பெயர்ப்பு நூல்களை மட்டுமே கொண்டு என்ன ஆராய்ச்சி செய்வது ? கீழைக்கடல் நாகரிகத்தை டச்சுப் பேரறிஞர்களும், பிரஞ்சுப் பேரறிஞர்களும் பல ஆண்டுகளாக ஆராய்ந்து வருகிருர்கள். தாம் கண்ட முடிவுகளைத் தத்தம் மொழியில் எழுதி வைத் துள்ளார்கள். எனவே, இந்த மொழிகளும் இத்தகைய ஆராய்ச்சிக்கு இன்றியமையாது வேண்டப்படும்.

எனவே, இத்தகைய மொழிகளைக் கட்டாயமாகக் கற்பியாமல், விரும்பியவர்கள் எளிதில் கற்கக்கூடிய வாய்ப்பினை ஒவ்வொரு பல்கலைக் கழகமும் ஏற்படுத்த வேண்டும். அப்போதுதானே, பல்கலைக் கழகம் என் பதன் உண்மைப் பொருள் விளங்கும். சூழ்நிலையே மனிதனை உருவாக்குகிறது என்ற உண்மையை நாம் மறந்து விடுதல் கூடாது. இவற்றை எல்லாம் மனத் தில் கொண்டு, இந்த நூலாசிரியர், மலேயா அமைச்சர் திருசம்பந்தம், அவர்கள் அண்ணுமலைப் பல்கலைக் கழகத்திற்கு வந்திருந்தபோது, மலேயா மொழிக் கென ஒருநிறுவனத்தினை, அவர்கற்ற அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் அவருடைய மலேயா நாடு நிலை நாட்ட வேண்டும் என்று வேண்டிக்கொண்டார். இவ்வாறு மொழிகளை க்கற்பதால், நம்முடைய மாண வர்கள் எதிர்காலத்தில் நம் நாட்டின் தூதுவராக அவ்வம்மொழி பேசும் நாடுகளுக்குச் சென்று, தொண்

டாற்றவும் முடியும். விடுதலை பெற்ற இந்தியாவில் இத்தகைய தகுதி பெற்ற தமிழர் பலர் வேண்டாவா ?

### நேர்காணல்

பின்னர் அந்நாடுகளில் நேரே சென்று சிற்பங்கள், கல்வெட்டுக்கள், கோயில்கள், நூல்கள் முதலியவற்றை ஆராய, நம் நாடும், ஆராய்ச்சி மாணவர்களுக்கு வேண்டிய வாய்ப்புக்களை ஏற்படுத்த வேண்டும். அந்தந்த நாட்டினரின் துணையைத் தனி மக்கள் பெறுவதனைவிட, நம் துரைத்தனம் பெறுவது எளிது. இத்தகைய வாய்ப்பினைப் பிற நாடுகளும், பிற நாடுகளில் உள்ள அறநிலையங்களும் செய்து தருகின்றன. கீழைக்கடல் நாகரிகத்தை, அமெரிக்கப் பல்கலைக் கழகங்கள் சிறப்புப் பாடமாக அமைக்கும்போது, நம் பல்கலைக்கழகங்கள் ஏன் அமைத்தலாகாது ?

இந்தத் துறைகளில் எல்லாம் தமிழ், ஆராய்ச்சி மாணவன், உழைத்து முன்வந்து, உலகிற்கு உண்மையை எடுத்துக் காட்டி உயர்வானாக.

### அங்குப்போவோர்

இத்தகைய ஆராய்ச்சி எங்குப் போய் முடியும் ? சையாம் பார்ப்பனர் கம்போடியாவில் உள்ள பார்ப்பனரோடு தொடர்புடையவரோ ? இன்னும் என்ன என்ன தமிழ்ப் பண்பாட்டுக் குறிகள் கீழைக்கடல் நாடுகளில் உள்ளன ? என்ன என்ன தமிழ்ப் பாடல்கள் அங்குப் புகுந்தன? இப்படி எத்தனை எத்தனையோ கேள்விகளை நம் மனம் எழுப்புகிறது. தமிழன் இதற்கு விடை காண வேண்டாவா ?

கீழைக்கடல் நாடுகளுக்குப் போவார் ஓய்வு கிடைக்கும்போது இந்த ஆராய்ச்சியில் ஈடுபட வேண்டும். இந்தக் கட்டுரை அவ்வாறு செய்யத் தூண்டும் என்று நம்பலாம். எனது நண்பர் தவத்திரு. தனிநாயக அடிகளார் கீழைக்கடல் நாடுகளுக்குச் சென்றபோது இதனை அவரிடம் கூறினேன். பாங்காக்குப் போனவர் அங்குப் பாடிய திருவெம்பாவைப் பாட்டு என்ன என்று கண்டறிந்து வந்தனர். திருவெம்பாவையில் முதலிரண்டு பாடல்களே முன் காலத்துப் பாடப் பெற்றன என்று கூறினர். அவ்வாறே திருப்பாவையிலும் முதலிரண்டு பாடலையே முன்னெல்லாம் பாடினர்கள் போலும்.

## முதலிரண்டு பாடல்

இத்தகைய நூல்களை விரைவில் ஓதுவார், முதற் பாடலையும் கடைப் பாடலையும் ஓதுவதனை நம்முடைய கோயில்களில் இன்றும் காண்கிறோம். அவ்வாறு சையாமில் பாடாமையை இங்குக் குறிப்பிடல் வேண்டும். வரிசையாகத் தொடங்கியதில் முதல் இரண்டே எஞ்சின. ஆகவே, முன்காலத்தில் திருவெம்பாவை திருப்பாவை முழுவதையுமே அம்மக்கள் ஓதினர்கள் எனலாம்.

அதுவும் மார்கழி மாதத்தில் – அதுவும் விடியற் காலையில் – ஆம் சிவனர், ஊஞ்சல் திருவிழாவுக்கு, முதலில் வருவது விடியற்காலையில் அல்லவா?-அதற்கும் முன்னரே அரசகுரு எழுந்து சிவன் கோயில் வழிபாட்டை முடித்திருக்க வேண்டும். நாம் இந்தக் கட்டுரையை எழுதத் தூண்டிய பாடலும் அங்கே முழங்கி இருக்கும்.

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள்தடங்கண்
மாதே வளருதியோ ? வன்செவியோ நின்செவிதான் ?
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டு இங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னே என்னே
ஈதே எந்தோழி பரிசு ஏலோர் எம்பாவாய். (1)

பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல்நாம்
பேசும்போ தெப்போது இப் போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசீ இவையுஞ்சிலவோ ? விளையாடி
ஏசும் இடமீதோ ? விண்ணோர்கள் ஏத்துதற்குக்
கூசும் மலர்ப்பாதந் தந்தருள வந்தருளும்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்துள்
ஈசனார்க் கன்பார் ? யாம் ஆர் ஏலோர் எம்பாவாய் (2)

## பிற் சேர்க்கை I

# திருவெம்பாவை

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள்தடங்கண்
மாதே ! வளருதியோ ? வன்செவியோ நின்செவிதான் ?
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டுஇங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் ; என்னே ! என்னே !
ஈதே எந்தோழி பரிசு ஏலோர் எம்பாவாய் ! 1

பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல்நாம்
பேசும்போ தெப்போதுஇப் போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ ? நேரிழையாய் ! நேரிழையீர் !
சீசீ ! இவையுஞ் சிலவோ ? விளையாடி
ஏசும் இடமீதோ ? விண்ணோர்கள் ஏத்துதற்குக்
கூசும் மலர்ப்பாதந் தந்தருள வந்தருளும்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்துள்
ஈசனார்க் கன்பார் ! யாம் ஆர் ஏலோர் எம்பாவாய் ! 2

முத்தன்ன வெள்நகையாய் ! முன்வந் தெதிர்எழுந்தென்
அத்தன் ஆனந்தன் அமுதன்என் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய் !
பத்துடையீர் ! ஈசன் பழவடியீர் ! பாங்குடையீர் !
புத்தடியோம் புன்மைதீர்த்து ஆட்கொண்டாற் பொல்லாதோ ?
எத்தோ? நின் அன்புடைமை எல்லோம் அறியோமோ?
சித்தம் அழகியார் பாடாரோ நஞ்சிவனை ?
இத்தனையும் வேண்டும் எமக்கு ஏலோர் எம்பாவாய் ! 3

ஒண்ணித் திலநகையாய் ! இன்னம் புலர்ந்தின்றோ ?
வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ ?
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோம் : அவ்வளவும்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே !
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உள்நெக்கு நின்றுருக யாம்மாட்டோம் நீயேவந்து
எண்ணிக் குறையில் துயில் ஏலோர் எம்பாவாய் ! 4

மாலறியா நான்முகனும் காணா மலையினை " நாம்
போலறிவோம் "என்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ ! கடைதிறவாய் ;
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மைஆட் கொண்டருளிக் கோதாட்டுஞ்
சீலமும் பாடிச் " சிவனே ! சிவனே !" என்று
ஓலம் இடினும் உணராய் உணராய்காண்
ஏலக் குழலி பரிசு ஏலோர் எம்பாவாய் ! 5

மானே ! நீ நென்னலை " நாளைவந் துங்களை
நானே எழுப்புவன் " என்றலும் நாணாமே
போன திசைபகராய் ; இன்னம் புலர்ந்தின்றோ ?
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய் !
ஊனே உருகாய் உனக்கே உறும் ; எமக்கும்
ஏனோர்க்கும் தங்கோனைப் பாடு ஏலோர் எம்பாவாய் ! 6.

அன்னே ! இவையுஞ் சிலவோ ? பலஅமரர்
உன்னற் கரியான் ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் " சிவன் " என்றே வாய்திறப்பாய் ;
" தென்னா "என் னாமுன்னம் தீசேர் மெழுகொப்பாய் ;
"என்னானை என் அரையன் இன்னமுது"என்றெல்லோமுஞ்
சொன்னோங்கேள் வெவ்வேறாய் ; இன்னந் துயிலுதியோ ?
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசு ஏலோர் எம்பாவாய் ! 7

கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கும் ;
ஏழில் இயம்ப இயம்பும்வெண் சங்கெங்கும் ;
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோம் ; கேட்டிலையோ ?
வாழி ! ஈ தென்ன உறக்கமோ ? வாய்திறவாய்!
ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ ?
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழைபங் காளனையே பாடு ஏலோர் எம்பாவாய் ! 8

முன்னைப் பழம்பொருட்கு முன்னைப்பழம் பொருளே !
பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும்அப் பெற்றியனே !
உன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம் ; ஆங்கவர்க்கே பாங்காவோம் ;
அன்னவரே எம்கணவர் ஆவார் ; அவர்உகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம் ;
இன்ன வகையே எமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையும் இலோம் ஏலோர் எம்பாவாய் ! 9

பாதாளம் ஏழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்!
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள்முடிவே !
பேதை ஒருபால் ; திருமேனி ஒன்றல்லன் ;
வேதமுதல் ; விண்ணோரும் மண்ணும் துதித்தாலும்
ஓத உலவா ஒருதோழன் தொண்டர்உளன் ;
கோதில் குலத்தரன்றன் கோயிற்பிணாப் பிள்ளைகாள் !
ஏதவன்ஊர் ? ஏதவன்பேர் ? ஆர்உற்றார் ? ஆர் அயலார் ?
ஏதவனைப் பாடும் பரிசு ஏலோர் எம்பாவாய் ! 10

மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா ! வழி அடியோம் வாழ்ந்தோம்காண் ! ஆரழல்போற்
செய்யா ! வெண் ணீருடி ! செல்வா ! சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா !
ஐயா !நீ ஆட்கொண் டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம் ;
எய்யாமற் காப்பாய் எமை ஏலோர் எம்பாவாய்! 11

ஆர்த்த பிறவித் துயர்கெடநாம் ஆர்த்தாடும்
தீர்த்தன் ; நற் றில்லைச்சிற் றம்பலத்தே தீயாடும்
கூத்தன் ; இவ் வானுங் குவலயமும் எல்லோமும்
காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளை சிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவஞ் செய்ய அணிகுழல்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனைநீர் ஆடு ஏலோர் எம்பாவாய் ! 12

பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்
அங்கங் குருகினத்தால் பின்னும் அரவத்தால்
தங்கண் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவில் புகப்பாய்ந்து பாய்ந்துநஞ்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடு ஏலோர் எம்பாவாய் ! 13

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருள்ஆ மாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி அந்தம்ஆ மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடு ஏலோர் எம்பாவாய் ! 14

ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் ; சித்தங் களிகூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் ; விண்ணோரைத் தான்பணியாள் ;
பேரரையற் கிங்ஙனே பித்தொருவர் ஆமாறும்
ஆரொருவர் ? இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தான்

வாருருவப் பூண்முலையீர்! வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல்பாய்ந்து ஆடுஏலோர் எம்பாவாய்! 15

முன்னிக் கடலைச் சுருக்கி எழுந்துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்துஎம் பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ் சிலம்பில் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள்நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழை ஏலோர் எம்பாவாய்! 16

செங்கணவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கும் இலாததோர் இன்பம்நம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி! நம்தம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதந் தந்தருளும் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட்கு ஆரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல்பாய்ந்து ஆடு ஏலோர் எம்பாவாய்! 17

அண்ணாமலையான் அடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீ றற்றாற்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாமகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிக்
கண்ணார் அமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணே! இப் பூம்புனல்பாய்ந்து ஆடு ஏலோர்
எம்பாவாய்! 18

"உங்கையில் பிள்ளை உனக்கே அடைக்கலம்" என்று
அங்கப் பழஞ்சொற் புதுக்கும்எம் அச்சத்தால்
எங்கள் பெருமான்! உனக்கொன் றுரைப்போம்கேள் :
எங்கொங்கை நின் அன்பர் அல்லார்தோள் சேரற்க;

எங்கை உனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க;
கங்குல் பகல்எங்கண் மற்ருென்றுங் காணற்க;
இங்கிப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயிறு எமக்கு? ஏலோர்
எம்பாவாய்! 19

போற்றி! அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமாம் செந்தளிர்கள்
போற்றி!எல் லாவுயிர்க்குந்தோற்றமாம் பொற்பாதம்
போற்றிஎல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றி!எல் லாவுயிர்க்கும் ஈறும் இணையடிகள்
போற்றிமால் நான்முகனுங் காணுத புண்டரிகம்
போற்றி! யாம் உய்யஆட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழி நீர் ஆடு ஏலோர் எம்பாவாய்! 20

———

# பிற் சேர்க்கை II

# திருப்பாவை

1. மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால்
நீராடப் போதுவீர் போதுமினோ நேர்இழையீர் !
சீர்மல்கும் ஆய்ப்பாடிச் செல்வச் சிறுமீர்காள் !
கூர்வேல் கொடுந்தொழிலன் நந்தகோபன் குமரன்
ஏர் ஆர்ந்த கண்ணி யசோதை இளஞ்சிங்கம்
கார்மேனிச் செங்கண் கதிர்மதியம் போல் முகத்தான்
நாரா யணனே நமக்கே பறைதருவான்
பாரோர் புகழப் படிந்துஏல்ஓர் எம்பாவாய்.

2. வையத்து வாழ்வீர்காள் நாமும்நம் பாவைக்குச்
செய்யும் கிரிசைகள் கேளீரோ பாற்கடலுள்
பையத் துயின்ற பரமன் அடிபாடி
நெய்உண்ணோம் பால்உண்ணோம் நாள்காலே நீர்ஆடி
மைஇட்(டு) எழுதோம் மலர்இட்டு நாம் முடியோம்
செய்யா தனசெய்யோம் தீக்குறளை சென்று ஓதோம்
ஐயமும் பிச்சையும் ஆம்தனையும் கைகாட்டி
உய்யுமா(று) எண்ணி உகந்துஏல்ஓர் எம்பாவாய்.

3. ஓங்கி உலகு அளந்த உத்தமன் பேர்பாடி
நாங்கள்நம் பாவைக்குச் சாற்றிநீர் ஆடினால்
தீங்குஇன்றி நாடுஎல்லாம் திங்கள்மும் மாரிபெய்(து)
ஓங்கு பெருஞ்செந்நெல் ஊடு கயல்உகளப்
பூங்குவளைப் போதில் பொறிவண்டு கண்படுப்பத்
தேங்காதே புக்குஇருந்து சீர்த்த முலைபற்றி
வாங்கக் குடம்நிறைக்கும் வள்ளல் பெரும் பசுக்கள்
நீங்காதசெல்வம் நிறைந்துஏல்ஓர் எம்பாவாய்.

4. ஆழி மழைக்கண்ணா ! ஒன்றுநீ கைகரவேல்
ஆழியுள் புக்கு முகந்துகொடு ஆர்த்துஏறி

ஊழி முதல்வன் உருவம்போல் மெய்கறுத்துப்
பாழிஅம் தோள்உடைப் பற்பநா பன்கையில்
ஆழிபோல் மின்னி வலம்புரிபோல் நின்று அதிர்ந்து
தாழாதே சார்ங்கம் உதைத்த சரமழைபோல்
வாழ உலகினில் பெய்திடாய் நாங்களும்
மார்கழி நீராட மகிழ்ந்துஏல்ஓர் எம்பாவாய்.

5. மாயனை மன்னு வடமதுரை மைந்தனைத்
தூய பெருநீர் யமுனைத் துறைவனை
ஆயர் குலத்தினில் தோன்றும் மணிவிளக்கை
தாயைக் குடல்விளக்கம் செய்த தாமோதரனைத்
தூயோமாய் வந்துநாம் தூமலர் தூவித்தொழுது
வாயினால் பாடி மனத்தினால் சிந்திக்கப்
போய பிழையும் புகுதருவான் நின்றனவும்
தீயினில் தூசுஆகும் செப்புஏல்ஓர் எம்பாவாய்.

6. புள்ளும் சிலம்பின காண் புள்அரையன் கோயில்
வெள்ளை விளிசங்கின்பேர் அரவம் கேட்டிலையோ
பிள்ளாய்! எழுந்திராய் பேய்முலை நஞ்சுஉண்டு
கள்ளச் சகடம் கலக்கழியக் கால்ஓச்சி
வெள்ளத்(து) அரவில் துயில்அமர்ந்த வித்தினை
உள்ளத்துக் கொண்டு முனிவர்களும் யோகிகளும்
மெள்ள எழுந்து அரிஎன்ற பேர் அரவம்
உள்ளம் புகுந்து குளிர்ந்துஏல்ஓர் எம்பாவாய்.

7. கீசுகீசுஎன்(று) எங்கும் ஆனைச்சாத் தன்கலந்து
பேசின பேச்சுஅரவம் கேட்டிலையோ பேய்ப்
பெண்ணே!
காசும் பிறப்பும் கலகலப்பக் கைபேர்த்து
வாச நறுங்குழல் ஆய்ச்சியர் மத்தினால்
ஓசை படுத்த தயிர் அரவம் கேட்டிலையோ
நாயகப் பெண்பிள்ளாய்! நாரா யணன்மூர்த்தி
கேசவனைப் பாடவும்நீ கேட்டே கிடத்தியோ
தேசம் உடையாய் திறஏல்ஓர் எம்பாவாய்.

8. கீழ்வானம் வெள்ளென்று எருமை சிறுவீடு
மேய்வான் பரந்தனகாண் மிக்குள்ள பிள்ளைகளும்
போவான்போ கின்றாரைப் போகாமல் காத்து உன்னைக்
கூவுவான் வந்துநின்றோம் கோது கலம்உடைய
பாவாய்! எழுந்திராய் பாடிப் பறைகொண்டு
மாவாய் பிளந்தானை மல்லரை மாட்டிய
தேவாதி தேவனைச் சென்றுநாம் சேவித்தால்
ஆஆஎன்(று) ஆராய்ந்(து) அருள்ஏல்ஓர் எம்பாவாய்.

9. தூமணி மாடத்துச் சுற்றும் விளக்குஎரியத்
தூபம் கமழத் துயில்அணைமேல் கண்வளரும்
மாமன் மகளே! மணிக்கதவம் தாள்திறவாய்
மாமீர்! அவளை எழுப்பீரோ உன்மகள்தான்
ஊமையோ? அன்றிச் செவிடோ? அனந்தலோ?
ஏமப் பெருந்துயில் மந்திரப் பட்டாளோ?
மாமாயன் மாதவன் வைகுந்தன் என்று என்று
நாமம் பலவும் நவின்றுஏல்ஓர் எம்பாவாய்.

10. நோற்றுச் சுவர்க்கம் புகுகின்ற அம்மனாய்!
மாற்றமும் தாராரோ? வாசல் திறவாதார்.
நாற்றத் துழாய்முடி நாரா யணன்நம்மால்
போற்றப் பறைதரும் புண்ணியனால், பண்டுஒருநாள்
கூற்றத்தின் வாய்வீழ்ந்த கும்ப கரணனும்
தோற்றும் உனக்கே பெருந்துயில்தான் தந்தானோ?
ஆற்ற அனந்தல் உடையாய் அருங்கலமே!
தேற்றமாய் வந்து திறஏல்ஓர் எம்பாவாய்.

11. கற்றுக் கறவைக் கணங்கள் பலகறந்து
செற்றார் திறல்அழியச் சென்று செருச்செய்யும்
குற்றம்ஒன்(று) இல்லாத கோவலர்தம் பொற்கொடியே!
புற்றுஅர(வு) அல்குல் புனமயிலே! போதராய்
சுற்றத்துத் தோழிமார் எல்லாரும் வந்துநின்
முற்றம் புகுந்து முகில்வண்ணன் பேர்பாடச்
சிற்றாதே பேசாதே செல்வப்பெண் டாட்டிநீ
எற்றுக்(கு) உறங்கும் பொருள்ஏல்ஓர் எம்பாவாய்.

12. கனைத்துஇளங் கற்றுஎருமை கன்றுக்(கு) இரங்கி
நினைத்து முலைவழியே நின்று பால்சோர
நனைத்துஇல்லம் சேறுஆச்கும் நற்செல்வன் தங்காய் !
பனித்தலை வீழநின் வாசல் கடைபற்றிச்
சினத்தினால் தென் இலங்கைக் கோமானைச் செற்ற
மனத்துக்(கு) இனியானைப் பாடவும்நீ வாய்திறவாய்
இனித்தான் எழுந்திராய்! ஈதுஎன்ன பேர்உறக்கம்
அனைத்துஇல்லத் தாரும் அறிந்துஏல்ஓர் எம்பாவாய்.

13. புள்ளின்வாய் கீண்டானைப் பொல்லா அரக்கனைக்
கிள்ளிக் களைந்தானைக் கீர்த்திமை பாடிப்போய்ப்
பிள்ளைகள் எல்லோரும் பாவைக் களம்புக்கார் !
வெள்ளி எழுந்து வியாழம் உறங்கிற்று !
புள்ளும் சிலம்பினகாண் போதுஅரிக் கண்ணினாய்
குள்ளக் குளிரக் குடைந்துநீர் ஆடாதே
பள்ளிக் கிடத்தியோ ? பாவாய் ! நீ நல்நாளால்
கள்ளம் தவிர்ந்து கலந்துஏல்ஓர் எம்பாவாய்.

14. உங்கள் புழக்கடைத் தோட்டத்து வாவியுள்
செங்கழுநீர் வாய்நெகிழ்ந்து ஆம்பல்வாய்
கூம்பினகாண்.
செங்கல் பொடிக்கூறை வெண்பல் தவத்தவர்
தங்கள் திருக்கோயில் சங்கிடுவான் போதந்தார்.
எங்களை முன்னம் எழுப்புவான் வாய்பேசும்
நங்காய் ! எழுந்திராய் நாணாதாய் ! நாஉடையாய் !
சங்கொடு சக்கரம் ஏந்தும் தடக்கையன்
பங்கயக் கண்ணானைப் பாடுஏல்ஓர் எம்பவாய்.

15. எல்லே ! இளங்கிளியே ! இன்னம் உறங்குதியோ !
சில்என்(று) அழையேன்மின் ! நங்கைமீர்
போதருகின்றேன் !
வல்லைஉன் கட்டுரைகள் பண்டேஉன் வாய்அறிதும்.
வல்லீர்கள் நீங்களே நானேதான் ஆயிடுக.
ஒல்லைநீ போதாய் உனக்குஎன்ன வேறுஉடையை
எல்லாரும் போந்தாரோ? போந்தார்போந்து
எண்ணிக்கொள்

வல்ஆனை கொன்றானை மாற்றானை மாற்று அழிக்க
வல்லானை மாயனைப் பாடுஏல்ஓர் எம்பாவாய்.

16. நாயகனாய் நின்ற நந்தகோ பனுடைய
கோயில் காப்பானே ! கொடித்தோன் றும் தோரண
வாயில் காப்பானே ! மணிக்கதவம் தாள்திறவாய் !
ஆயர் சிறுமிய ரோமுக்கு அறைபறை
மாயன் மணிவண்ணன் நென்னலே வாய்நேர்ந்தான்;
தூயோமாய் வந்தோம் துயில்எழப் பாடுவான்
வாயால்முன் னம்முன்னம் மாற்றாதே அம்மாநீ
நேய நிலைக்கதவம் நீக்குஏல்ஓர் எம்பாவாய்.

17. அம்பரமே தண்ணீரே சோறே அறம்செய்யும்
எம்பெருமான் ! நந்த கோபாலா எழுந்திராய்
கொம்புஅனார்க்(கு) எல்லாம் கொழுந்தே ! குலவிளக்கே
எம்பெரு மாட்டி யசோதாய் ! அறிவுறாய்
அம்பரம் ஊடுஅறுத்(து) ஓங்கி உலகுஅளந்த
உம்பர் கோமானே ! உறங்கா(து) எழுந்திராய் !
செம்பொன் கழல்அடிச் செல்வா ! பலதேவா !
உம்பியும் நீயும் உறங்குஏல்ஓர் எம்பாவாய்.

18. உந்து மதகளிற்றன் ஓடாத தோள்வலியன்
நந்த கோபாலன் மருமகளே ! நப்பின்னாய் !
கந்தம் கமழும் குழலீ ! கடை திறவாய்
வந்துஎங்கும் கோழி அழைத்தன காண் ! மாதவிப்
பந்தல்மேல் பல்கால் குயில்இனங்கள் கூவினகாண்
பந்துஆர் விரலி ! உன் மைத்துனன் பேர்பாடச்
செந்தா மரைக்கையால் சீர்ஆர் வளைஒலிப்ப
வந்து திறவாய் மகிழ்ந்துஏல்ஓர் எம்பாவாய்.

19. குத்து விளக்குஎரியக் கோட்டுக்கால் கட்டில்மேல்
மெத்தென்ற பஞ்ச சயனத்தின்மேல்ஏறிக்
கொத்துஅலர் பூங்குழல் நப்பின்னை கொங்கைமேல்
வைத்துக் கிடந்த மலர்மார்பா ! வாய்திறவாய் !
மைத்தடங் கண்ணினாய் ! நீஉன் மணாளனை
எத்தனை போதும் துயில்எழ ஒட்டாய்காண் !

எத்தனை யேனும் பிரிவுஆற்ற கில்லாயால்
தத்துவம் அன்று தகவுஏல்ஓர் எம்பாவாய்.

20. முப்பத்து மூவர் அமரர்க்கு முன்சென்று
கப்பம் தவிர்க்கும் கலியே! துயில்எழாய்!
செப்பம் உடையாய்! திறல்உடையாய்! செற்றார்க்கு
வெப்பம் கொடுக்கும் விமலா! துயில்எழாய்!
செப்புஅன்ன மென்முலைச் செவ்வாய்ச் சிறுமருங்குல்
நப்பினை நங்காய்! திருவே துயில்எழாய்!
உக்கமும் தட்டுஒளியும் தந்துஉன் மணாளனை
இப்போதே எம்மைநீர் ஆட்டுஏல்ஓர் எம்பாவாய்.

21. ஏற்ற கலங்கள் எதிர்பொங்கிமீது அளிப்ப
மாற்றாதே பால்சொரியும் வள்ளல்பெரும் பசுக்கள்
ஆற்றப் படைத்தான் மகனே! அறிவுறாய்
ஊற்றம் உடையாய்! பெரியாய்! உலகினில்
தோற்றமாய் நின்ற சுடரே! துயில்எழாய்
மாற்றார் உனக்கு வலிதொலைந்துஉன் வாசல்கண்
ஆற்றாது வந்துஉன் அடிபணியு மாபோலே
போற்றியாம் வந்தோம் புகழ்ந்துஏல்ஓர் எம்பாவாய்.

22. அம்கண்மா ஞாலத்(து) அரசர் அபிமான
பங்கமாய் வந்துநின் பள்ளிக்கட் டில்கீழே
சங்கம் இருப்பார்போல் வந்து தலைப்பெய்தோம்.
கிங்கிணிவாய்ச் செய்த தாமரைப் பூப்போலே
செங்கண் சிறுச்சிறிதே எம்மேல் விழியாவோ?
திங்களும் ஆதித் தனும்எழுந் தால்போல்
அம்கண் இரண்டும்கொண்(டு) எங்கள்மேல் நோக்குதியேல்
எங்கள்மேல் சாபம் இழிந்துஏல்ஓர் எம்பாவாய்.

23. மாரி மலைமுழைஞ்சில் மன்னிக்கிடந்து உறங்கும்
சீரிய சிங்கம் அறிவுற்றுத் தீவிழித்து
வேரி மயிர்பொங்க எப்பாடும் பேர்ந்துஉதறி
மூரி நிமிர்ந்து முழங்கிப் புறப்பட்டுப்

போதருமா போலநீ பூவைப்பூ வண்ணு! உன்
கோயில்நின்(று) இங்ஙனே போந்து அருளிக்
கோப்புடைய
சீரிய சிங்கா சனத்துஇருந்து யாம்வந்த
காரியம் ஆராய்ந்(து) அருள்ஏல்ஓர் எம்பாவாய்.

24. அன்றுஇவ் வுலகம் அளந்தாய்! அடிபோற்றி
சென்று அங்குத் தென் இலங்கை செற்ருய்!
திறல்போற்றி
பொன்றச் சகடம் உதைத்தாய்! புகழ்போற்றி
கன்று குணிலா எறிந்தாய்! கழல்போற்றி
குன்று குடையா எடுத்தாய்! குணம்போற்றி
வென்று பகைகெடுக்கும் நின்கையில் வேல்போற்றி
என்றென்றுன் சேவகமே ஏந்திப் பறைகொள்வான்
இன்றுயாம் வந்தோம் இரங்குஏல்ஓர் எம்பாவாய்.

25. ஒருத்தி மகனுய்ப் பிறந்து ஓர்இரவில்
ஒருத்தி மகனுய் ஒளித்து வளரத்
தரிக்கிலா ளுகித்தான் தீங்கு நினைந்த
கருத்தைப் பிழைப்பித்துக் கஞ்சன் வயிற்றில்
நெருப்புஎன்ன நின்றநெடுமாலே! உன்னை
அருத்தித்து வந்தோம் பறைதருதியாகில்
திருத்தக்க செல்வமும் சேவகமும் யாம்பாடி
வருத்தமும் தீர்ந்து மகிழ்ந்துஏல்ஓர் எம்பாவாய்.

26. மாலே! மணிவண்ணு! மார்கழிநீர் ஆடுவான்
மேலையார் செய்வனகள் வேண்டுவன கேட்டியேல்
ஞாலத்தை எல்லாம் நடுங்க முரல்வன
பால்அன்ன வண்ணத்துஉன் பாஞ்சசன்னியமே
போல்வன சங்கங்கள் போய்ப்பா(டு) உடையனவே
சாலப் பெரும்பறையே பல்லாண்(டு) இசைப்பாரே
கோல விளக்கே கொடியே விதானமே
ஆலின் இலையாய்! அருள்ஏல்ஓர் எம்பாவாய்.

27. கூடாரை வெல்லும்சீர்க் கோவிந்தா உன்தன்னைப்
பாடிப் பறைகொண்டு யாம்பெறு சம்மானம்

நாடு புகழும் பரிசினால் நன்றாகச்
சூடகமே தோள்வளையே தோடே செவிப்பூவே
பாடகமே என்றனைய பல்கலனும் யாம்அணிவோம்
ஆடை உடுப்போம் அதன்பின்னே பால்சோறு
மூடநெய் பெய்து முழங்கை வழிவாரக்
கூடி இருந்து குளிர்ந்துஏல்ஓர் எம்பாவாய்.

28. கறவைகள் பின்சென்று கானம்சேர்ந்(து) உண்போம்
அறிவுஒன்றும் இல்லாத ஆய்க்குலத்(து) உன்தன்னைப்
பிறவி பெறுந்தனைப் புண்ணியம் யாம்உடையோம்
குறைஒன்றும் இல்லாத கோவிந்தா! உன்தன்னோ(டு)
உறவேல் நமக்கு இங்(கு) ஒழிக்க ஒழியாது
அறியாத பிள்ளைகளோம் அன்பினால் உன்தன்னைச்
சிறுபேர் அழைத்தனவும் சீறி அருளாதே
இறைவா! நீதாராய் பறைஏல்ஓர் எம்பாவாய்.

29. சிற்றஞ் சிறுகாலே வந்துஉன்னைச் சேவித்து உன்
பொன்தாமரை அடியே போற்றும் பொருள்கேளாய்!
பெற்றம்மேய்த்(து) உண்ணும்குலத்தில் பிறந்துநீ
குற்றேவல் எங்களைக் கொள்ளாமல் போகாது.
இற்றைப் பறைகொள்வான் அன்றுகாண் கோவிந்தா!
எற்றைக்கும் ஏழ்ஏழ் பிறவிக்கும் உன்தன்னோ(டு)
உற்றோமே ஆவோம் உனக்கேநாம் ஆள்செய்வோம்
மற்றை நம்காமங்கள் மாற்றுஏல்ஓர் எம்பாவாய்.

30. வங்கக் கடல்கடைந்த மாதவனைக் கேசவனைத்
திங்கள் திருமுகத்துச் சேயிழையார் சென்று இறைஞ்சி
அங்கப் பறைகொண்ட வாற்றை அணிபுதுவைப்
பைங்கமலத் தண்தெரியல் பட்டர்பிரான்கோதை சொன்ன
சங்கத் தமிழ்மாலை முப்பதும் தப்பாமே
இங்குஇப் பரிசுஉரைப்பார் ஈர்இரண்டு மால்வரைத்தோள்
திங்கள் திருமுகத்துச் செல்வத்திருமாலால்
எங்கும் திருவருள்பெற்(று) இன்புறுவர் எம்பாவாய்.